

# தோத்திர மாலை!

முதல் பதிப்பு



நூலாசிரியர்:
**திருமதி. ஞானப்பூங்கோதை சுப்பிரமணியன்**
திருவண்ணாமலை மாவட்டம்.

# தோத்திர மாலை!

முதல் பதிப்பு

வெளியீடு:

**குறிஞ்சி முத்தமிழ்ச் சங்கம் & கல்விக் கூடம்**

கொலராடோ, அமெரிக்கா.



நூலாசிரியர்:

**திருமதி. ஞானப்பூங்கோதை சுப்பிரமணியன்**

திருவண்ணாமலை மாவட்டம்.

# பொருளடக்கம்


| | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1. | நூலாசிரியர் பற்றி | – 03 |
| 2. | வாழ்த்துரை! | – 04 |
| 3. | முன்னுரை | – 05 |
| 4. | திருவள்ளுவர் | – 06–11 |
| 5. | திருமூலர் அருளிய திருமந்திரம் | – 12–26 |
| 6. | மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம் | – 27–42 |
| 7. | சுந்தரர் தேவாரம் | – 43–56 |
| 8. | திருநாவுக்கரசர் தேவாரம் | – 57–69 |
| 9. | திருஞான சம்பந்தர் அருளிய தேவாரம் | – 70–82 |
| 10. | அபிராமிபட்டர் அருளிய அபிராமி அந்தாதி | – 83–95 |
| 11. | இராமலிங்க அடிகளாரின் திருவருட்பா | – 96–107 |
| 12. | கம்பராமாயணம், அயோத்தியா காண்டம் | – 108–119 |
| 13. | பாரதியார் சிந்தனைகள் | – 120–129 |
| 14. | ஔவையார் அருளிய நல்வழி | – 130 |
| 15. | சேக்கிழார் அருளிய பெரிய புராணம் | – 131–133 |
| 16. | தாயுமானவர் பராபரக் கண்ணி | – 134 |
| 17. | வேல்மாறல் – வேலும் மயிலும் துணை | – 135–150 |



# நூலாசிரியர் பற்றி

| | | |
|---|---|---|
| பெயர் | : | திருமதி. ஞானப்பூங்கோதை சுப்பிரமணியன். |
| பிறந்த ஊர் | : | செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம். |
| பிறந்த நாள் | : | 23.12.1944 |
| பெற்றோர் | : | பேராசிரியர். திரு. வை.முருகேசன், அரசுமணி தம்பதியரின் மக்கள் அறுவரில் மூன்றாமவர். |
| தந்தையார் பற்றி | : | சிறந்த தமிழ் ஞானம் மிக்கவர். அவர் எழுதிய நூல்களைப் படிக்கும் போது அவருடைய கூர்த்த மெய்ஞ்ஞானமும் நுண்மாண் நுழைபுலமும் உள்ளங்கை நெல்லிக்கனியென விளங்கும். |
| கணவர் | : | டாக்டர்.A.சுப்பிரமணியன், கண் மருத்துவர். இணை இயக்குநர், (ஓய்வு) கடலூர் அரசுமருத்துவ மனை. |
| கல்வித் தகுதி | : | B.Sc (வேதியியல்),<br>M.A. (தமிழ் இலக்கியம்)<br>M.A. (ஆங்கில இலக்கியம்.) ஆ.நுன. |
| படித்த கல்விக் கூடங்கள் | : | செய்யாறு அரசுப்பள்ளி, ஊரிசுக் கல்லூரி,வேலூர்., மகளிர் கிறித்துவக் கல்லூரி, சென்னை. மதுரை காமராஜ் மற்றும் அண்ணாமலைப் பல்கலைக் கழகம். |
| பணி அனுபவம் | : | அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் சற்றேறக்குறைய 30 ஆண்டுகள் இளநிலை மற்றும் முதுநிலை தமிழாசிரியர் பணி. அமெரிக்கா, கொலராடோ மாநிலத்தில் உள்ள குறிஞ்சி முத்தமிழ்ச் சங்கத்தில் கௌரவ ஆலோசகராக கடந்த 3 ஆண்டுகளாக பணியாற்றுகிறார். |
| பெற்ற விருது | : | 1996 இல் தினகரன் பத்திரிகை, கடலூர் மாவட்டத்தில் சிறந்த தமிழாசிரியர் விருது வழங்கிச் சிறப்பித்தது. |
| விருப்பப் பொழுதுபோக்கு | : | கற்றலும் கற்பித்தலும், தோட்டப் பராமரிப்பு, சித்திரத் தையல். |

# வாழ்த்துரை!

என் மரியாதைக்குரிய அன்பு தமிழ் ஆசிரியர் திருமதி. ஞானப்பூங்கோதை சுப்பிரமணியன் அவர்கள் எழுதிய "தோத்திர மாலை" என்ற இந்தத் தொகுப்பு, ஆன்மீக ஒளியைப் பரப்பும் ஒரு அரிய சேவையின் நிறைவு என்று நான் கருதுகிறேன்.

80 வயதிலும், தனிமையில் வாழ்ந்தாலும், "நான் பிரார்த்தனையிலும், நன்றியிலும், பக்தியிலும் இருக்கிறேன்" என்பதைப் பகிர வேண்டுமென்று எண்ணித் தொடங்கப்பட்ட இந்த முயற்சி, இப்போது பலருக்கும் வழிகாட்டும் ஒளியாக இந்தப் புத்தகமாக வெளிவருவது மிகுந்த மகிழ்ச்சி தருகிறது.

பாடல்களை வெறுமனே பகிராமல், அதன் பொருளையும் விளக்கிக் கொடுத்த ஆசிரியரின் ஈடுபாடும், அன்பும், பக்தியும் இந்தத் தொகுப்பின் ஒவ்வொரு பக்கத்திலும் வெளிப்படுகிறது.

இது, வெறும் புத்தகமல்ல; காலையிலிருந்து மனதிற்கு உற்சாகம் தரும் தோத்திர மாலை நம்பிக்கை, மன உறுதி, பக்தி ஆகியவற்றை வளர்க்கும் ஆன்மிகத் துணை 80 வயதிலும் இன்றும் தமிழ்ப் பணியாற்றும் இவர், எப்படி வாழ வேண்டும் என்பதற்கு ஒரு முன்மாதிரி. ஆசிரியரைப் போல உயர்ந்த உள்ளம் கொண்ட ஒருவரின் சீடராக இருக்கிறேன் என்பதில் எனக்கு ஒரு பெருமை.

இந்நூல் பலரின் உள்ளங்களிலும் நம்பிக்கையை, அமைதியை, பக்தியை விதைக்கட்டும். என் ஆசிரியர் திருமதி. ஞானப்பூங்கோதை சுப்பிரமணியன் அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றிகளும், இதயங்கனிந்த வாழ்த்துகளும்.

வாழ்க அவர் எழுத்து. வாழ்க அவர் சேவை.
வாழ்க வளமுடன்!

இங்கனம்,
**சுகுமாறன் மாரியப்பன்**
குறிஞ்சி முத்தமிழ்ச் சங்கம் & கல்விக்கூடம்
கொலராடோ, அமெரிக்கா

# முன்னுரை

80 வயதில் நான் தனியாக வசிப்பதனால், “நான் நலமாக இருக்கிறேன்” என்பதைத் தெரிவிக்கும் விதமாக என் நெருங்கிய உறவினர்களுக்கும், ஒரு சில நண்பர்களுக்கும் ஒவ்வொரு நாள் காலையும் “இனிய காலை வணக்கம்” பதிவிட முடிவு செய்தேன். ஆனால் வெறுமனே “இனிய காலை வணக்கம்” என்று எழுதுவதற்குப் பதிலாகத் தேவாரத் திருவாசகத் துதிப்பாடல் ஒன்றை எழுதிக் காலை வணக்கம் தெரிவிக்கலாம் என்று தோன்றியது. அப்படிச் செய்யும்போது எனக்கும் காலையில் எழுந்ததும் ஒரு தோத்திரப் பாடலோடு நாளைத் தொடங்கிய திருப்தி ஏற்பட்டது. நிச்சயமாக அது நாள் முழுவதற்கும் எனக்கு ஒரு மனோபலத்தைக் கொடுப்பதை நான் உணர முடிந்தது. தொடக்கத்தில் சில நாட்கள் பாடல் மட்டுமே எழுதி அனுப்பிக் கொண்டிருந்தேன். அதைப் படித்த சிலர் பாடல்களுக்குப் பொருள் புரிந்து படித்தால் நன்றாக இருக்கும் என்று விருப்பம் தெரிவித்தனர். அதன் பிறகு தான் பொருள் விளக்கத்தோடு தோத்திரப் பாடல்களைப் பதிவிடத் தொடங்கினேன்.

அப்படி நான் எழுதிய பதிவுகளின் தொகுப்பு இந்த “தோத்திர மாலை” புத்தகம்! உங்களுக்கும் இது பயனுள்ளதாக இருக்கும் என நம்புகிறேன்!

இந்த புத்தகத்தினை வெளியிட உறுதுணையாக இருந்த என் மாணவ நண்பர், அமெரிக்கா, கொலராடோ மாநிலத்தில் உள்ள குறிஞ்சி முத்தமிழ்ச் சங்கம் கல்விக்கூடத்தின் நிறுவனர் திரு. சுகுமாறன் மாரியப்பன் அவர்களுக்கு என் அன்பான நன்றிகள்!

வாழ்க வளமுடன்!

இங்ஙனம்,

**திருமதி.ஞானப்பூங்கோதை சுப்பிரமணியன்**
திருவண்ணாமலை மாவட்டம்.

# வினை நீங்கி ஞானம் மிகும்

**சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்**
**சுடச்சுட நோக்கிற் பவர்க்கு.**

**– திருக்குறள்**

**பாடலின் பொருள்:** பொன்னானது நெருப்பில் இட்டுச் சுடச்சுட அதன் மாசு நீங்கி ஒளி விடுவதுபோல, துன்பம் வருத்த வருத்தத் தவம் செய்வார்க்குத் தம்மோடு கலந்த வினை நீங்கி ஞானம் மிகும்.

வீடுபேற்றிற்காக நாம் செய்வது மட்டுமே தவமில்லை. எந்தவொரு குறிக்கோளையும் ஒரு மனதாக நினைத்து அதனை த் தவம் போலச் செய்தால் ஒரு நாள் நிச்சயம் அக் குறிக்கோளை அடைய முடியும். அதுவும் ஒரு தவம் தான். ஆனால் அது ஒரு நாளில் அடையக் கூடியது இல்லை. தவம் என்பது மனதை ஒருமுகப் படுத்தும் பயிற்சி. அந்த முயற்சியில் பல தடைகளும் துன்பங்களும் வருவது இயல்பே. தடைகளைத் தாண்டி, துன்பங்களைப் பொறுத்துக் கொண்டு உறுதியுடன் பயணித்தால் குறிக்கோளை அடைவது நிச்சயம்.



# திருவள்ளுவர் - மழை

**வான் நின்று உலகம் வழங்கி வருதலால்**
**தான்அமிழ்தம் என்றுணரற் பாற்று.**

**– திருக்குறள்**

**பாடலின் பொருள்:** மழை பெய்வதனால் தான் உலகில் உள்ள உயிர்கள் வாழ்கின்றன. ஆதலால், மழையே உயிர்களுக்கு அமிழ்தம் என்று உணரத்தகும்.



# ஐந்து புலன்கள்

**பொறிவாயில் ஐந்து அவித்தான் பொய்தீர் ஒழுக்க நெறிநின்றார் நீடு வாழ்வார்.**

**– திருக்குறள்**

**பாடலின் பொருள்:** மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளின் வழியாக வரும் ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஓசை என்னும் ஐந்து புலன்களின் இயக்கத்தை முறைப்படுத்தி, நெறிப்படுத்தி வாழ்ந்தவன், இறைவனது மெய்யான ஒழுக்கநெறி நிற்பவர், கவலை, பிணி, கட்டு, துயர் இன்றி இப்பூமியில் நீண்ட நாள் வாழ்வார்.



# விரும்புதலும், வெறுத்தலும்

**வேண்டுதல் வேண்டாமை இலான் அடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல.**

**– திருக்குறள்**

**பாடலின் பொருள்:** விரும்புதலும் வெறுத்தலும் இல்லாத இறைவனது திருவடியை எப்போதும் நினைத்துக் கொண்டு இருப்பவர்க்கு, எக்காலத்தும் துன்பம் உண்டாவதில்லை.



# மனத்துக்கண் மாசிலன்

**மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்**
**ஆகுல நீர பிற.**

**– திருக்குறள்**

**பாடலின் பொருள்:** ஒருவர் தம் மனதில் குற்றம் இல்லாதவராக இருத்தலே அவர் செய்யும் சிறந்த அறமாகும். மனத்தூய்மையின்றிச் செய்யும் மற்ற அறங்கள் எல்லாம் ஆடம்பரமே. அதாவது, மற்ற மனத் தூய்மையற்ற, அறத்தின் பெயரிலான, சொல்லும் செயலும் வீண் பகட்டுக்காகவும், விளம்பரத்துக்காகவும் செய்யப்படுவன என்கிறார் வள்ளுவர்.

சொல்லுக்கும் செயலுக்கும் அடிப்படையானது எண்ணம். மனத்தூய்மை தான் உண்மையான அகத் தூண்டுதல், ஆகையால் அறம் மனத்திலேயே அமைதல் வேண்டும் என்கிறார். ஒருவன் மற்ற அறங்களைச் செய்ய முடியாவிட்டாலும் மனத்தில் மாசு (அழுக்கு) இல்லாத வனாக விளங்கினால் அது ஓர் ஒழுக்கம் மட்டும் அல்ல. அதுவே ஒரு சிறந்த அறமும் ஆகும். ஏனென்றால் எண்ணத்திலும், சொல்லிலும் தூய்மையைக் கடைப்பிடிக்கும் ஒருவரால் அற மற்ற செயல்களைச் செய்ய முடியாது. "மனத்துக்கண் மாசிலனாக வாழ்வோமே."



# கல்வியின் பயன்

> **கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்**
> **நற்றாள் தொழாஅர் எனின்.**
>
> **– திருக்குறள்**

**பாடலின் பொருள்:** கல்வியின் பயன் கடவுளைத் தொழுதல். ஒருவர் மிகப் பெரிய கல்விமானாக, கல்வியின் கரை கண்ட, அறிவிற் சிறந்தவராக இருக்கலாம். அவர் தூய்மையான அறிவினனாகிய இறைவனின் திருவடிகளைத் தொழவில்லை யென்றால் அவர் கற்ற கல்வியினால் பயன் ஏதும் இல்லை.

கல்வியின் உண்மையான பயன் உலகியல் அறிவோடு ஆன்மீக அறிவையும் பெறுவதேயாகும். அதாவது சிற்றறிவினராகிய நாம் பேரறிவினனாகிய இறைவனின் திருவடிகளை வணங்குவதே நாம் கற்ற கல்வியினால் நாம் பெற்ற பயன் ஆகும்.

வாலறிவன் – தூய அறிவினன் ஆகிய இறைவன்.
கல்வி கற்போம் – கடவுளைத் தொழுவோம்.



# தாயினும் நல்லன்

**தீயினும் வெய்யன் புனலினும் தண்ணியன்**
**ஆயினும் ஈசன் அருள்அறி வார்இல்லை**
**சேயினும் நல்லன் அணியன்நல் அன்பர்க்குத்**
**தாயினும் நல்லன் தாழ்சடை யோனே.**

**– திருமூலர் அருளிய திருமந்திரம்**

**பாடலின் பொருள்:** தீயவர்கட்கு இறைவன் தீயைவிடவும் அதிக லெப்பமானவனாக இருக்கிறான். உயிர்கள் இறைவனை நாடும்போது தண்ணீரை விடவும் குளிர்ந்தவனாக இருக்கிறான். விருப்பு வெறுப்பின்றித் தன்னலம் இல்லாத குழந்தையைவிட இறைவன் நல்லவன். எப்போதும் உயிர்களின் பக்கத்தில் இருப்பவன். நீண்ட சடையைக் கொண்டவனான இறைவன் தன்னை நாடும் அன்பர்களுக்குப் பெற்ற தாயை விடவும் அன்பு செலுத்துபவனாகத் திகழ்கிறான். இருந்தாலும் அவனுடைய திருவருளை அறிந்தவர் யாரும் இல்லை.

இயற்கைப் பொருள்களின் (தீ,நீர்) தன்மைக்கு மேலான தன்மையன் இறைவன் ஆதலின் “தீயினும் வெய்யன்; புனலினும் தண்ணியன்” எனப்பட்டான். இதனால் இறைவனது பேராற்றல் சொல்லப்பட்டது.

அன்பிற்கு எடுத்துக்காட்டு தாய். அத்தாயினும் இறைவன் அன்புடையவன் ஆவார். மாணிக்க வாசகரும் “பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து” என்று திருவாசகத்தில் குறிப்பிடுவார். இதனால் இறைவனது பேரருள் விளக்கப்பட்டது.



# திருமந்திரம் - திருவடிகள்

**சூடுவன் நெஞ்சிடை வைப்பன் பிரான் என்று**
**பாடுவன் பன்மலர் தூவிப் பணிந்து நின்று**
**ஆடுவன் ஆடி அமரர் பிரான் என்று**
**நாடுவன் நானின்று அறிவது தானே.**

**– திருமூலர் அருளிய திருமந்திரம்**

**பாடலின் பொருள்:** இறைவனின் "திருவடிகளை என் தலைமேல் சூடிக் கொள்வேன். என் நெஞ்சத்திலும் வைத்துக் கொள்வேன். எம்பெருமான் என்று அவன் புகழ் பாடுவேன். பலவகையான மலர்களைக் கொண்டு வந்து அவன் திருவுருவத்தின் மேல் தூவி, அவனைப் பணிந்து நின்று அவன் முன்னால் அவன் பெருமைகளைப் பாடிக் கொண்டே ஆடுவேன். ஆடியபின் அமரர்களின் தலைவனான இவனே எனக்கு முக்தி அளிக்கக் கூடியவன், என்று அவனை நாடி அடைந்தபின் அனைத்தும் அவனே என்னும் உண்மை ஞானத்தை அறிந்து அவனோடே கலந்து நிற்பேன்."

இறைவனை அடைந்து முக்தி பெற மாபெரும் தவங்கள், யாகங்கள் இருந்தாலும், அவனது திருவடியை எண்ணத்தில் எப்போதும் வைத்து, அவனைப் புகழ்ந்து பாடி ஆடி, மலர்களைத் தூவிப் பூசித்தாலே அவனை நாடி முக்தி அடையலாம். இதுவே யாம் அறிந்த சிறந்த உபாயம் என்று திருமூலர் கூறி அருளுகிறார்.

திருமூலர் தாம் அறிந்தவை அவன் திருவடியைச் சூடுதலும், மனதில் கொள்ளுதலும், பாடுதலும், மலர் சூடுதலும் , ஆடுதலும் என்று கூறுவதால் நாமும் இவற்றை மேற்கொள்ள வேண்டும் என்பதாம்.



# திருமந்திரம் - நடுவுள அங்கி அகத்திய



**நடுவுநில்லாது இவ்வுலகம் சரிந்து**
**கெடுகின்றது எம்பெரு மான் என்ன ஈசன்**
**நடுவுள அங்கி அகத்திய நீபோய்**
**முடுகிய வையத்து முன்னிர் என்றானே.**

**– திருமூலர் அருளிய திருமந்திரம்**

**பாடலின் பொருள்:** எம் தலைவனே! இந்த உலகம் சமநிலையில் இல்லாமல் ஒரு பக்கம்உயர்ந்தும், ஒரு பக்கம் தாழ்ந்தும் அழிகின்றதே என்று தேவர்கள் சிவபெருமானிடம் வேண்டிக் கொள்ள, இறைவரும் அகத்தியரை நோக்கி "அக்கினியை உடைய அகத்தியனே! நீ புறப்பட்டுப் போய் உயர்ந்து உள்ள தெற்குத் திசையைச் சென்று அடைவாயாக" என்று கூறினார்.

சரிந்து – தாழ்ந்து.
அங்கி – நெருப்பு
முடுகிய – உயர்ந்துள்ள
வையத்து – உலகில்(தென்னாட்டில்)
முன்னிர்–அடைக.

அகத்தியர் எப்போதும் சிவனைத் தியானித்துக் கொண்டு இருப்பவர். சிவனோ ஒளிப் பிழம்பாகத் திகழ்பவர். ஒளிப் பிழம்பை உள்ளத்தில் கொண்டவர் அகத்தியர்.

ஆதலால் "நடுவுள அங்கி அகத்திய" என இறைவர் அகத்தியரை விளித்தார். உலகம் ஒரு பக்கம் தாழ்ந்து, ஒரு பக்கம் உயர்ந்தது என்பது ஒரு புராணக்கதை.

சிவபெருமான் பர்வதராஜனின் மகளான பார்வதியை மணம் புரிந்தபோது அத்திருமணத்தைக் காணத் தேவர், முனிவர் என்று எல்லோரும் இமயத்தைச் சென்றடைந்தனர். அதன் சுமை காரணமாக உலகம் வடபகுதியில் தாழ்ந்து தென்பகுதியில் உயர்ந்ததாம். அதனைச் சமன்படுத்த இறைவர் அகத்தியரைத் தென்னாட்டிற்கு அனுப்பினாராம். அகத்தியர் தென்னாட்டில் உள்ள பொதிகை மலையில் வந்து தங்கியதும் உலகம் சமநிலை அடைந்ததாம். இதுவே அந்தப் புராணக் கதை.

# உடம்பை வளர்ப்போம்; உயிர் வளர்ப்போம்



**உடம்பார் அழியின் உயிரார் அழிவர்**
**திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்**
**உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தேன்**
**உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே.**

**– திருமூலர் அருளிய திருமந்திரம்**

**பாடலின் பொருள்:** "உடம்பு அழிந்தால் உயிரும் அழியும். உறுதியான மெய்ஞ்ஞானத்தை அடைய முடியாது.ஆகவே உடம்பை வளர்க்கும் உபாயத்தை அறிந்து கொண்டேன். எனவே, உடம்பை வளர்த்தேன்; அதனால் உயிரையும் வளர்த்துக் கொண்டேன்." என்று திருமூலர் உடல்நலத்தைப் பேண வேண்டியதன் அவசியத்தை இப்பாடலில் வலியுறுத்துகிறார்.

உடம்பார் – உடம்பு. உயிரார் – உயிர்.
நம் உடம்பை நல்ல முறையில் பேணிப் பாதுகாத்தல் அவசியம். ஏனெனில் அது இறைவன் வசிக்கும் ஆலயம். நம் உடல் இறைவனாகிய மெய்ப்பொருளைச் சுமந்து கொண்டு இருப்பதாலேயே உடலுக்கு 'மெய்' என்று ஒரு பெயர் உண்டு.

"நந்தவனத்தில் ஓர் ஆண்டி – அவன்
நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டி
கொண்டு வந்தான் ஒருதோண்டி – மெத்தக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி"
என்ற சித்தர் பாடல் நாம் அனைவரும் அறிந்ததே.

"ஆண்டி என்கிற உயிர், பரம்பொருள் என்ற குயவனிடம் வேண்டி, தோண்டி என்ற உடம்பைப் பெற்றது. ஆனால் அந்த உடம்பைச் சரியாகப் பராமரிக்காமல், கேளிக்கைகளில் ஈடுபடுத்தி வீணாக்கிவிட்டது" என்பது தான் இந்தப் பாடல் உணர்த்தும் பொருள்.

உடலைப் பாதுகாத்தலே உயிரைப் பாதுகாக்கும் வழி. அதாவது உடலை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ள வேண்டும். அதனால் தான் வள்ளலாரும் "உயிருரும் உடலையும், உடலுறும் உயிரையும் அயரவறக் காத்தருள் அருட்பெரும் ஜோதி" என வேண்டுகிறார். "உடம்பை வளர்ப்போம்; உயிர் வளர்ப்போம்"

# உடம்பின் அருமை

**உடம்பினை முன்னம் இழுக்கென்று இருந்தேன்**
**உடம்பினுக்கு உள்ளே உறுபொருள் கண்டேன்**
**உடம்புளே உத்தமன் கோயில் கொண்டான் என்று**
**உடம்பினை யான்இருந்து ஓம்புகின் றேனே.**

**– திருமூலர் அருளிய திருமந்திரம்**

**பாடலின் பொருள்:** உடம்பின் அருமையை உணர்வதற்கு முன் அதனைக் குற்றமுடைய பொருளாக எண்ணி இருந்தேன். பின்னர் உடம்புக்கு உள்ளே சிறந்த பொருள் ஒன்று இருப்பதை அறிந்து கொண்டேன். உடம்புக்குள்ளே உத்தமனாகிய இறைவன் கோயில் கொண்டுள்ளதை உணர்ந்து கொண்டேன். ஆகவே இப்போது உடல் ஆரோக்கியம் முக்கியம் என்பதை உணர்ந்து, அதற்கான பயிற்சிகளை மேற்கொண்டு, உடம்பைக் கண்ணும் கருத்து மாகக் காப்பாற்றுகின்றேன் என்று திருமூலர் கூறுகிறார்.



# அறம்கெட நில்லன்மின்

**அவ்வியம் பேசி அறம்கெட நில்லன்மின்**
**வெவ்விய னாகிப் பிறர்பொருள் வவ்வன்மின்**
**செவ்விய னாகிச் சிறந்துண்ணும் போதொரு**
**தவ்விக் கொடு உண்மின் தலைப்பட்ட போதே.**

**– திருமூலர் அருளிய திருமந்திரம்**

**பாடலின் பொருள்:** 1. பொய்யும் புரட்டும் பேசி அறவழிகளை அழிக்காதீர்கள்.

2.பொறாமையும் கோபமும் கொண்டு பிறரின் பொருட்களைப் பிடுங்கிக் கொள்ளாமல் இருங்கள்.

3.எண்ணமும் செயலும் சிறப்பு உடையவராக மாறி, நடுவுநிலைமையோடு சிறப்பாக வாழும்போது, உண்ணும் வேளையில் பசியென்று யாராவது வந்து உணவு கேட்டால்,

4.ஒரு அகப்பை அளவாவது உணவை அவருக்கு அளித்தபின் உண்ணுங்கள்.

இப்படி யெல்லாம் செய்தால் (வாழ்ந்தால்) உடல் அழிந்து உயிர் பிரிந்தாலும் இறைவனை அடைந்து பேரின்பம் அடையலாம்.

அவ்வியம் – பொறாமை.
செவ்வியன் – நடுவு நிலைமை உடையவர்.
தவ்வி – அகப்பை.



# தன்னை அறிதல்

**தன்னை அறியத் தனக்கொரு கேடில்லை**
**தன்னை அறியாமல் தானே கெடுகின்றான்**
**தன்னை அறியும் அறிவை அறிந்தபின்**
**தன்னையே அர்ச்சிக்கத் தானிருந் தானே.**

**– திருமூலர் அருளிய திருமந்திரம்**

**பாடலின் பொருள்:** தன்னை முழுவதுமாக உணரந்தவர்களுக்கு ஒரு துன்பமும் இல்லை. தன்னை அறியாமல் தாங்களே துன்பப் படுகிறார்கள். தன்னை முழுவதும் அறியும் அறிவு இறைவனாலே வாய்க்கும் என்பதை அறிந்தபிறகு, தன்னையே பிறர் வழிபடத் தகுந்தவர்களாக இருப்பார்கள்.

தன்னை அறிதல் என்பது தனது பலம், பலவீனம், தன்னால் எது முடியும், எது முடியாது என அனைத்தையும் அறிந்திருப்பது.

தன்னில் தன்னை அறியும் தலைமகன்
தன்னில் தன்னை அறியில் தலைப்படும். (அப்பர் வாக்கு)

தன்னை அறிந்து இன்பமுற வெண்ணிலாவே
தந்திரம் நீசொல்ல வேண்டும் வெண்ணிலாவே (வள்ளலார்).



# திருமூலர் - திருமந்திரம்



**பின்னை நின்று என்னே பிறவி பெறுவது**
**முன்னை நன்றாக முயல் தவம் செய்கிலர்**
**என்னை நன்றாக இறைவன் படைத்தனன்**
**தன்னை நன்றாகத் தமிழ் செய்யும் ஆறே.**

**– திருமூலர் அருளிய திருமந்திரம்**

**பாடலின் பொருள்:** பிறவி என்பது துன்பம் தருவது. இருந்தும் மீண்டும் மீண்டும் ஏன் பிறக்கிறார்கள்? பிறவி தொடர்வது ஏன்? இப்படி மீண்டும் மீண்டும் பிறப்பவர்கள் எல்லாம் முற்பிறவியில் முறையாகத் தவம் செய்யாதவர்கள். தவம் செய்யத் தவறியவர்களுக்குத் தான் பிறவி தொடரும் .

ஆனால் நான் பிறந்திருக்கிறேனே! எப்படி? நான் பிறக்கவில்லை. இறைவனால் பிறப்பிக்கப் பட்டேன். எதற்காக?

மோன நிலையில் இறைவனால் எனக்கு உணர்த்தப்பட்டதை நன்றாகத் தமிழ்ப் பாக்களால் பாட இறைவன் என்னைப் படைத்துள்ளான். என்னுடைய இந்தப் பணி இறைவன் ஆணையால் நடைபெறும் பணி.

**விளக்கம்:** திருமந்திரத்தில் திருமூலர் தன் வரலாறு கூறும் பகுதியில் இப்பாடல் இடம் பெறுகிறது. திருமூலர் கூடு விட்டுக் கூடு பாயும் ஆற்றல் பெற்றவர் ஆனதால், இறந்து போன மூலன் என்ற இடையன் உடலில் தன் உயிரைப் புகுத்தியவர், பின் மீண்டும் வந்து தன் உடலைத் தேடிய போது அது கிடைக்கவில்லை. இறைவனால் மறைக்கப்பட்டது என்பதைத் தம் ஞான திருட்டியால் உணர்ந்தார். இறைவனால் தனக்குக் கற்பிக்கப்பட்ட ஆகமங்களைத் தமிழ்ப் பாக்களால் தாம் பாடவேண்டும் என்பதே இறைவனின் ஆணை என்பதை உணர்ந்து, மூவாயிரம் ஆண்டுகள் திருமூலர் என்ற பெயரில் வாழ்ந்து, ஆண்டுக்கு ஒரு பாடலாக மூவாயிரம் பாடல்களில் திருமந்திரம் என்ற நூலைப் பாடினார் என்பது திருமந்திரம் நூல் தோன்றிய வரலாறு.

# நடமாடும் கோயில்

**படமாடக் கோயில் பகவர்க்கு ஒன்று ஈயில்**
**நடமாடக் கோயில் நம்பர்க்குஅங்கு ஆகா**
**நடமாடக் கோயில் நம்பர்க்குஒன்று ஈயில்**
**படமாடக் கோயில் பகவர்க்குஅது ஆமே.**
**– திருமூலர் அருளிய திருமந்திரம்**

**பாடலின் பொருள்:** சித்திரங்களும் ஓவியங்களும் அமைந்த மாடங்களையுடைய கோயிலில் இருக்கும் இறைவனுக்கு நாம் ஒரு பொருளைக் காணிக்கையாகச் செய்தால், அது நடமாடும் உடம்பாகிய கட்டடத்தில் வாழும், இறைவனுக்கு ஒப்பான அடியார்களைச் சாராது. ஆனால் நடமாடும் கோயில்களாகிய அடியார்களுக்கும், பசியில் வாடும் வறியவரகளுக்கும் நாம் ஒன்று கொடுத்தால், அது படம் ஆடும் கோயிலில் இருக்கும் இறைவனைச் சென்று அடையும்.

இறைவன் படமாடக் கோயில், நடமாடக் கோயில் என்ற இரண்டு கோயில்களில் வாசம் செய்கிறான். படமாடக் கோயிலில் இருக்கும் இறைவனுக்கு ஏதேனும் செய்ய விரும்பும் பொருள் படைத்தவர்கள், உணவு, உடை, உறையுள் ஆகிய அத்தியாவசியத் தேவைகளுக்கே வழியில்லாத வறியவர்கட்கு அவர் வேண்டிய ஒன்றைக் கொடுத்தால் அது இறைவனுக்குக் கொடுத்ததாகும். ஆண்டவனுக்கு ஈவதை அடியார்கட்கு ஈந்தால் அது ஆண்டவனைச் சென்றடையும் என்பதே இப்பாடல் உணர்த்தும் கருத்தாகும்.



# காளா மணிவிளக்கு

**உள்ளம் பெருங்கோயில் ஊன்உடம்பு ஆலயம்**
**வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுர வாசல்**
**தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்**
**கள்ளப் புலன்ஐந்தும் காளா மணிவிளக்கு.**
**– திருமூலர் அருளிய திருமந்திரம்**

**பாடலின் பொருள்:** அடியவர்களின் உள்ளமானது இறைவன் வீற்றிருக்கும் மிகப்பெரிய கோயில் ஆகும். அவர்களது உடம்பு இறைவனை வழிபட வலம்வரும் ஆலயம் ஆகும். உலக உயிர்களுக்கு அருளை வாரி வழங்கும் வள்ளலாகிய பரம்பொருளைச் சென்று வழிபடும் வெளிவாயிலான கோபுர வாசலாக விளங்குவது நம் வாய். இறைவனைத் தமக்குள் ஆராய்ந்து தெளிவாக அறிந்து கொண்டவரகளுக்கு அவர்களின் ஆன்மாவானது இறைவனின் அடையாளமான சிவலிங்கமாகும். அவர்களிடம் இருக்கின்ற அழிவைத் தருகின்ற ,வஞ்சகமான மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐம்புலன்களும் தம் இயல்பு நிலை மாறிக் கோயிலின் பெரிய ஒளிவீசுகின்ற , இருட்டாகிய மாயையை நீக்குகின்ற ஒளி விளக்குகளாகத் திகழும். கள்ளப் புலன்கள் ஐந்தும் நம் கட்டுப்பாட்டில் இருக்குமானால் அந்தப் புலன்களே ஐந்து ஒளி விளக்குகளாகத் திகழும்.

இறைவனை உணர்ந்த தெளிவு வந்தவர் சிவலிங்கத்தை வெளியில் தேட வேண்டாம். அவர்களின் ஆன்மாவே சிவலிங்கமாக இருக்கும். நம் உயிரே கடவுள் என்று உணரும்போது உடலாலும் உள்ளத்தாலும் நாம் நன்மை மட்டுமே செய்வோம். அறமற்ற செயல்களைச் செய்வதைத் தவிர்ப்போம்.



# ஒன்றே குலம் ஒருவனே தேவன்

> **ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்**
> **நன்றே நினைமின் நமன்இல்லை நாணாமே**
> **சென்றே புகும்கதி இல்லைநும் சித்தத்து**
> **நின்றே நிலைபெற நீர்நினைந்து உய்மினே.**
>
> **– திருமூலர் அருளிய திருமந்திரம்**

**பாடலின் பொருள்:** மனித குலத்தில் உயர்ந்த சாதி, தா ழ்ந்த சாதி என்றோ, உயர்ந்த மதம், தாழ்ந்த மதம் என்றோ எதுவும் கிடையாது. எல்லோரும் ஒரே குலம். கடவுளும் ஒன்று தான். எப்போதும் நமக்கு மட்டுமின்றி மற்றவர்க்கும் நல்லதையே நினைத்து, நல்லதையே செய்யுங்கள். அடுத்தவர்களுக்கு நன்மை நினைக்கும்போது உங்கள் உயிருக்கு ஆபத்து இல்லை. நீங்கள் செல்லத்தக்க வழி வேறு இல்லை. வெட்கப்படாமல் துணிந்து செயல்படுங்கள். மனதில் இறைவனை நினைத்து, அவன் அருள் உணர்வோடு பொருந்தி ,அவன் திருவடியைச் சரணடைந்து நற்கதி அடையுங்கள்.



## ஈசன்

**தீயினும் வெய்யன் புனலினும் தண்ணியன்**
**ஆயினும் ஈசன் அருள்அறி வார்இல்லை**
**சேயினும் நல்லன் அணியன்நல் அன்பர்க்குத்**
**தாயினும் நல்லன் தாழ்சடை யோனே.**

**– திருமூலர் அருளிய திருமந்திரம்**

**பாடலின் பொருள்:** தீயவர்கட்கு இறைவன் தீயைவிடவும் அதிக லெப்பமானவனாக இருக்கிறான். உயிர்கள் இறைவனை நாடும்போது தண்ணீரை விடவும் குளிர்ந்தவனாக இருக்கிறான். விருப்பு வெறுப்பின்றித் தன்னலம் இல்லாத குழந்தையைவிட இறைவன் நல்லவன். எப்போதும் உயிர்களின் பக்கத்தில் இருப்பவன். நீண்ட சடையைக் கொண்டவனான இறைவன் தன்னை நாடும் அன்பர்களுக்குப் பெற்ற தாயை விடவும் அன்பு செலுத்துபவனாகத் திகழ்கிறான். இருந்தாலும் அவனுடைய திருவருளை அறிந்தவர் யாரும் இல்லை.

இயற்கைப் பொருள்களின் (தீ , நீர்) தன்மைக்கு மேலான தன்மையன் இறைவன் ஆதலின் ‘‘தீயினும் வெய்யன்; புனலினும் தண்ணியன்’’ எனப்பட்டான். இதனால் இறைவனது பேராற்றல் சொல்லப்பட்டது.

அன்பிற்கு எடுத்துக்காட்டு தாய். அத்தாயினும் இறைவன் அன்புடையவன் ஆவார். மாணிக்க வாசகரும் ‘‘பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து’’ என்று திருவாசகத்தில் குறிப்பிடுவார். இதனால் இறைவனது பேரருள் விளக்கப்பட்டது.



# குற்றம்நீ குணங்கள்நீ

**குற்றம்நீ குணங்கள்நீ கூடல் ஆலவாயிலாய்**
**சுற்றம்நீ பிரானும்நீ தொடர்ந்து இலங்குசோதிநீ**
**கற்றநூல் கருத்து நீ அருத்தம் இன்பம் என்றிவை**
**முற்றும்நீ புகழ்ந்துமுன் உரைப்பதென் முகம்மனே.**

**– திருமூலர் அருளிய திருமந்திரம்**

**பாடலின் பொருள்:** இறைவன் அனைத்து உயிர்களின் உள்ளே உயிருக்கு உயிராகப் பிணைந்து இருந்து இயக்குவதால் உயிர்களின் குற்றமாகவும் குணமாகவும் இருப்பவன் இறைவனே ஆவார். நாம் முந்தைய பிறவிகளில் சேர்த்த வினைகளின் தன்மையே, இந்தப் பிறவியில் நமது குற்றமாகவும் குணமாகவும் அமையும் வண்ணம் பொருத்துபவன் இறைவனே. திருஞான சம்பந்தர் மூன்று வயது குழந்தையாக இருந்தபோது, அம்மை அளித்த ஞானப்பால் அருந்திய நாள் முதல் பெருமானைத் தமது தந்தையாகவும், பிராட்டியைத் தமது தாயாகவும் கருதியவர் ஆகையால் சுற்றம் நீ பிரானும் நீ என்கிறார். அந்தப் பெருமான் ஒருவரே நம் அக இருளை (அஞ்ஞானத்தை) நீக்கி ஞானத்தை அளிக்க வல்லவர் என்பதால் தொடர்ந்து இலங்கும் சோதி என்கிறார்.

நாம் கற்க வேண்டிய வேதங்கள், ஆகமங்கள் ஆகியவற்றின் கருத்தாக இருக்கும் பெருமான், அந்த நூல்களைக் கற்பதால் நாம் அடையும் இன்பமாகவும் இருக்கிறார். மேற்சொன்னவை அனைத்தும் பெருமானே, உன்னைப் புகழ்வதற்காகச் சொன்ன வார்த்தைகள் அல்ல. முழுவதும் உண்மையே."



# இறைவழிபாடு

> **யாவர்க்குமாம் இறைவர்க்கு ஒரு பச்சிலை;**
> **யாவர்க்குமாம் பசு வுக்கு ஒரு வாயுறை;**
> **யாவர்க்குமாம் உண்ணும்போது ஒரு கைப்பிடி;**
> **யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரை தானே.**
>
> **– திருமூலர் அருளிய திருமந்திரம்**

**பாடலின் பொருள்:** இறைவனை வழிபடுவதற்கு எளிய ஒரு பச்சிலையே போதும். (அருகம்புல், வில்வம், துளசி, வேப்பிலை)பசுவிற்கு ஒரு கைப்பிடி புல் கொடுத்தாலே போதும்.

நாம் உண்ணும் போது ஒரு கைப்பிடி அளவு உணவைப் பசியோடு இருக்கும் யாருடனாவது பகிர்ந்து கொண்டாலும் போதும். இவை எல்லாமே இறைவழிபாடு தான்.

இந்த மூன்று வழிகளுமே இறைவனை வழிபடுவதற்கான எளிய வழிகள் தாம். ஆனால் எளிமையின் உச்சமாக நான்காவதாக ஒரு வழியையும் குறிப்பிடுகிறார் திருமூலர். பிறரோடு பேசும்போது இனிமையான சொற்களைப் பயன்படுத்துங்கள்.

முதலில் சொன்ன மூன்று வழிபாட்டு முறைகளுக்கும் சிறிதளவாவது பிரயத்தனப்பட வேண்டும். ஆனால் இன்சொல் பேசுவதற்கு எந்தப் பிரயத்தனமும் தேவை யில்லை தானே! இதைவிட எளிமையான ஓர் இறைவழிபாட்டினை வேறு யாரும் அல்லது வேறு எந்த மதமும் கற்பிக்க முடியாது. என்ன, இன்சொல் பேசி இறைவனை வழிபடுவோமா!



# நான் பெற்ற இன்பம்

**நான்பெற்ற இன்பம் பெறுகஇவ் வையகம்**
**வான்பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிடின்**
**ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்**
**தான்பற்றப் பற்றத் தலைப்படும் தானே.**

**– திருமூலர் திருமந்திரம்**

**பாடலின் பொருள்:** இறைவனை உணர்ந்து, இறைவனை அடைந்து யான் பெற்ற பேரின்பம் இவ்வுலகில் உள்ள அனைவரும் பெற்று இன்புற்று இருக்க வேண்டும் என்றும், அண்டங்கள் அனைத்திலும் உறைந்து நிற்கும் வேதத்தின் உண்மைப் பொருளைப் பற்றிச் சொல்ல வேண்டும் என்றும், உயிர்களின் உடலோடு கலந்து உயிராக நின்று, வேதத்தின் முழுப் பொருளாக இருக்கும் அந்த இறைவனை உள்ளுணர்வு கொண்டு அனைவரும் அறிந்து கொள்ளவே இத் திருமந்திரத்தை வழங்கினோம்.

இத்திருமந்திரத்தை மனம் விரும்பி நினைத்து நினைத்துத் துதித்துக் கொண்டு இருப்பவர்களுக்கு இறைவனின் திருவருள் தானாகவே வந்தடைந்து “யான் பெற்ற பேரின்பம்” கிடைக்கும்.



# திருவாசகம் சிவபுராணம்

**தாயிற் சிறந்த தயா ஆன தத்துவனே**
**மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே**
**தேசனே தேன்ஆர் அமுதே சிவபுரனே**
**பாசமாம் பற்றுஅறுத்துப் பாரிக்கும் ஆரியனே**
**நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெடப்**
**பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே**
**– மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம்**

**பாடலின் பொருள்:** “நாயினும் கீழ்மையான நிலையில் கிடந்த அடியேனுக்குப் பெற்ற தாயினும் அதிகமான அன்பு உடையவனான தத்துவப் பொருளே! குற்றமற்ற தூய ஒளி மயமானவனே! மலர்கின்ற மலர் போன்ற குளிர்ச்சி பொருந்திய இனிய சுடரே! ஒளி உருவானவனே! எனக்குக் குருவாகத் தோன்றியவனே! சிவபுரம் என்னும் கயிலாயத்தில் இருப்பவனே! பாசமாகிய கட்டினை அறுத்துத் திருவருள் புரியும் அறிவிற் சிறந்தவனே! என்னை வளர்க்கக் கூடிய உயர்வானவனே! அன்பையும் காட்டி அருளையும் தருகின்றாய். அதனால் என்னுடைய நெஞ்சில் வஞ்சனை ஒழிய, என் உள்ளத்தில்நீங்காது நின்று பெருங்கருணை பெருக்கெடுக்கும் ஜீவநதியே!

தத்துவனே – உண்மைப் பொருளே.
தேசனே – (தேஜஸ் என்றால் ஒளி) ஒளி உருவானவன்.
தேசன் – தேசிகன் என்ற சொல்லின் சுருக்கம். எனக்குக் குருவாகத் தோன்றியவனே!

மாணிக்கவாசகர் இறைவனைப் பலவாறாகச் சொல்லித் துதிக்கும் தன்மையை இப்பகுதியில் காணலாம்.



# தாயிற் சிறந்த தயாவான தத்துவன்



**விலங்கும் மனத்தால், விமலா உனக்கு**
**கலந்த அன்பாகிக் கசிந்துஉள் உருகும்**
**நலம்தான் இலாத சிறியேற்கு நல்கி**
**நிலம்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி,**
**நாயிற் கடையாய்க் கிடந்தஅடியேற்குத்**
**தாயிற் சிறந்த தயாவான தத்துவனே...**

**– மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம்**

**பாடலின் பொருள்:** மாசற்றவனே! பாசக் கட்டுகளிலிருந்து நீங்கும் மனத்தினனாயும் ,உன்னிடம் பொருந்தின அன்பை உடையேனாயும் மனம் கசிந்து உருகுகின்ற, எந்த நன்மையும் இல்லாத சிறியவனாகிய எனக்கும் கருணை புரிந்து, பூமியின் மேல் எழுந்தருளி, உன் நீண்ட திருவடிகளைக் காட்டி, நாயினும் கடையனாய்க் கிடந்த அடியேனுக்குத் தாயினும் மேலாகிய, அருள் வடிவான உண்மைப் பொருளே.

தாயிற் சிறந்த தயாவான தத்துவன் – அன்பிலேயே மிகச்சிறந்தது தாயன்பு. ஏனென்றால் எந்தப் பிரதிபலனையும் எதிர்பார்க்காதது தாயன்பு மட்டுமே. குழந்தை பசி என்று அழும்வரை காத்திருக்க மாட்டாள் தாய். குழந்தையின் பசி நேரம் அறிந்து பாலூட்டிப் பசியாற்றுபவள் தாய். ஆனால் இறைவனோ தாயைக் காட்டிலும் ஒரு படி மேலானவன். இதையே மணி வாசகர் மற்றொரு பாடலில் “பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து” என்று பாடுகிறார்.

நிலம்தன் மேல்வந்து நீள்கழல்கள் காட்டி நலம்தான் இலாத சிறியேற்கு நல்கி எவ்விதப் பெருமையும் இல்லாத சிறுமை உடையவனாகிய என்னிடம் கருணை புரிந்து .

முதன்மை அமைச்சராகிய வாதவூரர் (மாணிக்க வாசகர்), அரிமர்த்தன பாண்டியனுக்காகக் குதிரை வாங்கச் செல்லும் வழியில் சிவபெருமான் திருப்பெருந்துறையில் குருவாய் வந்து காத்திருந்து அவருக்குத் திருவடி தீட்சை செய்தருளிய திறத்தை வியந்து போற்றுகிறார்.

நீள்கழல்கள் – திருமாலும் பிரம்மாவும் இறைவனின் அடிமுடியைக் காண முயன்று தோற்ற வரலாற்றை இங்கு நினைவு கூரலாம்.

# அறம்பாவம் என்னும் அருங்கயிறு

**வல்வினையேன் தன்னை**
**மறைந்திட மூடிய மாய இருளை**
**அறம்பாவம் என்னும் அரும் கயிற்றால் கட்டி**
**புறந்தோல் போர்த்து எங்கும் புழு அழுக்கு மூடி,**
**மலம்சோரும் ஒன்பது வாயில் குடிலை**
**மலங்கப் புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய**

**– மாணிக்கவாசகர்,**
**அருளிய திருவாசகம், சிவ புராணம்**

**பாடலின் பொருள்:** கொடிய வினையில் சிக்குண்டு இருக்கும் என்னை, மறையும்படி மூடியுள்ள அறியாமையாகிய ஆணவம் கெடுதற் பொருட்டு புண்ணியம் பாவம் என்னும் அறுத்தற்கு அருமையாகிய கயிற்றால் கட்டப்பெற்று மேலே ஒரு தோலையும் போர்த்தி, எவ்விடத்தும் புழுக்கள் நெளிகின்ற அழுக்கை மறைத்து ஆக்கிய, மலத்தினை வெளியேற்றும் ஒன்பது துளைகள் உள்ள வீடான இந்த உடல் குலையும்படி ஐம்புலன்களும் வஞ்சனை பண்ணுதலால்,

ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களுள் ஆணவம் நீங்குதற் பொருட்டே மாயையும் கன்மமும் சேர்க்கப்படுகின்றன. "அறம்பாவம்" என்பன கன்ம மலம். "ஒன்பது வாயிற் குடில்" என்பது மாயாமலம். ஒன்பது வாயிலாவன: செவி இரண்டு, கண் இரண்டு, நாசி இரண்டு, வாய் ஒன்று, கருவாய் ஒன்று, எருவாய் ஒன்று. புலன்களால் பெறும் இன்பம் நிலையில்லாதது. பல துன்பங்களுக்குக் காரணமாக இருப்பதும் புலன் இன்பமே. அதனால் தான் "குடில் மலங்கப் புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய" என்றார்.



# கறந்த பாலோடு, கரும்புச் சாறும்

> **கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்**
> **சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று**
> **பிறந்த பிறப்பு அறுக்கும் எங்கள் பெருமான்**
> **நிறங்கள் ஓர்ஐந்து உடையாய், விண்ணோர்கள்**
> **ஏத்த மறைந்திருந்தாய், எம்பெருமான்**
> **வல்வினையேன் தன்னை**
>
> **– மாணிக்கவாசகர்**
> **அருளிய திருவாசகம். (சிவபுராணம்)**

**பாடலின் பொருள்:** கறந்த பாலோடு, கரும்புச் சாறும் நெய்யும் கலந்தது போல, அடியவர்களின் சிந்தனைக்குள் தேன் போல ஊறி நிற்கிறவனே, நாங்கள் எடுத்த பிறப்பைக் கெடுத்து முக்தி பெறச் செய்யும் எங்கள் பெருமானே, ஐந்து நிறங்களைக் கொண்டவனே, தேவர்களுக்கும் புலப்படாது மறைந்திருந்தாய். ஆனால் எனக்கு மிகவும் எளிதாக என் முயற்சியில்லாமல் குருந்த மரத்தடியில் காத்திருந்து காட்சியளித்து அருளினாய்.

நிறங்கள் ஓர் ஐந்து உடையாய் – பஞ்ச பூதங்களாய் இருப்பவன் இறைவன். அதனால் அவற்றின் நிறமாயும் இருப்பவன்.

நிலம்– பொன்மை
நீர்– வெண்மை
நெருப்பு – செம்மை
காற்று – கருமை
ஆகாயம் – சாம்பல்

விண்ணோர்கள் ஏத்த மறைந்திருந்தாய் – அடி முடி தேடிய வரலாறு.



# சொல்லுக்கும் சிந்தனைக்கும் எட்டாதவன்

**ஆக்கம் அளவு இறுதி இல்லாய் அனைத்து உலகும்**
**ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்**
**போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின் தொழும்பின்**
**நாற்றத்தின் நேரியாய், சேயாய், நனியானே**
**மாற்றம் மனம் கழிய நின்ற மறையோனே!**

**– மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம்**

**பாடலின் பொருள்:** தோற்றம், குறித்த வயது வரை நிலைபேறு, முடிவு என்பவை இல்லாதவனே! உலகம் அனைத்தையும் படைப்பாய், நிலைபெறுத்துவாய், ஒடுக்குவாய், பின் அருள் செய்வாய். அடியேனாகிய என்னை மாயைக்குள் போக்கி மறைப்பாய் (பிறவியில் செலுத்துவாய்). நீ என்னை உனக்குத் தொண்டு செய்யும் அடியார் கூட்டத்தில் சேர்த்துக் கொள்வாய். பூவின் வாசனைபோல நுட்பமாய் இருப்பவனே! வெகு தொலைவில் இருப்பவனே! இருந்தும் மிக அருகிலேயும் இருப்பவனே! சொல்லுக்கும் சிந்தனைக்கும் எட்டாது நிற்கும் வேத நாயகனே!

படைத்தல், காத்தல், ஒடுக்குதல், மறைத்தல், அருளல் என்பன இறாவனின் ஐந்து தொழில்களாம். அறியாமையில் கட்டுண்டு இருக்கும் உயிருக்கு இறைவன் உடம்பைக் கொடுத்துப் படைக்கிறான். எடுத்த உடம்பில் இருவினைகளை நுகரும்போது அறியாமையை நீக்கிக் காக்கிறான்.

உயிர் அலுக்கா வண்ணம் ஒய்வு கொடுக்க ஒடுக்குகிறான். இவ்வாறு பிறப்பு இறப்புகளில் உழலும்படி அறிவை மறைக்கிறான்; குற்றம் நீங்கிப் பக்குவம் (மலபரிபாகம்) வந்த காலத்தில் அருளுகிறான்.

இறைவன் உயிர்களைப் பக்குவம் வருவதற்கு முன்பு பிறவியில் செலுத்தியும், பக்குவம் வந்த பின்பு தனது திருவடிக்கு ஆளாக்கியும் ஆண்டு கொள்வானாதலின் “போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்” என்றார்.

நாற்றத்தின் நேரியாய் – பூவில் மணம் போல ஆன்மாவில் இறைவன் கலந்திருக்கிறான்.



# வேதத்தின் அங்கங்கள் ஆறு

**ஆறு கொலாம் அவர் அங்கம் படைத்தன**
**ஆறு கொலாம் அவர்தம் மகனார் முகம்**
**ஆறு கொலாம் அவர் தார்மிசை வண்டின் கால்**
**ஆறு கொலாம் சுவைஆக்கின தாமே.**

**– மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம்**

**பாடலின் பொருள்:** சிவபிரான் படைத்த வேதத்தின் அங்கங்கள் சிட்சை, கல்பம், வியாகரணம், நிருத்தம், சந்தம் , சோதிடம் ஆகிய ஆறு. அவரது மகனான முருகனின் முகங்கள் ஆறு. அவர் சூடியிருக்கும் மாலையைச் சூழ்கின்ற வண்டுகளின் கால்கள் ஆறு. அவரால் ஏற்படுத்தப்பட்ட சுவைகள், இனிப்பு , கசப்பு, துவர்ப்பு, புளிப்பு, உப்பு, காரம் என்னும் ஆறு வகையில் அடங்குவனவே.



# மெய்ஞ்ஞானம்



**வெய்யாய், தணியாய், இயமானனாம் விமலா**
**பொய்ஆயின எல்லாம் போய்அகல வந்தருளி**
**மெய்ஞ்ஞானம் ஆகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே**
**எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே**
**அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே**

**– மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம்**

**பாடலின் பொருள்:** என்னைப் போன்ற அஞ்ஞானிகளுக்குப் புரியும் வகையில் நெருப்பு வடிவமாய்த் தோன்றியவனே! நீ தானே எனக்குக் குளிர்ச்சியாகவும் இருக்கக் கூடியவனே! எல்லாருக்கும் தலைவனாக இருக்கும் குற்றமற்றவனே!

நான் என் உள்ளத்துக்குள் செய்யும் யாகத்துக்குத் தலைவனே! எவை யெல்லாம் பொய் யோ அவையெல்லாம் அந்த யாகத்தில் விழுந்து அழியுமாறு வந்தருளினாய்.

எனக்கு மெய்ஞ்ஞானம் தருவதற்காக வந்தவனே! உண்மை அறிவாக ஒளிவிடும் மெய்ச்சுடரே! எந்த ஞானமும் இல்லாத எனக்கும் இன்பமான பெருமானே!

அறியாமையைப் போக்கும் நல்லறிவே!
மெய்– எதனால் நன்மை கிடைக்கிறதோ அது மெய்.
பொய் – எந்த நிகழ்வினால் நன்மை கிடைக்கவில்லையோ அது பொய்.
எஞ்ஞானம் இல்லாதேன்

சைவ சித்தாந்தத்தில் ஞானம் 3வகை.
1. பாச ஞானம் – லௌகீகத்தில் (உலகியலில், பந்த பாசத்தில்) கட்டப் பட்டிருப்பதை உணர்வது பாச ஞானம்.

2. பசு ஞானம். – இந்த லௌகீகத்திலிருந்து தப்பிப் பதியிடம் செல்ல வேண்டும் என உணர்வது பசு ஞானம்.

3.பதி ஞானம் – பாசத்தை மறந்து, பசுநிலை தாண்டி, 'எல்லாம் அந்தப் பதி' என்று உணர்ந்து பதியோடு போய்ச் சேர்வது பதி ஞானம்.

எஞ்ஞானம் இல்லாதேன் – இந்த மூன்று ஞானங்களில் எந்தவொரு ஞானமும் இல்லாதவன் நான்.

# ஓங்காரமாய் நின்ற மெய்யா

**எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன், எம்பெருமான்**
**மெய்யேஉன் பொன்னடிகள் கண்டு இன்று வீடு உற்றேன்**
**உய்யஎன் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற**
**மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்**
**ஐயா எனஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே !**

**– மாணிக்கவாசகர்**
**அருளிய திருவாசகம், (சிவபுராணம்)**

**பாடலின் பொருள்:** எம்பெருமானே! அசையும் மற்றும் அசையாதவற்றால் ஆன இந்த அண்டம் முழுவதும் சென்று எல்லாப் பிறப்பும் பிறந்து களைத்துவிட்டேன். சத்தியமாக, மெய்ம்மையாக இருக்கின்ற உன் பொன்னடிகளை அடைந்ததனால் இன்று நான் வீடுபேறு அடைந்தேன்.

நான் உய்யும் வகையில் என் உள்ளத்துக்குள் ஓங்காரமாய் நின்ற மெய்யானவனே! ஜீவனாக, ஜீவநாதமாக ,இருப்பவனே!
அஉம் – ஓம் – பிரணவம். – ஓங்காரம்.

மாசற்றவனே! இடபத்தில் ஏறியவனே! வேதங்கள் ஐயா என ஏதேதோ சொல்லி அழைக்கின்றன. என்ன சொல்லி அழைத்தாலும் இறைவன் ஓங்கி உயர்ந்து, ஆழ்ந்து அகன்ற பரந்த அளவில் வியாபித்து இருந்தாலும், நுண்பொருள் ஆனவனே! நுட்பமான பொருளுக்குத் தான் எங்கும் நிறைந்திருக்கும் தன்மையுண்டு.

ஓம் என்ற ஒலி அ, உ, ம் என்ற மூன்று ஒலிகளாய்ப் பிரிந்து, அம்மூன்றும் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களக் குறிக்கும்.

இறைவனுடைய பெருமையை வேதங்களாலும் முழுமையாக அறிய முடியாது. வேதம் என்பது அறிவு நூல். அறிவால் இறைவனைக் காண முடியாது; அருளால் தான் காண முடியும்.



# வேண்டும் பரிசு ஒன்று உண்டு

**வேண்டத் தக்கது அறிவோய் நீ வேண்ட**
**முழுதும் தருவோய் நீ**
**வேண்டும் அயன்மாற்கு அரியோய்நீ வேண்டி**
**என்னைப் பணிகொண்டாய்**
**வேண்டி நீயாது அருள்செய்தாய் யானும்**
**அதுவே வேண்டின் அல்லால்**
**வேண்டும் பரிசுஒன்று உண்டென்னில்**
**அதுவும் உன்றன் விருப்பன்றே.**

**– மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம்**

**பாடலின் பொருள்:** உயிர்களுக்குத் தேவையானது இது என்று அறிந்தவன் நீயே. மேலும் அவ்வுயிர்கள் எவற்றை வேண்டினாலும் அவை எல்லாவற்றையும் அருளுபவனும் நீயே. உன்னைக் காண விரும்பிய திருமாலும் பிரமனும் உன் அடிமுடியைக் காண இயலாதவாறு ஒளிப்பிழம்பாய் நின்றவனாகிய நீ, நீயாகவே விரும்பி என்னை உன் அடிமையாக ஏற்றுக் கொண்டாய். என் பொருட்டு நீ விரும்பி எதனை அருள் செய்தனையோ, அதுவே நானும் விரும்புவது . நானாக விரும்புகின்ற பொருள் ஒன்று பஇருக்குமானால் அது உன்னிடத்தில் நான் வைக்கின்ற அன்பு அல்லவா.

பல சமயங்களில் இறைவன் சன்னிதியில் நிற்கும்போது, நமக்கு எத்தனையோ விருப்பங்கள் இருந்தும் எதையும் கேட்கத் தோன்றுவதில்லை. அதற்குக் காரணம் நமக்கு எப்போது என்ன தேவை என்பது நம்மை விட நம்மை ப் படைத்த இறைவனுக்கு நன்றாகத் தெரியும் என்று நாம் நம்புவதால் தான்.

அயன் மால்க்கு அரியோய் – ஒரு சமயம் பிரமன், திருமால் இருவரிடையே இருவரில் யார் பெரியவர் என்ற சர்ச்சை ஏற்பட்டது. அதைத் தீர்த்து வைப்பதற்காகச் சிவபெருமான் ஒளிப்பிழம்பாக நிற்கிறார். அவரது முடியைத் தேடிப் பிரமன் அன்னப்பறவையாகப் பறக்கிறார். காலடியைத் தேடித் திருமால் பன்றி உருவெடுத்துக் கீழே செல்கிறார். ஆனால் இருவருக்கும் சிவனின் அடி முடி தென்படவில்லை. இருவரின் கர்வமும் கலைந்தது.



# எம்பெருமான்

**புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்**
**பல்வி(மி)ருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்**
**கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்**
**வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச்**
**செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்**
**எல்லாப் பிறப்பும் பிறந்துஇளைத்தேன்**
**எம்பெருமான்.**

**– மாணிக்கவாசகர் அருளிய சிவபுராணம்**

**பாடலின் பொருள்:** அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது. இந்த மானிடப் பிறவி அத்துணை எளிதில் கிடைக்கக் கூடியது இல்லை.

கல்லாய்க் கிடந்த உயிர் புல், பூண்டு, மரம் ஆகிய அசையாத உயிர்களாகவும், புழு, பாம்பு, பல்வேறு மிருகமாகியும், மனிதராய், பேயாய், கணங்களாய், அசுரராய், முனிவராய், தேவராய் என்று அசையும் பொருள்களாக இருக்கும் எல்லாப் பிறவியையும் எடுத்துக் களைத்து விட்டேன் என்று மாணிக்கவாசகர் கூறுகிறார்.

புல்லும் மரமும் தொடு அறிவு மட்டுமே கொண்ட ஓர் அறிவு உயிர்கள். நத்தை, சிப்பி போன்றவை வாயறிவு (சுவை) கூடிய ஈரறிவு உயிர்கள். செல்லு, எறும்பு போன்றவை மூக்குஅறிவு(நாற்றம்) கூடிய மூன்றறிவு உயிர்கள்.

நண்டு, தும்பி போன்றவை கண்அறிவும் கூடிய நான்கறிவு உயிர்கள். மாவும் மாக்களும் ஆகிய விலங்கினங்கள் செவியறிவும் கூடிய ஐந்து அறிவு உயிர்கள். உயிர்களுக்கு ஆறாவதாகக் கிடைத்தது தான் மக்கள் பிறப்பு(மனிதன்). இந்த மானிடப் பிறப்பில் புலன் அறிவுகள் ஐந்தோடு மன அறிவாகிய ஆறாம் அறிவையும் பெற்ற உயர்பிறவியாக மானிடப் பிறவி அமைந்துள்ளது என்று தொல்காப்பியம் என்ற மிகப் பழமையான இலக்கண நூல் கூறுகிறது. உயிர்களின் பரிணாம வளர்ச்சியையும், இந்த மனிதப் பிறவி கிடைப்பதற்கு முன் உயிர் படும் பாட்டையும இப்பகுதியில் மாணிக்க வாசகர் விளக்குகிறார்.



# எண்ணிறந்த எல்லை இலாதானே.

> **கண்ணுதலான் தன் கருணைக் கண்காட்ட வந்து**
> **எய்தி எண்ணுதற் கெட்டா எழிலார் கழல் இறைஞ்சி**
> **விண்நிறைந்து மண்நிறைந்தும் மிக்காய் விளங்கு ஒளியாய்**
> **எண்ணிறந்து எல்லை இலாதானே நின் பெருஞ்சீர்**
> **பொல்லா வினையேன் புகழும்ஆறு ஒன்றறியேன்.**
>
> **– மாணிக்கவாசகர் திருவாசகம், சிவபுராணம்**

**பாடலின் பொருள்:** நெற்றிக் கண்ணனாகிய சிவபெருமான் தனது அருட்கண்ணால் எனக்கு வழி காட்டி உணர்த்துவதற்காகக் குருந்த மரத்தடியில் வந்துஇருந்தார். அவருடைய திருவடிகள் நினைத்துப் பார்க்க முடியாத அளவுஅழகு நிறைந்தவை. கருணை மிக்கவை. அப்படிப்பட்ட சிந்தனைக்கு எட்டாத பேரழகு மிக்க கழல் அணிந்த திருவடிகளைத் தொழுது நின்று, வானம், பூமி மற்றும் இவை தவிர ஒளிப் பிழம்பாயும் இருப்பவனே!

அளவிடும் எல்லைகளை யெல்லாம் கடந்து நிற்கும் பெருமானே! உன் அளவிடற்கு அரிய பெருமைகளைக் கொடிய வினைகளில் அமிழ்ந்து கிடக்கும் நான் புகழ்ந்து போற்றும் வகை சிறிதும் தெரியாது இருக்கின்றேன்.

திருவாதவூரராகிய மாணிக்க வாசகர் அரிமர்த்தன பாண்டிய மன்னனிடம் தலைமை அமைச்சராக இருந்தபோது அரசன் ஆணையை ஏற்றுக் குதிரைகள் வாங்கத் திருப்பெருந்துறை வழியாகச் செல்கிறார். அப்போது வழியில் ஒரு குருந்த மரத்தின் அடியில் ஆசானாக வந்திருந்து சிவஞான போதம் என்னும் சிவ அறிவினை ஊட்டினார். பக்குவப்பட்ட ஆன்மாக்களுக்குச் சிவபெருமானே மானிடச் சட்டை தாங்கி வந்து குருவாக அருள் செய்வான் என்று சைவ சித்தாந்த நூல்கள் குறிப்பிடுகின்றன.

சிவபெருமானின் நெற்றிக் கண்ணின் மறக் கருணையால் மன்மதன் அழிந்தான். அதே நெற்றிக் கண்ணின் அறக்கருணையால் முருகப் பெருமான் அவதரித்தார்.



# நாமார்க்கும்குடியல்லோம்

நாமார்க்கும் குடியல்லோம்
நரகத்தில் இடர்ப்படோம் நிலை இல்லோம்
இன்பமே எந்நாளும் துன்பமில்லை
தாமார்க்கும் குடியல்லாத் தன்மை யான
சங்கரன்நற் சங்கவெண் குழையோர் காதில்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்ம்மலர்ச்சே வடியினையே குறுகினோமே.
– திருநாவுக்கரசர் தேவாரம்.

**பாடலின் பொருள்:** “சிவபெருமானின் மலர் போன்ற திருவடிகளை அடைக்கலமாய் அடைந்துவிட்டமையால், நாம் யாருக்கும் அடிமையாக மாட்டோம். இயமனுக்கும் அஞ்ச மாட்டோம். நரகத்தை அடைந்து துன்பப் படவும் மாட்டோம்.

பொய்யும் புரட்டும் இனி நம்மை அணுகுவதில்லை. என்றும் ஆனந்தமாக இருப்போம். நோய் என்பதையே அறியாது இருப்போம். வேறு யாரையும் பணிந்து நிற்க மாட்டோம். எந்நாளும் நமக்கு இன்பமே ஏற்படும். துன்பம் என்பதை நாம் அறிய மாட்டோம். தனக்கென்று ஒரு தலைவன் இல்லாதவனும், வெண்குழையை ஒரு காதில் அணிந்த அரசனுமாகிய ஆதி சங்கரனுக்கு மட்டுமே நாம் அடிமையாக இருப்போம்” என்று திருநாவுக்கரசர் பாடுகிறார்.

**விளக்கம்:** சிறு வயதில் பெற்றோரை இழந்து தமக்கை திலகவதியாரால் வளர்க்கப்பட்ட மருள்நீக்கியார் இளவயதில் சமண மதத்தைச் சார்ந்து இருந்தார். திலகவதியாரின் வேண்டுதலால் அவருடைய தம்பி க்குச் சூலை நோயை உண்டாக்கினார் ஈசன். சமண மருத்துவர்களால் குணப்படுத்த முடியாத நிலையில் அவர் தம் சகோதரியின் உதவியை நாடினார். திலகவதியாருடன் திருவதிகை வீரட்டானம் கோயிலுக்குச் சென்று, திருநீற்றைப் பூசி, ஈசனை வேண்டி, “கூற்றாயினவாறு” எனத் தொடங்கும் பதிகத்தைப் பாடிச் சூலை நோய் நீங்கப் பெற்றார்.

சிவபெருமானின் அசரீரி வாக்கால் “திருநாவுக்கரசர்” என்று அழைக்கப்பட்டார். அன்று முதல் சமண மதத்தை விட்டுச் சைவ மதத்தில் நிற்கத் தொடங்கினார். அதனால் கோபமுற்ற சமண மதத்தைச் சார்ந்து இருந்த பல்லவ மன்னன், அவரைத் தண்டிப்பதற்காக, அவரை அழைத்துவர ஏவலர்களை அனுப்பினான். ஏவலர்கள் வந்து அரசனின் ஆணை பற்றிக் கூறிய போது, அதற்கு மறுமொழியாகத் திருநாவுக்கரசர் பாடிய பதிகம் இது. அதனால் இப்பதிகம் மறுமாற்றுத் தாண்டகம் என அழைக்கப்படுகிறது.



# ஆராத இன்பம்

**ஆராத இன்பம் அருளும் மலை போற்றி**
**சிவன்அவன்என் சிந்தையுள் நின்ற அதனால்**
**அவன்அரு ளாலே அவன்தாள் வணங்கிச்**
**சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை முந்தை**
**வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்.**

**– மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம்**

**பாடலின் பொருள்:** தெவிட்டாத இன்பம் தரக்கூடிய மலை போலும் கருணையுடையவனுக்கு வணக்கம். சிவபெருமானாகிய அவன் என் மனதில் நிலை பெற்றிருந்ததனால் அவனுடைய திருவருளாலே அவனுடைய திருவடிகளை வணங்கி, மனம் மகிழும்படியும், சிவனது அநாதி முறைமையான பழமையை முன் செய்த வினைகள் முழுமையும் கெடுமாறு யான் சொல்லுவேன்.

புராணம் – ஆதிகாலத்தில் நடந்த நிகழ்ச்சிகளின் தொகுப்பு. சிவபுராணம் – சிவனது அனாதி முறைமையான பழமை – எல்லாம் வல்ல சிவபெருமான் மிகமிகப்பழமையான காலத்திலிருந்து உயிர்களை எவ்வாறு ஆட்கொள்ளுகிறார்என்று சொல்கிறது இந்தச் சிவபுராணம். சிவபுராணம் படிப்பதனால் நாம் முன்செய்த வினை முழுதும் தொலைந்துவிடும். படித்தபின் நாம் இறைவனில் இரண்டறக் கலந்து விடுவோமாதலால், பின்னால் நாம் செய்யக்கூடிய வினை எதுவும் கிடையாது. அப்படியே இருந்தாலும், நாம் வேறு சிவம் வேறு என்ற நிலை மாறி நாமே சிவமாகி விடுவதால் நாம் செய்யும் வினைப் பயன்கள் நம்மைச் சாராது இறைவனையே சாரும் என்பதாம். எனவே நம் வினைமுழுதும் தொலையுமாறு மன மகிழ்ச்சியுடன் நான் சிவபுராணத்தை உரைக்கிறேன் என்கிறார் மாணிக்கவாசகர்.



# ஈசன் திருவடிகள்



ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன் சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி
மாயப் பிறப்பு அறுக்கும் மன்னன் அடி போற்றி
சீரார் பெருந்துறை நம் தேவன் அடி போற்றி
ஆராத இன்பம் அருளும் மலை போற்றி.

– மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம்

**பாடலின் பொருள்:** எல்லாவற்றுக்கும் தலைவனான ஈசனின் திருவடிகளைப் போற்றுவோம். எனக்காகக் குரு வடிவத்தில் வந்து குருந்த மரத்தடியில் காத்துக் கொண்டிருந்த அந்த ஈசனே எனக்குத் தந்தை . அவன் தாள்களைப் போற்றுவோம்.

தேசன் என்பது தேஜஸ் என்ற வடமொழியின் தமிழ் வடிவம். தேஜஸ் என்றால் ஒளி மயமானது என்று பொருள். ஒளி பொருந்திய இறைவனே எல்லா வற்றுக்கும் முழு முதலாக இருக்கும் சிவன். அவர் திருவடிகளைப் போற்றுவோம் .அடியவர்களின் மன இருளைப் போக்குபவன்.

எல்லா இடத்திலும் வியாபித்து இருக்கும் அவர் என் மேல் வைத்த நேசத்தால் எனக்காகத் தம்மைக் குரு வடிவத்தில் சுருக்கி க் கொண்டு வந்த , குற்றமே இல்லாதவர். அவர் திருவடிகளைப் போற்றுவோம்.

மாயையால் சூழ்ந்த இப்பிறப்பை அறுக்கக்கூடிய அத்தலைவனின் திருவடிகளைப் போற்றுவோம். சீரும் சிறப்பும் நிறைந்த திருப்பெருந்துறையில் உள்ள நம் தலைவர் அடிகளைப் போற்றுவோம். தெவிட்டாத இன்பம் தருகின்ற மலை போலும் கருணையடையவனுக்கு வணக்கம்.

வாழ்க 6 – 6 உட்பகைகளையும் ஒழித்து,
வெல்க 5 – ஐம்புலன்களையும் கட்டுப்படுத்தி
இறைவன் அருகில் போய் விட்டால் ,
போற்றி 8 – எண்குணத்தான் ஆகிய இறைவனைப் போற்றித் துதிக்கலாம்.
வாழ்க 6,
வெல்ல 5,
போற்றி 8.
திருவாசகப் பாடல்களின் மொத்த எண்ணிக்கை 658. திருத்தம் – வெல்க5

# பெருங்கருணைப் பேராறே



**பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கிஎன் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே**

**– மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம்**

**பாடலின் பொருள்:** அன்போடு கூடிய அருளைச் செய்து, என் மனதில் உள்ள வஞ்சகம் அழிய, பெயராமல் நின்ற பெருங்கருணையாகிய பெரிய நதியே! தெவிட்டாத அமிர்தமே! எல்லை யில்லாத பெருமானே!

ஆராயாதவர் மனதில் மறைந்திருக்கின்ற ஒளியை உடையவனே! என் மனத்தை நீர் போல உருகச் செய்து, என் அரியஉயிராய் நின்றவனே! இன்ப துன்பங்களுக்கு அப்பாற்பட்டவனே!என் உள்ளத்தில் உள்ளவனே!"

இறைவன் உயிர்களிடம் அவரவர் தன்மைக்கேற்ப , அறக்கருணை மறக்கருணை காட்டி நல்வழிப் படுத்துகிறார். மாணிக்க வாசகர் சிவபெருமான் தமக்கு அறக்கருணை புரிவதன் மூலம் நெஞ்சின் வஞ்சமெல்லாம் அகல வழிவகை செய்துவிட்டதாகப் போற்றுகிறார்.

ஒளிக்கும் ஒளியானே இறைவன் எல்லாருடைய உள்ளத்திலும் உள்ளார். எங்கும் நிறைந்தும் அதே சமயம் எல்லாம் கடந்தும் இருப்பதால் அவரைக் கடவுள் என்கிறோம். ஆயினும் ஆர்வமும் முயற்சியும் உடையவர்கள் இறைவன் திருவருளால் அவரை உணர்கிறார்கள். மற்றவர்கள் அவர் மிக அருகில் பேரொளியாய் இருந்தும் காண இயலாதவர்களாக உள்ளனர்.

இறைவனின் எண்குணங்களில் ஒன்று வரம்பில் இன்பம் உடைமை. இறைவனுக்குப் பிறவற்றால் எவ்வித இன்பமோ துன்பமோ இல்லை. அது தன் வற்றாத இன்பத்தில் என்றும் மகிழ்ந்திருக்கும்.

**அறக்கருணை:** நல்வழியில் நடப்பவர்க்கு நல்லருள் புரிவது அறக்கருணை எனப்படும்.

**மறக்கருணை:** அல்லாத வழியில் நடப்பவரை, அவர் வினையின் வழியே தண்டித்துத் திருத்தி அருள் புரிவது மறக்கருணை எனப்படும். இவ்விரண்டுமே இறைவன் உயிர்கள் மீது வைத்த பெருங்கருணை காரணமாக நிகழ்வது ஆகும்.

# சுந்தரரின் தோத்திரம்

**எங்கேனும் இருந்து உன் அடியேன் உனை நினைந்தால்**
**அங்கே வந்து என்னோடும் உடனாகி நின்று அருளி**
**இங்கே என் வினையை அறுத்திட்டு எனை ஆளும்**
**கங்கா நாயகனே கழிப்பாலை மேயானே.**

**– சுந்தரர் தேவாரம்**

**பாடலின் பொருள்:** “உன் அடியவனாகிய நான் எந்த இடத்தில் இருந்து கொண்டு உன்னை நினைத்தாலும், உடனே அவ்விடத்துக்கு வந்து என்னோடு கூடத் துணையாகி நின்று அருள் செய்து, இவ்வுலகத்திலேயே என்னுடைய வினைத் தொடர்பை வேரறுத்து என்னை ஆட்கொள்ளுகின்ற கங்கையின் நாயகனே, திருக்கழிப்பாலையில் எழுந்தருளியவனே. இறைவன் வேண்டுவோர்க்கு, வேண்டியவற்றை, வேண்டும்போது எல்லாம் தவறாமல் அருளுவார் என்கிற நம்பிக்கை யைத் தரும் பதிகம்.



# பரிசுத்தமான சோதிவடிவானவன்



**கற்ப கத்தினைக் கனகமால் வரையைக்**
**காம கோபனைக் கண்ணுத லானைச்**
**சொற்ப தப்பொருள் இருள்அறுத்து அருளும்**
**தூய சோதியை வெண்ணெய்நல் லூரில்**
**அற்பு தப்பழ ஆவணம் காட்டி**
**அடியனா என்னை ஆளது கொண்ட**
**நற்ப தத்தை நள்ளாறனை அமுதை**
**நாயினேன் மறந்து என்நினைக் கேனே.**

**– சுந்தரர் தேவாரம்**

**பாடலின் பொருள்:** அடியார் வேண்டுவதைத் தரும் கற்பகத்தரு போன்றவனும், பெரிய பொன் மலையாகிய மேருவைப் போன்ற பொன்மேனி உடையவனும், நெற்றிக் கண்ணை உடையவனும், காமனைக் கோபித்து எரித்தவனும், வேத மந்திரங்களின் உட்பொருளாகிய, அறியாமையாகிய இருளை நீக்கி யருளும் பரிசுத்தமான சோதிவடிவானவனும், திருவெண்ணெய் நல்லூரில் அன்று அதிசயமான பழைய அடிமை ஓலையைக் காட்டி என்னைத் தடுத்தாட் கொண்டவனும், திருநள்ளாற்றில் எழுந்தருளியிருப்பவனும், அன்பர்களுக்கு அமிர்தமாய் இருப்பவனும் ஆகிய பெருமானை நாய் போல் கடைப்பட்டவனாகிய நான் மறந்து வேறு எதை நினைப்பேன்!

அற்புதப் பழ ஆவணம் காட்டி – கயிலையில் சிவபெருமானுக்குத் தொண்டாற்றி வந்த ஆலால சுந்தரர் இறைவர் கட்டளைப்படி திருநாவலூரில், ஆதிசைவ குலத்தில் சடையனார், இசைஞானியார் என்ற தம்பதியருக்கு மகனாகப் பிறந்து வளர்ந்து வந்தார். திருமண வயது வந்ததும் அவருக்குத் திருமண ஏற்பாடுகள் நடந்தன. சிவபெருமான் ஏற்கெனவே சுந்தரருக்கு வாக்களித்தபடி அவரைத் தடுத்தாட் கொள்ள நினைத்து, இறைவர் முதிய அந்தணர் வடிவில் வந்து ஒரு பழைய ஓலையைக் காட்டி, ‘‘நீ எனக்குப் பரம்பரை அடிமை’’ என்று கூறித் திருமணத்தை நிறுத்தித் திருவெண்ணெய் நல்லூருக்கு அழைத்துச் சென்றார். இறைவர் தம்மைத் தடுத்தாட் கொண்டதை இப்பாடலில் நினைவு கூறுகிறார் சுந்தரர்.

# திரிபுரம் எரித்தல்

**வெய்தாய வினைக்கடலில் தடுமாறும் உயிர்க்கு**
**மிகஇரங்கி அருள்புரிந்து வீடுபேறு ஆக்கம்**
**பெய்தானைப் பிஞ்ஞகனை மைஞ்ஞவிலும் கண்டத்து**
**எண்தோள்எம் பெருமானைப் பெண்பாகம் ஒருபால்**
**செய்தானைச் செக்கர்வான் ஒளியானைத் தீ வாய்**
**அரவாடு சடையானைத் திரிபுரங்கள் வேவ**
**எய்தானை எறிகெடில வடவீரட் டானத்து**
**உறைவானை இறைபோதும் இகழ்வன்போல் யானே.**

**– சுந்தரர் தேவாரம்**

**பாடலின் பொருள்:** “கொடியதாகிய இரு வினைக் கடலில் தடுமாறுகின்ற உயிர்களுக்குக் கருணையினால் மிகவும் இரங்கி அருள் செய்து, முத்தி பெறுதலாகிய பெருஞ்செல்வத்தினைத் தருபவனும், தீமையை அழிப்பவனும் , கருநிறம் கொண்ட கண்டத்தினையும் எட்டுத் திருக்கரங்களையும் உடைய எம் தலைவனும், தம் திருமேனியில் ஒரு பாதியை சக்தியாகிய பெண்ணின் பாகமாக ஆக்கிக் கொண்டவனும், மாலை நேரத்துச் செவ்வானம் போல் ஒளியுடையவனும், தீப்போலும் விடம் பொருந்திய வாயை யுடைய பாம்பு படம்எடுத்து ஆடுகின்ற சடையை உடையவனும், ஆகாயத்தில் திரிகின்ற மூன்று கோட்டைகளைத் தன் புன்னகையால் எரித்து அழித்தவ னும், கெடில நதியின் வடக்கில் உள்ள திருவதிகை வீரட்டானம் என்னும் தலத்தில் எழுந்தருளியிருப்பவனுமான எம்பெருமானை ஒரு கணப்பொழுதும் நான் மறந்து அலட்சியம் செய்வேனோ?”

திரிபுரம் எரித்தல் – நமக்குள் இருக்கும் உட்பகையாகிய முக்குணம், மும்மலம் போன்றவற்றை அழித்து அருள் செய்தல்.

இகழ்வன் போல் – திருநாவுக்கரசர் திருத்தொண்டு செய்த திருவதிகை யை மிதிப்பதற்கு அஞ்சி, அருகிலிருந்த சித்தி வட மடத்தில் புகுந்து படுத்து உறங்கும்போது சிவபெருமான் ஒரு அந்தணராக வந்து, அவரது தலையைத் தம் காலால் தீண்ட, வந்தவர் இறைவன் என்பதை அறியாது சுந்தரர் கோபித்து இகழ்ந்ததைக் குறிப்பிடுகிறார்.



# ஆளிலை எம்பெருமான்

**நீள நினைந்தடியேன் உமைநித்தலும் கைதொழுவேன்**
**வாளன கண்மடவாள் அவள்வாடி வருந்தாமே**
**கோளிலி எம்பெருமான் குண்டையூர்ச் சிலநெல்லுப் பெற்றேன்**
**ஆளிலை எம்பெருமான் அவைஅட்டித் தரப்பணியே**

**– சுந்தரர் தேவாரம்**

**பாடலின் பொருள்:** திருக்கோளிலியில் எழுந்தருளிய எம்பெருமானே! உமது அடியவனாகிய நான் உம்மை நெடுக நினைத்துத் தினந்தோறும் முறையாகத் தொழுவேன். வாள் போலும் கண்களையுடைய பரவை நாச்சியார் பசியால் வாடி வருந்தா வண்ணம், குண்டையூரில் உமது அருளால் சிறிது நெல்லைப் பெற்றுள்ளேன். அதனைத் திருவாரூரில் கொண்டு சேர்க்க ஆள் இல்லை. எம்பெருமானே! அதனைக் கொண்டுபோய்ச் சேர்க்கக் கட்டளையிட்டு அருள்வீராக.

திருத்தொண்டத்தொகை அருளித் திருவாரூரில் எழுந்தருளியிருக்கும் சுந்தரரிடத்தில் அளவற்ற அன்பு கொண்ட குண்டையூர் கிழார் செந்நெல், பருப்பு முதலிய பொருட்களைத் தவறாமல் கொடுத்து வந்தார். ஒரு முறை வானம் மழை பெய்யாமையால் அவர் நிலத்தில் விளைச்சல் குறைந்தது. அதனால் சுந்தரருக்குப் பொருட்கள் வழங்கமுடியாமல் குண்டையூர் கிழார் வருந்தினார். இரவு உணவு உண்ணாமல் உறங்கினார். இறையருளால் நெல் குவியல் குவியலாக நிரம்பியது. இறையருளை வியந்து நெகிழ்ந்த குண்டையூர்கிழார் சுந்தரருக்குச் செய்தியைக் கூறி, அவ்வளவு நெல்லையும் அனுப்பி வைக்கத் தன்னிடம் ஆள் இல்லை என்று கூறினார். சுந்தரரும் அருகிலிருந்த திருக்கோளிலி என்ற தலத்திற்குச் சென்று இறைவனிடம் நெல் எடுக்க ஆள் வேண்டிப் பாடியருளியது இப்பதிகம். இறைவனும் அவர் வேண்டுகோளை யேற்றுத் தம் பூதகணங்களை அனுப்பி அந்த நெல் முழுவதையும் திருவாரூர் கொண்டு சேர்த்தார் என்பது பெரியபுராணச் செய்தி



# திருவோணகாந்தன்தளி

**நெய்யும் பாலும் தயிரும் கொண்டு**
**நித்தல் பூசனை செய்யலுற்றார்**
**கையில் ஒன்றும் காணம் இல்லைக் கழலடி**
**தொழுது உய்யினல்லால்**
**ஐவர் கொண்டிங்கு ஆட்ட ஆடி**
**ஆழ்குழிப் பட்டழுந்து வேனுக்கு**
**உய்யுமாறு ஒன்று அருளிச் செய்யீர்**
**ஓண காந்தன் தளியுளீரே .**

**– சுந்தரர் தேவாரம்**

**பாடலின் பொருள்:** “திருவோணகாந்தன்தளி என்னும் திருத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் பெருமானே! நெய், பால், தயிர் முதலியவற்றால் உம்மை நாள்தோறும் வழிபடுவோரது கையில் காசு ஒன்றும் காணப்படுவதில்லை. உமது கழல் அணிந்த திருவடிகளைத் தொழுது உம்மிடமிருந்து ஏதேனும் பெற்றாலன்றி வேறு வழியில்லை.

இவ்வுலகத்தில் ஐம்புலன்களாலும் ஐந்து பக்கம் ஈர்த்துச் சுழலச் சுழன்று, அச்சுழற்சியினால் உண்டாகும் இன்ப துன்பங்களாகிய ஆழ்ந்த குழியில் அழுந்தித் தவிப்பவனாகிய எனக்கு, அதனின்றும் கரையேறும் வழியொன்றைச் சொல்லி யருள்வீர்.” என்று இறைவனிடம் வேண்டுகிறார்.

ஓணன், காந்தன் என்ற அசுரர்கள் வழிபட்டுப் பேறு பெற்ற காரணத்தால் இத்தலம் ஓணகாந்தன்தளி என்று பெயர் பெற்றது. இத்தலத்திற்கு வந்த சுந்தரர், இறைவனிடம் அடிமைத் திறம் பேசி, இப்பதிகம் பாடிப் பொன் பெற்றார் என்பது வரலாறு.



# இவ்வழிப் போந்த அதிசயம்

**வடிவுடை மழுஏந்தி மதகரி உரிபோர்த்துப்**
**பொடியணி திருமேனிப் புரிகுழல் உமையோடும்**
**கொடியணி நெடுமாடக் கூடலை யாற்றூரில்**
**அடிகள்இவ் வழிப்போந்த அதிசயம் அறியேனே.**

**– சுந்தரர் தேவாரம்**

**பாடலின் பொருள்:** அழகிய தோற்றத்தை யுடைய மழு என்ற ஆயுதத்தை வலக்கையில் தாங்கி, தாருக வனத்து ரிஷிகள் ஏவிய மதயானையின் தோலை உரித்துப் போர்த்துக் கொண்டு, திருநீற்றை அணிந்த திருமேனியின் பாதியில் பின்னிய கூந்தலையுடைய உமாதேவியாரோடும், கொடிகள் அழகு செய்யும் பெரிய மாளிகைகளை யுடைய திருக்கூடலை யாற்றூர்ப் பெருமான் இவ்வழியே என் கண்கள் காண எதிர்வந்த அதிசயம் இன்னவாறு என்று அறியேனே.

திருமுதுகுன்றத்துக்குப் போகும் நோக்கத்துடன் திருக்கூடலை யாற்றூரின் வழியாகச் செல்லும்போது, பெருமான் ஓர் அந்தணர் வடிவுடன் அவர் முன் தோன்றினார். அவரிடம் சுந்தரர் திருமுதுகுன்றுக்கு வழி கேட்க, அவரும் இதுதான் திருமுதுகுன்றூர் போகும் வழி என்று கூறி, வழிகாட்டிக் கொண்டே சிறிது தூரம் சென்று மறைந்தார். அப்போது அந்தணராக வந்த வரி இறைவரே என்று அறிந்து அதிசயித்துப் பாடியது இப்பாடல்.



# வலக்கண் பார்வை கிடைக்கப் பெற்றார்

**விற்றுக் கொள்வீர் ஒற்றி அல்லேன் விரும்பி ஆட்பட்டேன்**
**குற்றம் ஒன்றும் செய்தது இல்லை கொத்தை ஆக்கினீர்**
**எற்றுக்கு அடிகேள் என்கண் கொண்டீர் நீரே பழிப்பட்டீர்**
**மற்றைக் கண்தான் தாராது ஒழிந்தால் வாழ்ந்து போதீரே.**

**– சுந்தரர் தேவாரம்**

**பாடலின் பொருள்:** "நான் உம்மிடத்து யாரோ ஒருவரால் அடகு வைக்கப் பட்டவன் அல்லேன். நானே விரும்பி உமக்கு மீளா அடிமையாய் உமது உடைமையானேன். ஆதலால், நீர் வேண்டும்போது என்னை விற்றுக் கொள்வதற்கு உரிமை உடையவர். நான் என் மனம் அறிய ஒரு குற்றமும் செய்ததில்லை. இரக்கமின்றி என்னைக் குருடாக்கி விட்டீர். என் சுவாமியே, என் கண்ணை எதற்காக எடுத்துக் கொண்டீர்? இதனால் நீர் நம்பினவரைக் கெடுத்த பழிக்கு ஆளானீர். நான் கெட்டால் கெட்டுப் போகிறேன். என் மீது இரக்கம் கொண்டு என் வலக்கண் பார்வையையும் தந்து அருளாவிட்டால், திருவாரூர்ப் பெருமானே! நீரே வாழ்ந்து விட்டுப் போம்."

"மீளா அடிமையாகிவிட்ட நான் உம்மிடமன்றி வேறு எங்கு சென்று முறையிடுவேன் என்று இப்படியெல்லாம் மனம் புழுங்கி முறையிட்டதன் பயனாகச் சுந்தரர் திருவாரூர்ப் பெருமான் அருளால் வலக்கண் பார்வையும் கிடைக்கப் பெற்றார்.



# இறைவனின் கருணை

**ஆலம்தான் உகந்து அமுதுசெய்தானை**
**ஆதியை அமரர் தொழுதேத்தும்**
**சீலம்தான் பெரிதும் உடையானைச்**
**சிந்திப்பார் அவர்சிந்தை உளானை**
**ஏலவார் குழலாள் உமைநங்கை**
**என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற**
**காலகாலனைக் கம்பன் எம்மானைக்**
**காணக் கண்அடியேன் பெற்றவாறே.**

**– சுந்தரர் தேவாரம்**

**பாடலின் பொருள்:** பாற்கடலிலிருந்து வந்த ஆலகால விடத்தை "த்" தான் உண்டு, தேவர்கட்கு அமுதம் கிடைக்க வழி வகுத்தவனும், அனைத்திற்கும் ஆதியாக விளங்குபவனும், தேவர்களால் தொழப்படுபவனும் தன்னைச் சிந்திக்கும் அடியார்களின் சிந்தையில் குடியருப்பவனும், ஏலவார்குழலி என்ற பெயர் கொண்ட உமாதேவியால் வணங்கப்படுபவனும், காலனுக்குக் காலனாக விளங்கியவனும் ஏகம்பன் என்ற பெயருடன் திருஏகம்பத்தில் எழுந்தருளியிருப்பவனுமாகிய எம்பெருமானை நேரில் கண்டு மகிழ்வதற்கு அடியேன் இடது கண் பெற்றது வியப்பான செயல் என்று இறைவன் கருணையை வியந்து மகிழ்கிறார் சுந்தரர்.



# நெற்றிக்கண் உடையான்

**நெற்றிக்கண் உடையானை நீறு ஏறும் திருமேனிக்**
**குற்றமில் குணத்தானைக் கோணாதார்**
**மனத்தானைப்**
**பற்றிப் பாம்புஅரை ஆர்த்த படிறன்தன்**
**பனங்காட்டூர்ப் பெற்றொன்று ஏறும்பிரானைப்**
**பேசாதார் பேச்சென்னே.**

**– சுந்தரர் தேவாரம்**

**பாடலின் பொருள்:** நெற்றிக் கண்ணை உடையவனும், திருநீறு பூசிய திருமேனி கொண்டவனும், குற்றம் ஒன்றும் இல்லாதவனும், எட்டுக் குணங்களை உடையவனும், ஒழுக்க நெறியிலிருந்து விலகாதவருடைய மனத்தில் எப்போதும் இருப்பவனும், பாம்பை இடுப்பில் அணிந்தவனும், அடியவர் மனதைக் கவரும் கள்வனும், திருப்பனங்காட்டூரில் ஓர் இடபத்தின் மேல் ஏறுபவனும் ஆகிய சிவபெருமானைப் புகழ்ந்து பேசாதவருடைய பேச்சு என்ன பேச்சு!



# பண்ணிடைத் தமிழ் ஒப்பாய்

**தினம் ஒரு தோத்திரம்.**
**பண்ணிடைத் தமிழ்ஒப்பாய்**
**பழத்தினிற் சுவையொப்பாய்**
**கண்ணிடை மணிஒப்பாய்**
**கடுவிருட் சுடர்ஒப்பாய்**
**மண்ணிடை அடியார்கள்**
**மனத்துஇடர் வாராமே**
**விண்ணிடைக் குருகாவூர்**
**வெள்ளடை நீ அன்றே.**
**– சுந்தரர் தேவாரம்**

**பாடலின் பொருள்:** எம்பெருமானே! நீ இசைத்தமிழைப் போல இனிமையாய் இருக்கின்றாய். இனிய பழத்தின் சுவையைப் போன்று இருக்கின்றாய். கண்ணின் கண் உள்ள இனிய கருவிழியைப் போன்று இருக்கின்றாய். அஞ்ஞானமாகிய கொடிய இருட்டுக்கு அதனைப் போக்கவல்ல ஞான சூரியனாய் உள்ளாய். இப்பூமியில் அடியார்களின் மனத்தில் துன்பங்கள் வாராதபடிக் காத்துக் கொண்டு விண்ணளாவிய திருக்குருகாவூர் என்ற ஊரில் வெள்ளடை என்ற ஆலயத்தில் எழுந்தருளியிருப்பதும் நீயே அல்லவா!

சுந்தரர் திருத்தலங்கள் தோறும் செல்லும்போது, பசி தாகத்தால் வருந்திய சுந்தரர்க்கு, வரும் வழியில் சிவபெருமான் தண்ணீர்ப் பந்தல் அமைத்து, அந்தணர் வடிவத்துடன் தண்ணீரும், பொ திசோறும் வைத்துக் கொண்டு காத்திருந்து, வந்ததும் சுந்தரர்க்கும், உடன் வந்த திருத்தொண்டர்க்கும் அன்போடு அளித்துக் களைப்பை நீக்கிய தை உணர்ந்தபோது ஆதரவு பொங்கத் திருக்குருகாவூரில் பாடிய பதிகம் இது.



# புகலூர் பாடுமின்



**தம்மையே புகழ்ந்து இச்சை பேசினும்**
**சார்கினும் தொண்டர் தருகிலாப்**
**பொய்ம்மை யாளரைப் பாடாதே எந்தை**
**புகலூர் பாடுமின் புலவீர்காள்**
**இம்மையே தரும் சோறும் கூறையும்**
**ஏத்தலாம் இடர் கெடலுமாம்**
**அம்மையே சிவ லோகம் ஆள்வதற்கு**
**யாதும் ஐயுறவு இல்லையே.**

**– சுந்தரர் தேவாரம்**

**பாடலின் பொருள்:** திருமண நேரத்தில் எம்பெருமானால் தடுத்தாட் கொள்ளப்பட்ட நம்பியாரூரர் என்ற சுந்தரர் சிவபெருமான் எழுந்தருளி யிருக்கும் தலங்கள் தோறும் சென்று இறைவனைப் பாடி வந்தார்.

திருவாரூரில் பரவை நாச்சியாரை மணந்து இல்லறம் நடத்தி வந்த காலத்தில் ஒரு பங்குனி உத்திரத் திருநாளில் திருவிழாவிற்கு வரும் அடியவர்களுக்கு உணவளித்துக் கவனித்துக் கொள்ள விரும்பினார் பரவையார். ஆனால் அதற்குத் தேவையான பொருள் அவரிடம் இல்லை. துணைவியாரின் கவலையை அறிந்த சுந்தரர் திருப்புகலூர் சென்று சிவபெருமானைப் பதிகம் பாடித் தொழுதார். அன்று இரவு அக்கோயிலின் அருகிலேயே ஒரு செங்கல்லைத் தலையணையாக வைத்துக் கொண்டு உறங்கினார். விழித்துப் பார்த்தபோது இறைவன் திருவருளால் அந்தச் செங்கல் பொன்னாக மாறி யிருந்தது. பரவையாரின் மனக் குறையும் தீர்ந்தது. சுந்தரர் அப்போது பாடிய பதிகம் தான் இது. இனிப் பாடலின் பொருளைப் பார்ப்போம்.

“புலவர்களே ! இந்தப் பரந்த உலகில் இருக்கும் புரவலர்கள், தொண்டர்கள் தம்மை வெகுவாகப் புகழ்ந்து பாடினாலும், தம்மையே அவர்கள் சார்ந்து இருந்தாலும் அவர்களுக்கு ஏதும் தராமல் வருத்துவர். இத்தகைய பொய்ம்மையாளரைப் பாடாமல் நீங்கள் எமது தநதையாகிய புகலூர்ப் பெருமானைப் புகழ்ந்து பாடினால், இம்மையில் வாழ்நாள் முழுவதற்கும் தேவையான உணவு, உடை, உறையுள் (இருப்பிடம்) கிடைப்பதோடு, நம்மை வருத்தும் துன்பங்களும் கெடும் . மேலும் மறுமையிலும் நாம் சிவலோகத்தை ஆளும் வாய்ப்பும் கிடைக்கும் . இதற்கு எந்த விதமான சந்தேகமும் வேண்டாம் .”

# தினம் ஒரு தோத்திரம்

**பத்தராய்ப் பணிவார்கள் எல்லார்க்கும் அடியேன்
பரமனையே பாடுவார் எல்லார்க்கும் அடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன்
திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்
முப்போதும் திருமேனி தீண்டுவார்க்கு அடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்கும் அடியேன்
அப்பாலும் அடிச்சார்ந்தார் அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு அம்மானே.**

**– சுந்தரர் அருளிய திருத்தொண்டத்
தொகையில் ஒரு பகுதி.**

**பாடலின் பொருள்:**

சிவபக்தர்களாய்ச் சிவபெருமானை வழிபடுவோர் எல்லோர்க்கும் நான் அடியவன். பரம்பொருளாகிய அவனையே பாடிப் புகழ்வார் எல்லார்க்கும் நான் அடியவன்.உள்ளத்தைச் சிவனிடமே வைத்தவர்க்கும் நான் அடியவன் . பிறக்க முக்தி தரும் தலமாகிய திருவாரூரிலே பிறந்தவர் அனைவர்க்கும் நான் அடியவன். காலை, நண்பகல், மாலை ஆகிய மூன்று வேளையும் பெருமானின் திருமேனியைத் தொட்டு அபிடேகம் அருச்சனை செய்யும் பேறுபெற்றவராகிய ஆதி சைவர்க்கும் நான் அடியவன். பெருமை மிக்க திருநீற்றைப் பூசிய முனிவர்களுக்கும் நான் அடியவன். எங்கும் இருக்கும் இறைவனடியை அடைந்த பெ ரி யாருடைய எங்கும் இருக்கும் இறைவனடியை அடைந்த பெரியாருடைய அடியவர்க்கும் நான் அடியவன். நம்பியாரூரனாகியயான் திருவாரூரின் பெருமானுக்கு எப்போதும் அடிமையே.



# தேவாரம் - நெய்யும் பாலும்

**நெய்யும் பாலும் தயிரும்கொண்டு**
**நித்தல் பூசனை செய்ய லுற்றார்**
**கையில் ஒன்றும் காணம் இல்லைக் கழலடி**
**தொழுது உய்யினல்லால்**
**ஐவர் கொண்டிங்கு ஆட்ட ஆடி**
**ஆழ்குழிப் பட்டழுந்து வேனுக்கு**
**உய்யுமாறு ஒன்று அருளிச் செய்யீர்**
**ஓண காந்தன் தளியுளீரே .**

**– சுந்தரர் தேவாரம்**

**பாடலின் பொருள்:** “திருவோணகாந்தன்தளி” என்னும் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் பெருமானே! நெய், பால், தயிர் முதலியவை கொண்டு உம்மை நாளதோறும் வழிபடுபவர் கையில் காசு ஒன்றும் காணப்படுவதில்லை . உமது கழல்அணிந்த பாதங்களை வணங்கி ஏதேனும் பெற்றால் அன்றி இவ்வுலகில் வாழ முடியாது. ஐம்புலன்களும் தண்டல்காரர் போல ஐந்து பக்கம் பற்றி, ஈர்த்து, சுழற்றச் சுழன்று, துன்பம் என்னும் ஆழ்குழியில் விழுந்து அழுந்திப் போவேனாகிய எனக்கு அதனின்றும் கரையேறும் வழியொன்றைச் சொல்லி அருளீர்.

இந்தப் பாடலைப் பாடியதன் மூலம், சுந்தரர் இறைவனிடம் பொன்னும் பொருளும் பெற்றதாகக் கூறப்படுகிறது. இப்பாடலை ஓதுபவர்க்கு வாழ்வில் மனநிறைவும் ஆனந்தமும் கிடைக்கும்என்பது நம்பிக்கை.



# இறைவனை நினைத்தல்

**எண்ணியிருந்து கிடந்தும் நடந்தும்**
**அண்ணல் எனாநினை வார்வினை தீர்ப்பார்**
**பண்இசை ஆர்மொழி யார்பலர் பாடப்**
**புண்ணிய னார்உறை பூவணம் ஈதோ.**

**– சுந்தரர் தேவாரம்**

**பாடலின் பொருள்:** இறைவனுடைய திருவடிகளையே தியானித்துக் கொண்டு, இருந்தும், நடந்தும், படுத்தும் (எக்காலத்தும்) அளவிட முடியாத பெருமை யுடையவர் என்று அவரை நினைப்பவருடைய வினைகளைத் தீர்க்கும் பரிசுத்தராகிய பெருமான், பண்ணோடு கூடிய கீதம் போன்ற இனிய சொற்களை உடைய ஆடற் பெண்கள் பலர் துதி பாட, இனிதாக எழுந்தருளியுள்ள திருப்பூவணம் என்ற தலம் இதுவோ!

நாம் எச்செயலில் ஈடுபட்டு இருந்தபோதும் இறைவனை நினைத்தல் வேண்டும் என்று சுந்தரர் இப்பாடலில் அறிவுறுத்துகிறார்.



# அஞ்சுவது யாதொன்றும் இல்லை

> **நரம்பெழு கைகள் பிடித்து நங்கை நடுங்க மலையை**
> **உரங்கள் எல்லாம் கொண்டு எடுத்தான்**
> **ஒன்பதும் ஒன்றும் அலற**
> **வரங்கள் கொடுத்தருள் செய்வான்**
> **வளர்பொழில் வீரட்டம் சூழ்ந்து நிரம்பு**
> **கெடிலப் புனலும் உடையார் ஒருவர் தமர்நாம்**
> **அஞ்சுவது யாதொன்றும் இல்லை**
> **அஞ்ச வருவதும் இல்லை.**
>
> **– திருநாவுக்கரசர் தேவாரம்**

**பாடலின் பொருள்:** கயிலை மலையில் சிவபிரானுடன் இருந்த உமையம்மை பயத்தால் நடுங்குமாறு, தனது கைகளில் உள்ள நரம்புகள் புடைத்து எழ, தனது வலிமை முழுவதும் திரட்டிக் கயிலை மலையினைப் பெயர்த்த இராவணனது பத்துத் தலைகளும் கதறுமாறு, அவனை மலையின் கீழ் அழுந்துமாறு செய்தவரும், பின்னர் அவன் பாடிய சாமகானம் கேட்டு மகிழ்ந்து அவனுக்கு அருள் செய்தவரும், வளர்கின்ற சோலைகளை உடைய அதிகை வீரட்டத்தைச் சூழ்ந்து ஓடும் கெடில நதியினைத் தீர்த்தமாக உடையவரும் ஆகிய சிவபெருமானது அடியவனாகிய நான் எதற்கும் அஞ்ச மாட்டேன். எனக்கு அச்சம் விளைவிக்கக் கூடிய பொருள் இனித் தோன்றப் போவதும் இல்லை.''

**பதிகம் பாடிய சூழல்:** சமண சமயத்திலிருந்து திருநாவுக்கரசர் மீண்டும் சைவ சமயம் சார்ந்ததை அறிந்த மன்னன், சமண குருமார்களின் தூண்டுதல் பேரில் அவரைச் சுண்ணாம்புக் காளவாயில் இடுமாறு ஆணையிட்டான். பின் நஞ்சு கலந்த உணவை ஊட்டினர். எதுவும் அவரைப் பாதிக்கவில்லை. அவரை எப்படியாவது கொன்றுவிட வேண்டும் என்று எண்ணிய சமணர்கள் மதம் பிடித்த யானையை ஏவி மிதிக்கச் செய்தனர். தம்மைக் கொல்வதற்காக யானை வந்த சமயத்தில் அதனைப் பார்த்துத் திருநாவுக்கரசர் பாடி அருளிய பதிகம் இது. அப்படி ப் பதிகம் பாடியதும் அவரை அந்த யானைவலமாகச் சுற்றி வந்து எதிரில் நிலத்தில் வீழ்ந்து வணங்கிஎழுந்ததாம்.

நங்கை நடுங்க மலையை எடுத்தான். தன் தேரில் உலா வந்த இராவணனின் வழியில் கயிலை மலை குறுக்கிட்டது. வழித் தடையாக இருந்த அம்மலையைப் பெயர்த்து அகற்றக் கருதித் தேரிலிருந்து இறங்கி வந்து இராவணன் தன் இருபது கைகளாலும் மலையைப் பற்றி அசைத்தான். மலை அசைவதைக் கண்டு உமையம்மை அஞ்சியது கண்ட சிவபெருமான் தம் கால் பெரு விரலை அழுத்தி ஊன்றினார். அழுத்தம் தாங்காது தன் பத்துத் தலைகளும் நசுங்கியதால் அலறினான் இராவணன். தன் கர்வம் அழிந்து இறையருள் கேட்டு மன்றாடினான். சிவபெருமானை இசையால் மகிழ்விக்க சாமகானம் பாடினான். இசையால் மகிழ்ந்த இறைவரும் அவன் நீண்ட நாள் வாழும் வரத்தையும் தம் கொற்றவாளையும் கொடுத்து அருள் செய்தார் என்பது புராணக் கதை.

வீரட்டம் சிவபெருமானின் எட்டு வீரச் செயல்கள் நடந்த எட்டுத் தலங்களில், தன் சிரிப்பால் திரிபுரம் எரித்த வீரச் செயல் புரிந்த இடம் கடலூர் மாவட்டத்தில் உள்ள திருவதிகை என்ற தலம்.



# அவன் அன்றி அணுவும் அசையாது

**ஆட்டுவித்தால் ஆர்ஒருவர் ஆடா தாரே**
**அடக்குவித்தால் ஆர்ஒருவர் அடங்கா தாரே**
**ஓட்டுவித்தால் ஆர்ஒருவர் ஓடா தாரே**
**உருகுவித்தால் ஆர்ஒருவர் உருகா தாரே**
**பாட்டுவித்தால் ஆர்ஒருவர் பாடா தாரே**
**பணிவித்தால் ஆர்ஒருவர் பணியா தாரே**
**காட்டுவித்தால் ஆர்ஒருவர்காணா தாரே**
**காண்பார் ஆர் கண்ணுதலாய்க் காட்டாக்காலே..**

**– திருநாவுக்கரசர் தேவாரம்**

**பாடலின் பொருள்:** “நெற்றிக் கண்ணை உடையவரே! நீ ஆட்டுவித்தால் ஆடாதவர் யார்? அடங்கச் செய்தால் அடங்காதவர் யார்? ஓடும்படி செய்தால் ஓடாதவர் யார்? நீ மனம் உருகச் செய்தால் பக்தி கொண்டு உருகாதவர் யார்? உன் மீது பக்தி கொண்டு நீ பாடச் செய்தால் பாடாதவர் யார்? உன்னைப் பணியும்படி செய்தால் பணியாதவர் யார்? உன்னை நீயே காண்பித்தால் காணாதவர் ஒருவர் யார்? நீயே உன் நெற்றிக் கண்ணைக் காட்டாவிட்டால் உன்னைக் காண்பவர் யார்?”

“இறைவன் உயிர்களுக்குக் காட்டும் உபகாரம், காணும் உபகாரம்’ ஆகிய இரண்டும் புரிந்து வருகிறான். இறைவன் காட்டி அருளுவதாலேயே உயிர்கள் கண்டு வருகின்றன. இறைவன் திருக்குறிப்பின்படியே உயிர்கள் செயல்படுகின்றன. இறைவன் காட்டி அருளாதபோது காண்கின்ற ஆற்றல் யாருக்கும் இல்லை. உயிர்கள் எதைச் செய்வதற்கும் இறைவனின் திருவருள் துணை உயிர்களுக்கு இன்றியமையாதது என்பதை இப்பாடல் உணர்த்துகிறது. “அவன் அன்றி அணுவும் அசையாது அல்லவா?”



# என்கடன் பணிசெய்து கிடப்பதே!



> நம் கடம்பனைப் பெற்றவள் பங்கினன்
> தென்கடம்பை திருக்கரக் கோயிலான்
> தன் கடன் அடியேனையும் தாங்குதல்
> என் கடன் பணிசெய்து கிடப்பதே.
>
> – திருநாவுக்கரசர் தேவாரம்

**பாடலின் பொருள்:** “நம்மால் விரும்பிப் போற்றப்படும், கடம்ப மாலை அணிந்தவனாகிய முருகப் பெருமானைப் பெற்ற அன்னை பார்வதி தேவியைத் தன் உடலில் ஒரு பங்காக ஏற்றவன் சிவபெருமான். எனக்கு நேர்ந்த பல விதமான இன்னல்களிலிருந்தும் என்னைக் காப்பாற்றிய பெருமான், இனிவரும் நாட்களில் ஏற்படும் துன்பங்களிலிருந்தும் என்னைக் காப்பாற்ற வேண்டும். அவ்வாறு என்னைக் காப்பாற்ற வேண்டியது அவனது கடமையாகும். பெருமானுக்குத் திருப்பணி செய்வதை நான் என் கடமையாகக் கருதுகிறேன்.”

கடம்பன் – கடம்ப மாலை சூடிய முருகப் பெருமான். தருமசேனர் என்ற பெயரோடு சமணர்களோடு வாழ்ந்து வந்த அப்பர் பிரானுக்குச் சூலை நோயைக் கொடுத்ததும், பின் அந்த நோயிலிருந்து தீர்வு அளித்ததும் சிவபெருமான் தான். அதன் பின் சமணர்கள் அவரைச் சுண்ணாம்புக் காளவாயில் இட்டபோதும், நஞ்சு கலந்த உணவை உண்ணச் செய்த போதும் , மதம் கொண்ட யானையை அவர் மீது ஏவிய போதும், அவரைக் கல்லில் கட்டிக் கடலில் தள்ளியபோதும் எனப் பல சமயங்களில் திருநாவுக்கரசரைக் காப்பாற்றியது சிவபெருமானின் திருவருள் தான். அவ்வாறு தன்னைப் பாதுகாத்த இறைவனுக்கு அடிமைப்பணி செய்து தம் வாழ்நாளைக் கழிப்பதே தம் கடமை என்று இப்பாடலில் அறிவிக்கிறார் திருநாவுக்கரசர்.

# இறைவனின் எட்டு குணங்கள்

எட்டு கொலாம் அவர்ஈறில் பெருங்குணம்
எட்டு கொலாம் அவர்சூடும் இனமலர்
எட்டு கொலாம் அவர்தோளிணை யாவன
எட்டு கொலாம் திசையாக்கின தாமே.

– திருநாவுக்கரசர் தேவாரம்விடம்
தீர்த்த திருப்பதிகம்

**பாடலின் பொருள்:** சிவபெருமானின் அழிவில்லாத குணங்கள் எட்டு. அவர் விரும்பிச் சூடும் மலர்கள் எட்டு. ஒன்றுக்கொன்று இணையாகக் காணப்படும் தோள்கள் எட்டு. அவர் ஆக்கிய திசைகள் எட்டு.

“கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான் தாளை வணங்காத் தலை.” இக்குறளில் வரும் “எண்குணத்தான்” என்பதற்குப் பரிமேலழகர் கூறும் பொருள்: தன் வயத்தனாதல், தூய உடம்பினனாக இருத்தல், இயற்கை உணர்வினன் ஆதல், முற்றும் உணர்தல், இயல்பாகவே பாசங்களிலிருந்து நீங்குதல், பேரருள் உடைமை, முடிவில்லாத ஆற்றல் உடைமை, வரம்பில்லாத இன்பம் உடைமை ஆகியவை இறைவனின் எட்டு குணங்கள்.



# கடல்கள் ஏழு

ஏழு கொலாம் அவர் ஊழி படைத்தன
ஏழ கொலாம் அவர் கண்ட இருங்கடல்
ஏழு கொலாம் அவர் ஆளும் உலகங்கள்
ஏழு கொலாம் இசை யாக்கின தாமே.

– திருநாவுக்கரசர் தேவாரம்.
(விடம் தீர்த்த பதிகம்)

**பாடலின் பொருள்:** ஒவ்வொரு ஊழிக் காலத்தின் தொடக்கத்திலும் இறைவனால் படைக்கப்படும் உயிரினங்கள் தாவரம், நீர் வாழ்வன, ஊர்வன, நடப்பன,பறப்பன, மனிதன், தேவர் ஆகிய ஏழு வகைகளில் அடங்கும். அவர் தோற்றுவித்த கடல்கள் ஏழு. அவர் ஆளுகைக்கு உட்பட்ட கீழ் மேல் உலகங்கள் ஏழு. அவர் தோற்றுவித்த இசைகள் ஏழு (சரிகமபதநி).



# திருமேனி ஆபரணம்

**அஞ்சு கொலாம் அவர் ஆடரவின் படம்**
**அஞ்சு கொலாம் அவர் வெல்புலன் ஆவன**
**அஞ்சு கொலாம் அவர் காயப்பட்டான் கணை**
**அஞ்சு கொலாம் அவர் ஆடினதாமே.**

**– திருநாவுக்கரசர் தேவாரம்.**
**(விடம் தீர்த்த திருப்பதிகம்)**

**பாடலின் பொருள்:** சிவபெருமான் தன் திருமேனியில் ஆபரணமாக அணிந்திருக்கும் நாகத்தின் படங்கள் ஐந்து. சிவபெருமான் வென்ற புலன்கள் மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐந்து ஆகும்.

சிவபெருமானால் காயப்பட்ட மன்மதன் பயன்படுத்தும் பூங்கணைகள், தாமரை, அசோகு, மா, முல்லை, கருங்குவளை ஆகிய ஐந்து மலர்கள். சிவபெருமான் விரும்பி நீராடுவது பசுக்களிடமிருந்து பெறப்படும் பால், தயிர், நெய், கோசலம்(பசுவின் சாணம்), மற்றும் கோமியம்(பசுவின் சிறுநீர்) ஆகியவற்றால் செய்யப்படும் பஞ்சகவியம் ஆகும். திருக்குறுக்கை சிவபெருமானின் அட்ட (எட்டு) வீரட்டானத் தலங்களில் ஒன்று. இத்தலம் மன்மதனை எரித்த தலம்.

சூரபன்மன், தாரகன் என்ற அசுரர்களின் தொல்லைகளைத் தீர்க்க சிவபெருமான் ஒரு குமாரனைத் தோன்றச் செய்யவேண்டும் என்பதற்காகத் தேவர்கள் யோக நிலையில் உள்ள சிவபெருமானின் தவத்தைக் கலைக்க மன்மதனை அனுப்பினார்கள். மன்மதன் தொடுத்த மலர்க் கணைகள் (அம்புகள்) இறைவனின் தவத்தைக் கலைத்தன. இறைவன் கோபமுற்றுக் கண் திறந்து மன்மதனைப் பார்க்க அவன் எரிந்து சாம்பலானான்.



## ஊர்தியின் பாதம்

**நாலு கொலாம் அவர்தம் முகமாவன
நாலு கொலாம் சனனம் முதல் தோற்றமும்
நாலு கொலாம் அவர்ஊர்தியின் பாதங்கள்
நாலு கொலாம் மறைபாடின தாமே.**

**– திருநாவுக்கரசர் தேவாரம்**

**பாடலின் பொருள்:** சிவபெருமானின் திருமுகங்கள் நான்கு. உயிர்கள் தோன்றுவதற்கான கருவிகள் முட்டை, கருப்பை, வியர்வை, உமிழ்நீர் என்று நான்கு வகையாவன. சிவபிரானது ஊர்தியாகிய இடபத்தின் (காளையின்) கால்கள் நான்கு. அவர் பாடிய வேதங்கள்(மறைகள்) நான்கு.



# கண்நுதல் ஆவன மூன்று

**மூன்று கொலாம் அவர் கண்நுதல் ஆவன
மூன்று கொலாம் சூலத்தின் மொய்யிலை
மூன்று கொலாம் கணை கையது வில் நாண்
மூன்று கொலாம் புரம் எய்தன தாமே.**

**– திருநாவுக்கரசர் தேவாரம்விடம்
தீர்த்த திருப்பதிகம்.**

**பாடலின் பொருள்:** நெற்றிக் கண்ணையும் சேர்த்து சிவபெருமானின் கண்கள் மூன்று. அவர் ஏந்தியிருக்கும் சூலம் மூன்று இலைகளைக் கொண்டது. அவர் கையில் திகழும் வில் மூன்று வெவ்வேறு பொருட்களைத் தனது அங்கங்களாக உடையது. (வில்லாக இருப்பது மேருமலை, நாணாகத் திகழ்வது வாசுகிப் பாம்பு, அம்பாக இருப்பது திருமால்). அந்த வில்லில் உள்ள அம்பு எய்யப்பட்டது மூன்று புரங்களை நோக்கி.

**முப்புரம் எரித்த வரலாறு:** திரிபுராந்தகர் என்பது சிவனின் திருவுருவங்களில் ஒன்று. இது பறக்கும் கோட்டை களுடன் கூடிய மூன்று நகரங்களை உடைய தாரகாட்சன், கமலாட்சன், வித்யுன்மாலி என்னும் மூன்று அசுர சகோதரர்களை (திரிபுரர்) அழிப்பதற்காக எடுத்த கோலம்.

தேவர்கள் எல்லோரும் படைகளாகவும், சூரிய சந்திரர்கள் சக்கரமாகவும், உலகம் தேராகவும் அமைய, விஷ்ணுவை அம்பாகவும், பிரம்மாவைத் தேரோட்டியாகவும் கொண்டு சிவன் அந்த அசுரர்களை அழிக்கப் புறப்பட்டபோது, தேவர்கள் தாம் இல்லாவிட்டால் ஈசனால் அசுரர்களை அழிக்க முடியாது என்று கர்வம் கொண்டனர் . அவர்களின் கர்வத்தை அடக்க நினைத்த சிவபெருமான் (எந்த ஆயுதத்தையும் பயன்படுத்தாமல்) புன்முறுவல் பூத்து , அச்சிரிப்பினாலேயே திரிபுரங்களை எரித்தார் என்று புராண வரலாறுகள் கூறுகின்றன.



# தேவர்களும் தொழும் சிவபெருமான்

**இரண்டு கொலாம் இமையோர் தொழுபாதம்**
**இரண்டு கொலாம் இலங்கும்குழை பெண் ஆண்**
**இரண்டு கொலாம் உருவம்சிறு மான்மழு**
**இரண்டு கொலாம் அவர்எய்தின தாமே .**

**– திருநாவுக்கரசர் தேவாரம்விடம் தீர்த்த பதிகம்**

**பாடலின் பொருள்:** தேவர்களும் தொழும் சிவபெருமானின் திருப்பாதங்கள் இரண்டு. சிவபெருமான் அம்மையப்பன் ஆனபடியால் அவருடைய ஒரு காதில் தோடும் மற்றொரு காதில் குழையும் என அவர் அணிந்திருக்கும் காதணிகள் இரண்டு வகையானது.

அவரது உருவம் அர்த்த நாரீசுவரராக, பெண் ஆண் என்று இரண்டு தன்மையும் கொண்டது.

அவர் திருக்கைகளில் ஏந்தியிருக்கும் பொருட்கள் மான் மழு ஆகிய இரண்டும் ஆகும். இப்பாடலில் வரும் “கொலாம்” என்பது பொருளற்ற அசைச்சொல்.



# தேவாரம் - சிவபெருமான்

ஒன்று கொலாம் அவர் சிந்தை உயர்வரை
ஒன்று கொலாம் உயரும் மதி சூடுவர்
ஒன்று கொலாம் இடுவெண்தலை கையது
ஒன்று கொலாம் அவர் ஊர்வது தானே.

– திருநாவுக்கரசர் தேவாரம்

**பாடலின் பொருள்:** சிவபெருமானுடைய உள்ளம் அவர் இருக்கும் ஒப்பற்ற கயிலை மலை போன்று மிக உயர்வானது. சிவபெருமானின் கருணையினால் ஒப்பற்ற நிலைக்கு உயர்ந்த சந்திரனைத் தன் முடியில் சூடியவர். சிவபெருமான் தனது கையில் மண்டை ஓட்டினைப் பலிப் பாத்திரமாக ஏந்தியுள்ளவர். சிவபெருமானுடைய வாகனமாகிய இடபமும் (ரிஷப வாகனம்) ஒப்பற்றது.

63 நாயன்மார்களில் ஒருவரான அப்பூதியடிகள் அப்பர் பெருமானிடம் அளவு கடந்த பக்தி கொண்டவர். ஒரு சமயம் அப்பரடிக ளுக்கு அமுது படைக்கும் சமயம் அப்பூதியடிகளின் மூத்த மகன் பாம்பு கடித்து இறந்து விடுகிறான். அப்போது அப்பரடிகள் இந்த “விடம் தீர்த்த பதிகம்” பாடிச் சிறுவனை உயிர்ப்பித்தார். இப்பாடலில் வரும் கொலாம் என்ற சொல் அசைச்சொல். பொருள் அற்றது.



# நமச்சிவாயவே

நமச்சி வாயவே ஞானமும் கல்வியும்
நமச்சி வாயவே நானறி விச்சையும்
நமச்சி வாயவே நாநவின்று ஏத்துமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே.

– திருநாவுக்கரசர் தேவாரம்

**பாடலின் பொருள்:** நமச்சிவாய மந்திரமே நான் அறிந்த கல்வியாகும்.நமச்சிவாய மந்திரமே அந்தக் கல்வியால் நான் பெற்ற ஞானமாகும்.நமச்சிவாய மந்திரம் தான் நான் அறிந்த வித்தையாகும். நமச்சிவாய மந்திரத்தை எனதுநா இடைவிடாது உச்சரித்துக் கொண்டிருக்கும். இந்த நமச்சிவாய மந்திரம் தான் வீடுபேற்றை அடையும் வழியாகும்.



# மாசில் வீணை

**மாசில் வீணையும் மாலை மதியமும்**
**வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்**
**மூசு வண்டறை பொய்கையும் போன்றதே**
**ஈசன் எந்தை இணையடி நீழலே.**

**– திருநாவுக்கரசர் தேவாரம்**

**பாடலின் பொருள்:** திருநாவுக்கரசர் சமண மதத்தை விட்டு சைவ சமயத்துக்கு மாறியபோது தண்டனையாக நீற்றறையில் (சுண்ணாம்புக் காளவாய்) அடைக்கப்பட்டார். இறைவன் திருவருளால் வெப்பமான நீற்றறையும் குளிர்ச்சி அடைந்த தாகக் கூறுகிறார். அந்தச் சூழ்நிலை தம் ஐம்புலன்களுக்கும் இன்பம் அளிப்பதாகக் கூறுகிறார்.

எனது தந்தையாகிய இறைவனின் திருவடி நிழல் செவிக்கு இனிமை தரும் வீணையின் நாதம் போலவும், கண்ணுக்குக் குளிர்ச்சி தரும் நிலவொளி போலவும், நாசிக்குப் புத்துணர்ச்சி தரும் தென்றல் காற்றைப் போலவும், உடலுக்கு மிதமான வெப்பம் தரும் இளவேனில் காலம் போலவும், வண்டுகள் மொய்க்கும் மலர்கள் நிறைந்த குளத்தில் உள்ள சுவையான நீரைப் போலவும் இருக்கிறது.



# போதியோ பூம்பாவாய்



> **மட்டிட்ட புன்னையங் கானல் மடமயிலைக்**
> **கட்டிட்டம் கொண்டான் கபாலீச்சரம் அமர்ந்தான்**
> **ஒட்டிட்ட பண்பின் உருத்திர பல்கணத்தார்க்கு**
> **அட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்.**
>
> **– திருஞான சம்பந்தர் அருளிய தேவாரம்**

**பாடலின் பொருள்:** பூம்பாவாய்! தேன் பொருந்திய அழகிய புன்னை மரச் சோலைகள் சூழ்ந்ததும், இள மயில்கள் ஆரவாரிப்பதுமான கபாலீச்சரம் என்னும் கோயிலில் அமர்ந்தவன் (சிவபெருமான்) மீது நெருங்கிய அன்புடைய சிவனடியார்களுக்குத் திருவிழாக் காலங்களில் அன்பர்கள் அமுது செய்விக்கும் காட்சிகளைக் காணாது செல்வது முறையோ?"

**பதிகம் பாடிய சூழல்:** திருமயிலாப்பூரில் வாழ்ந்த வைசியர் குலத்தைச் சேர்ந்த சிவநேசர் சம்பந்தப் பெருமானிடம் அளவற்ற அன்பு கொண்ட சிவபக்தர். தம் ஒரே செல்வ மகளைத் திருஞானசம்பந்தருக்குத் திருமணம் செய்து கொடுப்பதாகத் தீர்மானம் செய்து இருந்தார். ஆனால் பூம்பாவை என்ற பெயருடைய அந்தப் பெண் ஏழு வயது சிறுமியாக இருந்தபோது பாம்பு தீண்டி இறந்து போனாள். அவள் உடலைத் தகனம் செய்து எலும்புகளை ஒரு குடத்தில் இட்டுச் சேமித்து வைத்திருந்தார் அவள் தந்தை. அந்தப் பெண் இறந்து ஐந்து ஆண்டுகள் கழித்துச் சம்பந்தர் மயிலாப்பூர் வந்த போது சிவநேசர் பற்றிய இச் செய்திகளைக் கேள்விப்பட்டு வியந்தார். மயிலை வந்து கபாலீச்சுரனை வணங்கிவிட்டு வெளியே வந்த பின்னர், பூம்பாவை என்ற அந்தப் பெண்ணின் எலும்பும் சாம்பலும் வைத்த குடத்தை எடுத்து வருமாறு சிவநேசரிடம் கூறினார். அந்தக் குடத்தை இறைவன் திருமுன்பு வைத்து "மட்டிட்ட" எனத் தொடங்கும் பதிகத்தைப் பாடினார். பதிகத்தின் பத்தாவது பாடல் பாடிய போது குடம் உடைந்து பூம்பாவை, இடைப்பட்ட ஐந்து ஆண்டுகளின் வளர்ச்சியோடு, அழகிய மங்கையாக, உயிருடன் எழுந்ததாகச் சேக்கிழார் பெரிய புராணத்தில் கூறுகிறார். அதைக் கண்டு மகிழ்ந்த சிவநேசர் தாம் விரும்பிய படி பூம்பாவையை மணம் செய்து கொள்ளுமாறு சம்பந்தரை வேண்டினார். ஆனால் சம்பந்தப் பெருமான் தாம் பதிகம் பாடிச் சிவனருளால் பூம்பாவை உயிர் பெற்ற காரணத்தால் தாம் இவளுக்குத் தந்தை முறை ஆன படியால் மணம் செய்துகொள்ள மறுத்துவிட்டார். சம்பந்தப் பெருமானின் வேண்டுகோளின் படி பூம்பாவை தன் எஞ்சிய வாழ்நாளைச் சிவத் தொண்டில் கழித்தாள் என்று பெரியபுராணம் உணர்த்துகிறது.

# திருஞானசம்பந்தரின் சிந்தனைகள்

**வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்**
**மிகநல்ல வீணை தடவி**
**மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்து**
**என் உளமே புகுந்த அதனால்**
**ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன்**
**வெள்ளி சனிபாம்பு இரண்டும் உடனே**
**ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல**
**அடியார் அவர்க்கு மிகவே.**

**– திருஞானசம்பந்தர் அருளிய தேவாரம்**

**பாடலின் பொருள்:** "மூங்கில் போன்ற தோள்களையுடைய பார்வதி தேவியைத் தன் ஒரு பாதியாகக் கொண்டவனும், உலகம் உய்யும் பொருட்டு ஆலகால விடத்தை உண்டு தரித்துக் கொண்ட திருக்கழுத்தை உடையவனுமான பெருமான் , மிகவும் இனிய வீணையை வாசித்துக் கொண்டும், குற்ற மற்ற சந்திரனையும் கங்கையையும் திருமுடிமேல் அணிந்தும், என் மனத்திலே குடிகொண்டுள்ள அக்காரணத்தால், சூரியன் முதலான நவக்கிரகங்களும் அடியவர்களாகிய நமக்குத் துன்பம் எதுவும் செய்யமாட்டா. அவை மிகவும் நல்லவை."

சம்பந்தரும், அப்பரும் திருமறைக் காட்டில் இருந்தபோது பாண்டிய நாட்டிலே சமண மதம் மேலோங்கி சைவம் தாழ்ந்து இருந்தது என்று பாண்டிய மன்னனின் மந்திரி குலச்சிறையார் அனுப்பிய ஆட்கள் மூலம் அறிந்த சம்பந்தர், மதுரைக்கு எழுந்தருள எண்ணினார். அப்போது உடனிருந்த அப்பர், "சமணர்கள் மிகவும் கொடியவர்கள்; பல தீங்குகள் செய்யக் கூடும். மேலும் நமக்குக் கோள்களின் நிலையும் நன்றாக இல்லை. அதனால் இப்போது மதுரைக்கு எழுந்தருளுதல் நல்லதில்லை" எனக் கூற, அதற்கு மறுமொழியாக இந்தக் கோளறு பதிகத்தைப் பாடி அருளினார் சம்பந்தர். கோள்களால் வரும் தீங்குகளை நீக்கத் தக்க பதிகம் கோளறு பதிகம்.



# அன்பு வடிவான இறைவன்

**சித்தம் தெளிவீர்காள் அத்தன் ஆரூரைப்**
**பத்தி மலர்தூவ முத்தி யாகுமே.**
**பிறவி அறுப்பீர்காள் அறவன் ஆரூரை**
**மறவாது ஏத்துமின் துறவி யாகுமே.**
**துன்பம் துடைப்பீர்காள் அன்பன் அணிஆரூர்**
**நன்பொன் மலர் தூவ இன்பம் ஆகுமே.**
**உய்யல் உறுவீர்காள் ஐயன் ஆரூரைக்**
**கையி னால்தொழ நையும் வினைதானே.**

**– திருஞான சம்பந்தர் அருளிய தேவாரம்**

**பாடலின் பொருள்:** சித்தம் மாசு நீங்கித் தெளிவடைய விரும்புகின்றவர்களே, அனைவர்க்கும் தலைவனாய் ஆரூரில் எழுந்தருளியிருக்கும் பெருமானைப் பக்தியோடு மலர்தூவி வாழ்த்துங்கள். சித்தத் தெளிவோடு முக்தி கிடைக்கும்.

பிறப்பினை அறுத்துக் கொள்ள விரும்புபவர்களே, அற வடிவினனாகத் திருவாரூரில் எழுந்தருளியிருக்கும் இறைவனை மறவாது ஏத்துங்கள். பிறப்பிற்குக் காரணமான ஆசைகள் நீங்கித் துறவு நிலை எய்தலாம்.

துன்பங்களைத் துடைத்துக்கொள்ள விரும்புகின்றவர்கள் அழகிய ஆரூரில்எழுந்தருளிய அன்பு வடிவான இறைலனை நல்ல பொலிவுடைய மலர்களைத் தூவி வழிபடுங்கள். துன்பம் நீங்குவதோடு இன்பம் உளதாகும். உலக வாழ்க்கையிலிருந்து கடைத்தேற விரும்பு கின்றவர்களே, ஆரூரில் எழுந்தருளியுள்ள தலைவனாகிய இறைவனைக் கைகளைக் கூப்பி வணங்குங்கள். உங்கள் வினைகள் மெலிவடையும். உய்தி பெறலாம்.



# தேவாரம் - சாய்க்காடு

**நித்தலும் நியமம் செய்துநீர் மலர்தூவிச்
சித்தமொன்ற வல்லார்க்கு அருளும் சிவன்கோயில்
மத்தயானையின் கோடும் வண்பீலியும் வாரித்
தத்துநீர்ப் பொன்னி சாகரமேவு சாய்க்காடே.**

**– திருஞான சம்பந்தர் தேவாரம்.**

**பாடலின் பொருள்:** சிவ வழிபாடு எவ்வாறு செய்வது என்பதை அறிந்து கொண்டு, முறையாக நியமத்துடன் தினமும் பெருமானுக்கு நீரும் மலரும் அளித்து, தங்கள் சித்தம் ஒன்றும் வண்ணம் பெருமானைத் தியானித்து வழிபடும் அடியார்களுக்கு அருளும் சிவபெருமான் உறையும் தலமாக விளங்குவது சாய்க்காடு என்ற தலமாகும்.

யானைத் தந்தங்கள், மற்றும் வளமான மயிற்பீலிகளை அடித்துக் கொண்டு வந்து கரை சேர்ப்பதும், துள்ளிக் குதித்துப் பாய்ந்து வருவதும் ஆகிய பொன்னி நதி கடலுடன் சேரும் காவிரிப்பூம்பட்டினத்து நகரில் உள்ளது இந்த சாய்க்காடு என்ற தலம்.

நித்தலும் – தினந்தோறும்.
யானையின் கோடு – யானைத் தந்தம்.
தத்து நீர் – தாவிக் குதிக்கும் நீர்.
சாகரம் – கடல்.
மேவும் – சென்று அடையும்.



# கூற்றுதைத்த பொன்னடி

**நின்னடியே வழிபடுவான் நிமலாநினைக் கருத**
**என்னடியான் உயிரைவவ்வேல் என்றடற்கூற்று உதைத்த**
**பொன்னடியே பரவிநாளும் பூவொடுநீர் சுமக்கும்**
**நின்னடியார் இடர்களையாய் நெடுங்களம் மேயவனே.**

**– சம்பந்தர் தேவாரம், இடர்களையும் பதிகம்.**

**பாடலின் பொருள்:** திருநெடுங்களம் என்ற தலத்தில் எழுந்தருளியிருக்கும் பெருமானே! தூய்மையானவனே! உன் திருவடிகளையே மறவாது வழிபடும் மார்கண்டேயன் எமனிடமிருந்து தன்னைக் காக்குமாறு உன்னைக் கருதித் துதிக்க, நீயும் “என் அடியவனது உயிரை அபகரிக்காதே” என்று சொல்லி வலியவனான எமனை உதைத்த உன்னுடைய அந்தப் பொன் போன்ற திருவடிகளையே தினமும் புகழ்ந்து, திருமஞ்சனத்திற்கு நீரும், அருச்சனைக்குப் பூவும் எடுத்துச் சென்று வழிபடும் உன் அடியார்களின் துன்பங்களைத் தீர்த்தருள்வாயாக.



# நாதன் நாமம் நமச்சிவாயவே

> **காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி**
> **ஓது வார்தமை நன்னெறிக்கு உய்ப்பது**
> **வேதம் நான்கினும் மெய்ப்பொருள் ஆவது**
> **நாதன் நாமம் நமச்சி வாயவே.**
>
> **– திருஞான சம்பந்தர் தேவாரம்.**

**பாடலின் பொருள்:** பக்தி மிகுந்தவராய், மனமுருகிக் கண்ணீர் பெருகச் சொல்லுபவர்களை நல்ல முக்தி நெறியிலே செலுத்துவதும், நான்கு வேதங்களிலும் சொல்லப்படும் உண்மைப் பொருளானதும் எம்பெருமானது திருநாமமாகிய நமச்சிவாய என்பதேயாகும்.



# அரன் நாமமே சூழ்க

**வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்**
**வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக**
**ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே**
**சூழ்க வையகமும் துயர் தீர்கவே.**
**– திருஞானசம்பந்தர் தேவாரம்.**

**பாடலின் பொருள்:**
அந்தணரும், தேவரும், பசுக்களும் வாழட்டும் ;
குளிர்ந்த மழை பொய்க்காமல் பெய்யட்டும்;
அரசனின் செங்கோல் ஓங்கட்டும்;
தீயன எல்லாம் அழிந்து ஒழியட்டும்;
எம்பெருமான் திருநாமமே உலகம் முழுவதும் பரவட்டும்;
உலகம் முழுவதும் துன்பம் நீங்கட்டும்.

அந்தணர் வாழ்ந்தால் தேவர்களை வேள்விகளால் போற்றுவர். வேள்விக்குத் தேவையான பால், தயிர், நெய் ஆகியவற்றைத் தரும் பசுக்கள் வாழும். வேள்விகளால் மகிழ்ந்து தேவர் மழை பொழிவர். மழையால் வரப்பு உயர்ந்து மன்னன் ஓங்குவான். நாட்டில் தீமை உண்டாகாதவாறு காப்பான். அரசனும் குடிகளும் தீமையின்றி வாழும்போது ஈசனது நாமம் தழைக்கும். நாம மகிமையால் உலக மக்கள் துயரம் நீங்கி வாழ்வர்.

மதுரையில் சமணர்கள் திருஞான சம்பந்தரைப் போட்டிக்கு அழைத்தனர். அனல் வாதத்தில் சமணர்கள் தோற்றபின், சம்பந்தரைப் புனல் வாதத்திற்கு அழைத்தனர். அப்போது “வாழ்க அந்தணர்” என்ற இப்பதிகத்தை ஏட்டில் எழுதி ஆற்றில் விட, அது நீரை எதிர்த்து வேகமாகச் சென்றது.



# என்ன புண்ணியம் செய்தனை

**என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே**
**இருங்கடல் வையத்து**
**முன்னம் நீபுரி நல்வினைப் பயனிடை**
**முழுமணித் தரளங்கள்**
**மன்னு காவிரி சூழ்திரு வலஞ்சுழி**
**வாணனை வாயாரப்**
**பன்னி ஆதரித்து ஏத்தியும் பாடியும்**
**வழிபடும் அதனாலே.**

**– திருஞான சம்பந்தர் தேவாரம்**

**பாடலின் பொருள்:** மனமே! சிறந்த மணிகளும் முத்துக்களும் நிறைந்த காவிரி ஆறு சூழ்ந்த திருவலஞ்சுழிப் பெருமானை பக்தியோடு வாயாரப் புகழ்ந்தும் பாடியும் வழிபடும் பேறு இப்போது நீ பெற்றதனால், பெரிய கடல் சூழ்ந்த இவ்வுலகில் முன்னே நீ செய்துள்ள நல்வினைப் பயன்களுக்கிடையில், இப்பேறு பெறுதற்கு ஏதுவாய் என்ன புண்ணியம் செய்தாய்?

திருஞான சம்பந்தர் முற்பிறவிகளில் செய்த நற்செயல்களின் பலனாக இந்தப் பிறவியில் திருவலஞ்சுழிப் பெருமானைத் தொழுது வழிபடும் பெருவாய்ப்புக் கிடைத்ததற்காகப் பெருமகிழ்ச்சி அடைந்து தன்னைத் தானே பாராட்டிக் கொள்கிறார் திருஞான சம்பந்தர்.



# ஆசறு நல்ல நல்ல

**வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்**
**மிகநல்ல வீணை தடவி**
**மாசறு திங்கள்கங்கை முடிமேல் அணிந்தென்**
**உளமே புகுந்த அதனால்**
**ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன்**
**வெள்ளி சனிபாம்பு இரண்டும் உடனே**
**ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல அடியார்**
**அவர்க்கு மிகவே.**

**– திருஞான சம்பந்தர் தேவாரம்,**
**கோளறு பதிகம்**

**பாடலின் பொருள்:** மூங்கில் போன்ற தோளினையுடைய உமையம்மையைத் தன் இடது பாகத்தில் கொண்டவனும், விடமுண்ட கண்டனும் ஆகிய சிவபெருமான் திங்கள் கங்கை ஆகியவற்றை முடிமேல் அணிந்தவனாய், மகிழ்ச்சியாய் வீணையை மீட்டிக் கொண்டு என் உள்ளத்தில் புகுந்து தங்கியுள்ள காரணத்தால் ஞாயிறு , திங்கள் முதலான ஒன்பது கோள்களும் குற்றமற்ற, நன்மையைச் செய்வன. அவை அடியார்களுக்கும் மிகவும் நன்மைகளையே செய்யும்.

திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் திருமறைக்காட்டில் இருந்தபோது சமண மதம் தலை தூக்கிச் சைவ சமயம் தாழ்ந்திருந்த நிலையைப் பாண்டிய அரசி மங்கையர்க்கரசி மற்றும் அமைச்சர் குலச்சிறையார் அனுப்பிய ஆட்கள் மூலம் அறிந்து, சம்பந்தர் மதுரைக்கு எழுந்தருள எண்ணினார். அப்போது உடனிருந்த திருநாவுக்கரசர், “இப்போது கோள்களின் நிலை நன்றாக இல்லை. ஆதலால் இப்போது மதுரைக்கு எழுந்தருளுதல் தகாது”, என்று கூறினார். அதற்கு மறுமொழியாக சம்பந்தர் இக் கோளறு பதிகத்தைப் பாடி அருளினார். ஈசனது அடியார்க்குக் கோள்களால் எந்த விதத் தீங்கும் நேராது என்னும் துணிவு பற்றி “நல்ல நல்ல” எனப் பலமுறை கூறினார்.



# உள்காது எனது உள்ளமே

**மறையானை மாசிலாப் புன்சடை மல்குவெண்**
**பிறையானைப் பெண்ணோடு ஆணாகிய பெம்மானை**
**இறையானை ஏர்கொள் கச்சித் திரு ஏகம்பத்து**
**உறைவானை அல்லது உள்காது எனது உள்ளமே.**

**– திருஞான சம்பந்தர் தேவாரம்**

**பாடலின் பொருள்:** உண்மையான தொண்டருக்குத் தன்னை மறைக்காதவனும், குற்றமற்ற செந்நிற முடைய சடைமுடியினிடத்தே விளங்கும் வெண்மையான பிறைச் சந்திரனை உடையவனும், ஒரு பாதி பெண்ணும் ஒரு பாதி ஆணுமாகிய பெருமானும், யாவர்க்கும் தலைமையானவனும் அழகிய கச்சித் திரு ஏகம்பத் தலத்தில் எழுந்தருளியவனுமான எம்பிரானை யன்றி வேறொருவரையும் என் மனம் எண்ணாது.



# திருஞானசம்பந்தர் - திருவடிகள்

**நிழலார் சோலை நீல வண்டினம்**
**குழலார் பண்செய் கோலக் காவுளன்**
**கழலால் மொய்த்த பாதம் கைகளால்**
**தொழலார் பக்கல் துயரம் இல்லையே.**

**– திருஞான சம்பந்தர் தேவாரம்**

**பாடலின் பொருள்:** நிழல் நிறைந்த சோலைகளில் நீல நிற வண்டுகள் புல்லாங்குழல் ஓசையைப் போன்று ரீங்காரம் செய்யும் கோலக்கா என்னும் தலத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவனின் வீரக் கழல் அணிந்த திருவடிகளைக் கைகூப்பி வணங்குபவர்களுக்கு எந்தவொரு துன்பமும் வராது.



# காண இனியது நீறு

**காண இனியது நீறு கவினைத் தருவது நீறு**
**பேணிஅணிபவர்க்கு எல்லாம் பெருமை கொடுப்பது நீறு**
**மாணம் தகைவது நீறு மதியைத் தருவது நீறு**
**சேணம் தருவது நீறு திருஆல வாயான் திருநீறே.**

**– திருஞான சம்பந்தர் தேவாரம்**

**பாடலின் பொருள்:**
திருஆலவாயான் திருநீறு
கண்களுக்கு இனிமை தருவது ;
அழகைத் கொடுப்பது ;
விரும்பி அணிபவர்க்குப் பெருமை தருவது;
மதிப்பைத் தருவது;  அறிவைத் தருவது;
உயர்வு அளிப்பது.



# சிவபெருமானின் அடையாளங்கள்

**மருந்து வேண்டில் இவை மந்திரங்கள் இவை**
**புரிந்து கேட்கப்படும் புண்ணியங்கள் இவை**
**திருந்து தேவன்குடித் தேவர்தேவு எய்திய**
**அருந்தவத்தோர் தொழும் அடிகள் வேடங்களே.**

**– திருஞான சம்பந்தர் தேவாரம்**

**பாடலின் பொருள்:** சிவபெருமானின் அடையாளங்களாகிய சடைமுடி,உத்திராக்கம், திருநீறு ஆகியவற்றின் நன்மைகளைக் கூறும் பதிகம் . ஞான சம்பந்தர் திருநீற்றினைப் பாண்டிய மன்னனின் உடலில் தடவி அவனது வெப்பு நோயினைத் தீர்த்து அருளினார். பட்டத்து யானையினால் அரசனாகத் தேர்வு செய்யப்பட்ட மூர்த்தி நாயனார் தனக்கு விபூதியே அபிடேகப் பொருளாகவும், உருத்திராக்கமே அணிகலனாகவும், சடைமுடியே கிரீடமாகவும் கொண்டு ஆட்சி செய்தாராம்.

தன்னை வணங்கும் அன்பர்களின் மனதில் உள்ள மாசுகளை அகற்றித் திருத்தி அமைக்கும் தன்மை கொண்டவன் இறைவன் என்பதனால் திருந்து தேவன்குடி என்பது இத்தலத்திற்குப் பெயர் ஆயிற்று .

வேடங்கள்– அடையாளங்கள் .



# என்ன புண்ணியம் செய்தேனோ?

**கண்ணியது உன்புகழ் கற்பது உன் நாமம் கசிந்துபத்தி**
**பண்ணியது உன்இரு பாதாம் புயத்தில் பகல்இரவா**
**நண்ணியது உன்னை நயந்தோர் அவையத்து நான்முன்செய்த**
**புண்ணியம் ஏதுஎன் அம்மேபுவி ஏழையும் பூத்தவளே.**

**– அபிராமிபட்டர் அருளிய அபிராமி அந்தாதி**

**பாடலின் பொருள்:** “ஏழுலகையும் பெற்றவளே! என் அபிராமித் தாயே! நான் எப்போதும் ஊனுருக உன் புகழையே நினைத்துக் கொண்டிருக்கிறேன். நான் கற்பதோ உன் நாமம். என் மனம் கசிந்து பக்தி செய்வதோ உன் திருவடித் தாமரையை. நான் இரவு பகல் பாராமல் சென்று சேர்ந்திருப்பதோ உன்னை விரும்பும் அடியவர் கூட்டத்துடன். இந்த உலகில் கடைத்தேற வேண்டுமென்றால் நல்லோர் கூட்டுறவு வேண்டும். நான் இப்படி யெல்லாம் செய்வதற்கு நான் முற்பிறவிகளில் என்ன புண்ணியம் செய்தேனோ?” என்று அபிராமி பட்டர் மனம் உருகிப் பாடுகிறார்.



# அபிராமி அந்தாதி சிந்தனைகள்

**ஆனந்த மாய்என் அறிவாய் நிறைந்த அமுதமுமாய்**
**வானந்த மான வடிவுடை யாள்மறை நான்கினுக்கும்**
**தானந்த மான சரணார விந்தம் தவளநிறக்**
**கானந்தம் ஆடரங் காம்எம்பி ரான்முடிக் கண்ணியதே.**

**– அபிராமிபட்டர் அருளிய அபிராமி அந்தாதி**

**பாடலின் பொருள்:** “அபிராமி அன்னை என் ஆனந்தமாகவும், என் அறிவாகவும், என் வாழ்வில் அமுதமாகவும் நிறைந்திருக்கின்றாள். அவள் ஆகாயம் தொடங்கி, மண். நீர், நெருப்பு, காற்று என்ற பஞ்சபூத வடிவினள். (ரிக், யஜூர், சாம, அதர்வணம் ஆகிய) நான்கு வேதங்களுக்கும் தானே தொடக்கமாகவும், முடிவாகவும் இருப்பவள். இப்படிப்பட்ட அன்னையின் திருவடித் தாமரைகள், திருவெண்காட்டில் திருநடம் புரியும் எம்பிரான் ஈசன் முடிமேல் தலைமாலையாகத் திகழ்வன.”

வான் அந்தமான – நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய பஞ்ச பூதங்களின் வடிவானவளே! மறை நான்கினுக்கும் தான் அந்தமான– வேதங்கள் நான்கினுக்கும் முடிவாய் விளங்குவன அன்னையின் திருவடித் தாமரை.

தவள நிறக் கானம் –சுடுகாட்டுச் சாம்பல் நிரம்பி அதனால் வெண்மை நிறம் கொண்ட காட்டை. தம் ஆடரங்காம் எம்பிரான் – தன் ஆனந்தத் தாண்பவத்திற்கான இடமாய்க் கொண்ட சிவபெருமான். முடிக் கண்ணியதே – முடி மேல் அணியும் மாலைகள் ஆகும்.

கண்ணி – மாலை.



# மலர் திருவடிகள்

**நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினைப்பதுஉன்னை**
**என்றும் வணங்குவது உன் மலர்த்தாள்! எழுதாமறையின்**
**ஒன்றும் அரும்பொருளே! அருளே! உமையே! இமயத்து**
**அன்றும் பிறந்தவளே! அழியாமுத்தி ஆனந்தமே!**

**– அபிராமிபட்டர் அருளிய அபிராமி அந்தாதி**

**பாடலின் பொருள்:** “எழுதப்படாத வேதத்தின் முடிவாக இருக்கும் அரிய பொருளே! அருள் மயமானவளே! அன்று இமயமலை அரசன் பர்வதராஜனின் மகளாகப் பிறந்த உமையே! அழியாத வீடுபேற்றை அளிக்கின்ற ஆனந்த வடிவானவளே! நான் நிற்கும் போதும், நடக்கும் போதும், உட்கார்ந்து இருக்கும் போதும், படுக்கும் போதும் என்று எந்த நிலையில் இருந்தாலும் நினைப்பது உன்னை மட்டும் தான். என்றும் நான் வணங்குவது உன்னுடைய மலர் போன்ற திருவடிகளை மட்டும் தான்.”

“இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க” என்ற திருவாசக வரிகளை நினைவு படுத்தும் பாடல் வரிகள்.



# பசி போக்கும் அபிராமி

**கருத்தன, எந்தைதன் கண்ணன வண்ணக் கனகவெற்பில்**
**பெருத்தன பால் அழும் பிள்ளைக்கு நல்கின, பேர்அருள்கூர்**
**திருத்தன பாரமும், ஆரமும் செங்கைச் சிலையும், அம்பும்**
**முருத்தன மூரலும், நீயும் அம்மே! வந்து என்முன் நிற்கவே.**

**– அபிராமி பட்டர் அருளிய அபிராமி அந்தாதி**

**பாடலின் பொருள்:** “என் தந்தையாகிய சிவபெருமானின் கண்ணையும் கருத்தையும் கவரும் பொன்மலை போன்ற பெருத்த தனங்களால் அழுத பிள்ளைக்கு (திருஞானசம்பந்தர்) ப்பாலும் பேரருளும் வழங்கினாய். அத்தகைய சிறப்பு மிக்க மார்பை அலங்கரிக்கும் மாலையுடனும், கரும்பு வில்லும் அம்பும் ஏந்திய சிவந்த கைகளுடனும், முருக்கம்பூ போன்ற நெருங்கிய சிவந்த உதடுகளில் புன்னகையுடனும் என் முன் தோன்ற வேண்டும், என் தாயே” என்று அபிராமிபட்டர் அன்னை அபிராமியிடம் வேண்டுகிறார். அன்று பசிக்கு அழுத பிள்ளை திருஞான சம்பந்தர் முன் காட்சி தந்தது போல, இன்று உன் அருளுக்காக ஏங்கி அழும் என் முன் காட்சியளிக்க வேண்டும்” என்று இறைஞ்சுகிறார்.

முருத்தன (முருந்தன) – பூவின் இதழ் போன்ற சிவந்த இதழ்களில்.
மூரல் – புன்னகை.



# திரிபுர சுந்தரி

**சுந்தரி எந்தை துணைவி என் பாசத் தொடரையெல்லாம்**
**வந்தரி சிந்துர வண்ணத்தினாள் மகிடன் தலைமேல்**
**அந்தரி நீலி அழியாத கன்னிகை ஆரணத்தோன்**
**கந்தரி கைத்தலத்தாள் மலர்த்தாள் என் கருத்தனவே**

**– அபிராமி பட்டர் அருளிய அபிராமி அந்தாதி**

**பாடலின் பொருள்:** திரிபுர சுந்தரி, என் பிரானின் மனைவி, என் பந்த பாசங்களை அகற்றும் சிவந்த மேனியள்; மகிடனின் தலை மீது நிற்பவள்; நீலி (நீல நிறம் உடையவள்); நித்திய கன்னிகை; பிரமனின் கபாலத்தைத் தாங்கிய திருக்கரத்தினை உடையவள். அவளுடைய மலர்ப் பாதங்கள் என் மனதில் நிலைத்துள்ளன.

மகிடன் தலைமேல் அந்தரி – ஆகாயம் என்னும் அந்தரத்தை ஆள்பவளாய் இருக்கும் அபிராமி மகிஷாசுரனின் தலைமேல் திருவடி பதித்து அவனுடைய அகந்தையை அழித்தாள். அது போலத் தன் மனதில் இருக்கும் அகந்தையையும் அழித்து விடுமாறு வேண்டுகிறார் அபிராமி பட்டர்.

ஆரணத்தோன் கந்தரி கைத்தலத்தாள் – ஆரணம் என்றால் வேதம் என்று பொருள். ஆரணத்தோன் என்றால் வேதநூலைக் கையில் தாங்கும் பிரமதேவன் என்றுபொருள்.

பிரமனின் அகந்தை அழியுமாறு அவனுடைய ஒரு தலையைச் சிவபெருமான் கொய்தார். அந்தப் பிரம்ம கபாலத்தை அம்பிகை தன்னுடைய கைகளில் வாங்கிக் கொண்டாள். ஆதியில் பிரமன் ஐந்து முகங்களுடன் இருந்ததாகப் புராணம் கூறுகிறது.



# சிந்தூர நிறம் கொண்ட அழகியே!

> **ததியுறு மத்திற் சுழலும் என் ஆவி, தளர்விலதோர்**
> **கதியுறு வண்ணம் கருதுகண்டாய் கமலாலயனும்**
> **மதியுறு வேணி மகிழ்நனும் மாலும் வணங்கி என்றும்**
> **துதியுறு சேவடியாய் சிந்துரானன சுந்தரியே!**
>
> **– அபிராமிபட்டர் அருளிய அபிராமி அந்தாதி**

**பாடலின் பொருள்:** தாமரை மலரில் இருக்கும் பிரமனும், நிலவைத் தன் சடைமுடியில் சூடி உன்னோடு சேர்ந்து மகிழும் சிவனும், திருமாலும் வணங்கி எப்போதும் துதிக்கும் சிவந்த அடிகளைக் கொண்டவளே! சிந்தூர நிறம் கொண்ட அழகியே! தயிர் கடையும்போது மத்து தொடர்ந்து சுழல்வதுபோல , இந்த உலகப் பற்றுக்களில் சிக்கிப் பிறவி என்னும் சுழலில் எனது ஆன்மா தொடர்ந்து சுழன்று கொண்டு இருக்கின்றது. இப்படித் தளர்வின்றிச் சுழன்று வரும் என் ஆன்மா ஒருபோதும் சோர்வடையாத நன்னெறியைப் பெற்றுச் சிறக்கும்படி கருணையோடு நோக்கிக் காப்பாயாக.

உலகப் பற்றுக்களில் சிக்குண்டு அலைபாயும் தனது ஆன்மாவுக்கு விடுதலை அருள வேண்டும் என்று அபிராமிபட்டர் அபிராமி அன்னையிடம் வேண்டுகிறார்.



# உன்பொன் திருவடித்தாமரை

**சென்னியது உன்பொன் திருவடித்தாமரை சிந்தையுள்ளே
மன்னியது உன்திரு மந்திரம் சிந்துர வண்ணப் பெண்ணே
முன்னியநின் அடியாருடன் கூடி முறை முறையே
பன்னியது என்றும் உந்தன் பரமாகம பத்ததியே.**

**– அபிராமி பட்டர் அருளிய அபிராமி அந்தாதி**

**பாடலின் பொருள்:** அபிராமி அன்னையே ! உன் அழகிய தாமரை மலர் போன்ற திருவடிகளை என் தலையிலே தாங்கிக் கொண்டு இருக்கிறேன். உன் திருநாமத்தை இடைவிடாது தியானம் செய்து கொண்டு இருக்கிறேன்.

மனிதர்களின் மனம் யானையின் துதிக்கை போல எப்போதும் ஆடிக்கொண்டே இருக்கும். மண்ணைத் தூற்றிக் கொண்டே யிருக்கும். அதன் துதிக்கையில் ஒரு சங்கிலியைக் கொடுத்து விட்டால் அது அதை ஆட்டிக் கொண்டே யிருக்கும். தன் தலையில் மண்ணை அள்ளிப் போடுவதும் நின்றுவிடும். அது போல நம் மனதிற்கும் அபிராமியின் நாமத்தை உச்சரிக்கச் செய்து விட்டால் அந்த மனம் வேறு எதையும் நினைக்காது.

உலகில் கடைத்தேற, அன்னையின் தியானம் இருந்தால் மட்டும் போதாது. தனியாக இருக்கும்போது இந்த மனம் கண்ட கண்ட விடயங்களைச் சிந்திக்கும். அதனால் அம்பாளின் பக்தர்கள் கூட்டத்தின் கூட்டுறவு நமக்கு இருந்தால் நமது உள்ளம் பண்படும். அதனால் உன் அடியார்களுடன் என்னை இணைத்துக் கொண்டுவிட்டேன்.

நான் தினந்தோறும் உன் ஆகம வழிமுறைகளில் சொன்ன விதமே நான் உன்னை வழிபடுகிறேன். அன்னையின் திருவடிப் பெருமையும், அடியார் பெருமையும் இப்பாடலில் சொல்லப்பட்டது.

பன்னியது – மீண்டும் மீண்டும் படிப்பது.
பத்ததி – வழிமுறை.



# நஞ்சமுதாக்கிய அம்பிகை

**பொருந்திய முப்புரை, செப்புரை செய்யும் புணர்முலையாள்**
**வருந்திய வஞ்சி மருங்குல் மனோன்மணி! வார்சடையோன்**
**அருந்திய நஞ்சு அமுதாக்கிய அம்பிகை அம்புயம்மேல்**
**திருந்திய சுந்தரி, அந்தரி, பாதம்என் சென்னியதே.**

**– அபிராமி பட்டர் அருளிய அபிராமி அந்தாதி**

**பாடலின் பொருள்:** உயிர்களிடத்தில் படைத்தல், காத்தல், அழித்தல் என்ற மூன்று நிலைகளில் முப்புரையாய்ப் பொருந்தியிருப்பவளே! புகழ்ந்து பேசுவதற்கு ஏற்ப மிகுந்த அழகுடன் கூடி, இணையாய் நிற்கும் தனங்களின் பாரத்தால் வருந்தும் கொடிய இடை கொண்ட மனோன்மணியே! அன்று சிவபெருமான் உண்ட நஞ்சை அமுதாக்கிய அம்பிகையே! உலகுக் கெல்லாம் ஆதியும் அந்தமும் ஆனவளே! மென்மையான தாமரை மலர் போன்ற உன் திருவடிகளை நான் என் தலைமேல் அணிந்துகொண்டேன்.

நஞ்சமுதாக்கிய அம்பிகை – தேவர்களும் அசுரர்களும் அமுதம் வேண்டிப் பாற்கடலைக் கடைந்தபோது முதலில் தோன்றிய ஆலகால விஷத்தை, உலகைக் காக்கும் பொருட்டு, சிவபெருமான் எடுத்து அருந்தியபோது அருகில் இருந்த உமாதேவி தன் திருக்கரங்களை வைத்து அந்த நஞ்சை அமுதாக்கிக் கண்டத்திலேயே நிறுத்தினார்.



# புந்தி எந்நாளும் பொருந்துக

**மனிதரும் தேவரும் மாயா முனிவரும் வந்து சென்னி**
**குனிதரும் சேவடிக் கோமள மேகொன்றை**
**வார்சடைமேல்**
**பனிதரும் திங்களும் பாம்பும் பகீரதி யும்படைத்த**
**புனிதரும் நீயும்என் புந்திஎந் நாளும்**
**பொருந்துகவே.**

**– அபிராமி பட்டர் அருளிய அபிராமி அந்தாதி**

**பாடலின் பொருள்:** மண்ணுலகில் வாழும் மனித்களும், விண்ணுலக தேவர்களும், மண்ணுலகில் வாழும் மனிதர்களும், விண்ணுலக தேவர்களும், சாகா வரம் பெற்ற மார்க்கண்டேயர் போன்ற முனிவர்களும் வந்து தலை வணங்கும் சிவந்த திருவடிகளும் மென்மையான இயல்பும் உடைய தேவியே! கொன்றை மாலைஅணிந்த நீண்ட சடையின் மேல் குளிர்ச்சியான சந்திரனையும், பாம்பையும், கங்கையையும் சூடிக்கொண்ட தூயவராகிய சிவபெருமானும் நீயும் இணைந்து என் சிந்தையில் எக்காலத்திலும் பொருந்தி இருக்க வேண்டும்.



# செறிந்தேன் உனது திருவடிக்கே

**அறிந்தேன் எவரும் அறியா மறையை அறிந்துகொண்டு**
**செறிந்தேன், உனது திருவடிக்கே; திருவே! வெருவிப்**
**பிறிந்தேன், நின் அன்பர் பெருமை எண்ணாத கருமநெஞ்சால்**
**மறிந்தே விழும்நரகுக்கு உறவாய மனிதரையே!**

**– அபிராமிபட்டரின் அபிராமி அந்தாதி**

**பாடலின் பொருள்:** அடியவர்களுக்கு அருள் செல்வத்தை வாரி வழங்கும் அபிராமியே! உன் அடியவர்களின் பெருமையை உணராத, பிறவியாகிய நரகத்துக்குள் மீண்டும் மீண்டும் விழும் தீவினையாளர்களை வெறுத்து அஞ்சி விலகினேன். எவரும் அறியாத வேதத்தின் சாரமாகிய உன்னை அறிந்து கொண்டு, உன் திருவடிகளைத் தஞ்சம் அடைந்தேன். இனி நீயே எனக்குத் துணையாவாய்.

அன்பர் கூட்டத்தின் பெருமையை அபிராமி பட்டர் இப்பாடலில் பாடுகிறார்.

“அன்பர்பணி செய்யஎனை ஆளாக்கி விட்டு விட்டால் இன்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே.” என்பது தாயுமானவர் வாக்கு.



# துணையும், தொழும் தெய்வமும்

**துணையும், தொழும் தெய்வமும், பெற்ற தாயும், சுருதிகளின்
பணையும், கொழுந்தும், பதிகொண்ட வேரும், பனிமலர்ப்பூங்
கணையும், கருப்புச் சிலையும், மென்பாசாங்குசமும் கையில்
அணையும் திரிபுர சுந்தரி ஆவது அறிந்தனமே.**

**– அபிராமி பட்டரின் அபிராமி அந்தாதி**

**பாடலின் பொருள்:** குளிர்ந்த மலர்க் கணை(அம்பு)களும், கரும்பு வில்லும், அங்குசத்தையும் பாசக் கயிற்றையும் கையில் ஏந்திய திரிபுர சுந்தரியாகிய அபிராமி அன்னையே, நமக்கு வாழ்க்கையில் பயமோ துன்பமோ வரும்போது துணையாக இருப்பவள்; நான் தொழும் தெய்வமாக இருப்பவள்; என்னைப் பெற்ற தாயாகவும் இருப்பவள்; வேதம் என்ற மரத்தின் வேரும், சாரமும் , அதில் துளிர்க்கும் தளிரும் அவள் தான் .

மலர் அம்பும் கரும்பு வில்லும் – உயிர்களின் மனதில் ஆசையைத் தூண்டுபவள்; மென்பாசம் அங்குசம் – ஆசைகளுக்குக் கடிவாளம் போட்டுத் தவறான வழியில் சென்றால் தண்டித்துத் திருத்துபவளும் அபிராமி அன்னையே.



# அழியாத குணக் குன்றே

**நன்றே வருகினும் தீதே விளைகினும் நான் அறிவது**
**ஒன்றேயும் இல்லை உனக்கே பரம் எனக்கு உள்ளதெல்லாம்**
**அன்றே உனது என்று அளித்து விட்டேன் அழியாத குணக்**
**குன்றே அருட்கடலே இமவான் பெற்ற கோமளமே.**

**–அபிராமி பட்டரின் அபிராமி அந்தாதி**

**பாடலின் பொருள்:** அன்பு, அறிவு, கருணை போன்ற நற்குணங்களின் குன்றே! அருளின் கடலே! மலைமகளே! அபிராமி அன்னையே! நீ என்னை ஆட்கொண்ட அன்றே, நானும் என் உடைமைகளும் உனக்கே அடைக்கலமாகக் கொடுத்து விட்டேன். இனிமேல் எனக்கு நன்மைகளே வந்தாலும், தீமைகளே விளைந்தாலும் நான் நன்மை தீமை என்று பிரித்து அறியமாட்டேன் . அவை அனைத்துமே உன் அருளால் வருவதால் எல்லாமே எனக்கு நன்மைகளாகத் தான் இருக்கும். இப்பாடல் சரணாகதித் தத்துவத்தைச் சிறப்பாக விளக்குகிறது .



# நல்லன எல்லாம் தரும்

**தனம்தரும் கல்வி தரும் ஒருநாளும் தளர்வறியா**
**மனம்தரும் தெய்வ வடிவும்தரும் நெஞ்சில் வஞ்சமில்லா**
**இனம்தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர்ஹ என்பவர்க்கே**
**கனம்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே.**

**– அபிராமி அந்தாதி**

**பாடலின் பொருள்:** அபிராமி அன்னையைப் பணிந்து ஏத்துவதால் நமக்கு என்னென்ன கிடைக்கும் எனப் பட்டியல் இடுகிறார் அபிராமிபட்டர்.

அபிராமி அன்னையின் கடைக்தண் பார்வை நம் மீது பட்டாலே நமக்கு எல்லா விதமான செல்வங்களும், எல்லாவிதமான கல்வியும், என்றும் சோர்ந்து போகாத மனமும், தெய்வீகமான உருவமும், உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசாத நண்பர்களையும், இன்னும் உள்ள அனைத்து நன்மைகளும் நமக்குக் கிடைக்கும் .



# இராமலிங்க அடிகளாரின் சிந்தனை

எவ்வுயிர்த் திரளும் என்னுயிர் எனவே
எண்ணிநல் இன்புறச் செயவும்
அவ்வுயிர் களுக்கு வரும் இடையூற்றை
அகற்றியே அச்சநீக்கி விடவும்
செவ்வையுற் றுனது திருப்பதம் பாடிச்
சிவ சிவ என்றுகூத் தாடி
ஒவ்வுறு களிப்பால் அழிவுறா திங்கே ஓங்கவும்
இச்சைகாண் எந்தாய்.

– இராமலிங்க அடிகளாரின் திருவருட்பா

**பாடலின் பொருள்:** “எந்தையாகிய சிவனே! உயிர் வகைகள் யாவையும் எனது உயிர் போல் கருதி, அவை யனைத்தும் நல்ல இன்பம் பெறச் செய்யவும், அவற்றிற்கு வருகின்ற துன்பங்கள் யாவற்றையும் நீக்கி, அவற்றை அலைக்கழிக்கும் அச்சத்தைப் போக்கவும்,

மனத்தின் கண் செம்மை யறம் பூண்டு , உன் திருவடிகளை வாயாரப் பாடிச் சிவ சிவ என ஓதி இன்பக் கூத்தாடி, உள்ளத்தில் ஏற்படும் மகிழ்ச்சியால் அறிவு கெடாமல் இவ்வுலகில் உயர்வு பெறவும் விரும்புகின்றேன், காணும் எவ்வுயிர்க்கும் இன்பம் செய்யும் தம் விருப்பத்தை இப் பாடலில் வள்ளலார் வெளிப்படுத்துகிறார்.



# எம்பெருமான் நடம் புரியும் இடம்

> **எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும்**
> **தம்உயிர்போல் எண்ணி உள்ளே**
> **ஒத்துரிமை உடையவராய் உவக்கின்றார்**
> **யாவர்அவர் உளம்தான் சுத்த**
> **சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும்**
> **இடம்எனநான் தெரிந்தேன் அந்த**
> **வித்தகர்தம் அடிக்கேவல் புரிந்திடஎன்**
> **சிந்தைமிக விழைந்த தாலோ.**
>
> **– வள்ளலார் அருளிய திருவருட்பா**

**பாடலின் பொருள்:** “உலகில் உள்ள உயிர்களிடத்து எந்தவொரு வேற்றுமையும் கருதாமல், எல்லா உயிர்களையும் தம் உயிர் போல் கருதி, மனமுவந்து அருள் புரியும் உரிமை தமக்கு உண்டு என்னும் உணர்வினராய் மகிழ்கின்றவர் யாவராயினும் அவருடைய மனமே சுத்த ஞான உருவாய் எம்பெருமான் திருக்கூத்து இயற்றும் ஞான சபை யாகிய இடம் என்று நான் தெரிந்து கொண்டேன். ஆதலால் அந்த ஞானிகளின் திருவடிக்குத் தொண்டு புரிவதற்கு என் மனம் மிகவும் விரும்புகிறது” என்று இராமலிங்க அடிகளார் கூறுகிறார்.

எல்லா உயிர்களையும் தம் உயிர் போல் கருதி அருள் உள்ளத்துடன் செயல்படுபவரின் உள்ளமே இறைவன் ஆனந்த நடம் புரியும் ஞான சபை என்று வள்ளலார் அறுதியிட்டுக் கூறுகிறார்.



# திருவருட்பா - எண் சுமந்த சேவகன்

**பெண்சுமந்த பாகப் பெருமான் ஒருமாமேல்**
**எண்சுமந்த சேவகன்போல் எய்தியதும் வையைநதி**
**மண்சுமந்து நின்றதும்ஓர் மாறன் பிரம்படியால்**
**புண்சுமந்து கொண்டதும்நின் பொருட்டன்றோ**
**புண்ணியனே.**

**– வள்ளலார் அருளிய திருவருட்பா**

**பாடலின் பொருள்:** மாதொரு பாகனாகிய எம்பெருமான் நரிகளைப் பரிகளாக்கினான்; குதிரைச் சேவகன் என்று அனைவரும் எண்ணும்படி, மதுரை மாநகரெங்கும் குதிரையின் மேலேறி வலம் வந்து, அரிமர்த்தன பாண்டிய மன்னனிடம் அக்குதிரைகளை ஒப்படைத்தான்; வைகை நதியில் பிட்டுக்கு மண் சுமந்து நின்று, பாண்டிய மன்னன் (மாறன்) தந்த பிரம்படியால் தன் பொன்மேனியில் புண் சுமந்தான்; இவ்விரண்டு திருவிளையாடல்களையும் இறைவன் நிகழ்த்தியது புண்ணியனான உமக்காக அல்லவா" என்று மாணிக்க வாசகரிடம் மனம் உருகிக் கேட்கிறார் வள்ளலார்.



# உனக்குள் விளங்குவ அடிமுடி

**அடியெனல் எதுவோ முடியெனல் எதுவோ**
**அருட்சிவம் அதற்கெனப் பலகால்**
**படியுற வருந்தி இருந்த என் வருத்தம்**
**பார்த்து அருளால் எழுந்தருளி**
**மிடியற எனைத்தான் கடைக்கணித்து உனக்குள்**
**விளங்குவ அடிமுடி என்றாய்**
**வடிவிலாக் கருணை வாரியே மூன்று**
**வயதினில் அருள்பெற்ற மணியே.**

**– வள்ளலார் அருளிய ஆளுடைய பிள்ளையார் (சம்பந்தர்) அருண்மாலை**

**பாடலின் பொருள்:** “குறைவில்லாத கருணைக் கடலே! மூன்று வயதில் இறையருளைப் பெற்ற ஞானமணியே! அருள்திரு மேனியை யுடைய சிவ பரம்பொருட்குத் திருவடியும் திருமுடியும் யாவையோ என்று இந்நிலவுலகத்தில் பலகாலம் எண்ணி வருந்திக் கிடந்த என் வருத்தம் எல்லாம் கண்டு, அருள் கொண்டு, என் எதிரே வந்தருளி, என் மனக்குறை முழுதும் நீங்குமாறு உன் கடைக்கண்ணால் பார்த்தருளி, அந்த அடியும் முடியும் உனக்குள்ளே விளங்கித் தோன்றும் என அறிவித்தாய்.” – திருஞான சம்பந்தர் பற்றி வள்ளலார் பாடியது.

வாரி – கடல். வடிவிலா – வடிதல் இல்லா – குறைதல் இல்லாத.
படி – பூமி. மிடி– குறைவு.

திருஞானசம்பந்தர் தம் தேவாரப் பாடல்களில் பல இடங்களில் திருமாலும் பிரம்மாவும் சிவபெருமானின் அடி முடி தேடிய வரலாற்றைக் குறிப்பிடுகிறார்.



# அப்பனே உண்க

**கண்ணப்பா என்றருளும் காளத்தி அப்பாமுன்**
**வண்ணப்பால் வேண்டும் மதலையைப்பால் வாரிதியை**
**உண்ணப்பா என்றுரைத்த ஒற்றிஅப்பா வந்தருள**
**எண்ணப்பா என்றழும்இவ் ஏழைமுகம் பாராயோ.**

**– வள்ளலார் அருளிய திருவருட்பா**

**பாடலின் பொருள்:** திண்ணனைக் கண்ணப்பா என்று அழைத்தருளிய காளத்தியப்பனே! முன்னொரு சமயம் அழகிய பால் வேண்டித் தவம் செய்த உபமன்யு என்ற பாலகனுக்குப் பாற்கடலைத் தந்து "அப்பனே உண்க" என்று சொன்ன திருவொற்றியூரில்எழுந்தருளும் தலைவனே! அப்பனே, என் முன்னே வந்தருள எண்ணுவாயாக என அழுதேங்கும் ஏழையாகிய எனது முகத்தைப் பார்த்தருள மாட்டாயோ? "என்று ஒற்றித் தியாகப் பெருமானுடைய திருவுருவைக் கண்டு பராவுதற்கு அருள் புரியுமாறு வேண்டுகிறார், இராமலிங்க அடிகள்.

கண்ணப்பரின் பிள்ளைப் பருவப் பெயர் திண்ணன் என்பது. இறைவன் கண்ணில் குருதி வடிந்தபோது தன் கண்ணை இடந்து அப்பினார். அப்போது இறைவரால் கண்ணப்பா என்று அழைக்கப்பட்டார்.

மதலை – வியாக்ரபாதர் என்ற முனிவரின் மகன் உபமன்யு என்ற குழந்தை சிவபெருமானிடம் பால் வேண்டித் தவம் செய்தபோது இறைவர் பாற்கடலைக் காட்டி உண்ணச் சொன்னார் என்பது புராணக் கதை.



# இறைவனின் ஆணை

**பாட்டுவித்தால் பாடுகின்றேன் பணிவித்தால்**
**பணிகின்றேன் பதியே நின்னைக்**
**கூட்டுவித்தால் கூடுகின்றேன் குழைவித்தால்**
**குழைகின்றேன் குறித்த ஊணை**
**ஊட்டுவித்தால் உண்கின்றேன் உறக்குவித்தால்**
**உறங்குகின்றேன் உறங்கா தென்றும்**
**ஆட்டுவித்தால் ஆடுகின்றேன் அந்தோ**
**இச்சிறியேனால் ஆவ தென்னே.**

**– வள்ளலார் அருளிய திருவருட்பா**

**பாடலின் பொருள்:** "இறைவனால் பாடத் தூண்டப் பட்டால் பாடுகின்றேன். இறைவன் பணியத் தூண்டினால் பணிகின்றேன். இறைவனே! உன்னுடன் என்னை இணைத்தால் நான் உன்னுடன் கூடுகின்றேன். இறைவனால் மென்மையாக்கப்பட்டால் மென்மை அடைகிறேன்.

இறைவனால் உணவு ஊட்டப்பட்டால் நான் உண்கிறேன். இறைவனால் உறங்கச் செய்ப்பட்டால் நான் உறங்குகின்றேன். உறங்காத நிலையில் கூட இறைவனால் அசைக்கப் பட்டால் நான் ஆடுகின்றேன். அந்தோ! இந்தச் சிறியவனான என்னால் என்ன செய்ய முடியும்?"

வள்ளலார் தாம் செய்யும் செயல் அனைத்தும் (உண்பது, உறங்குவது, பாடுவது, பணிவது) இறைவன் ஆணைப்படியே செய்து வருகிறார், தன் செயல் என்று எதுவும் இல்லை என்ற தன்னிலை விளக்கத்தை இப்பாடல் உணர்த்துகிறது.



# வள்ளலார் சிந்தனைகள்

**ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற**
**உத்தமர்தம் உறவு வேண்டும்**
**உள்ளொன்று வைத்துப் புறம்ஒன்று பேசுவார்**
**உறவு கலவாமை வேண்டும்**
**பெருமைபெறு நினது புகழ் பேச வேண்டும்**
**பொய்மை பேசாது இருக்கவேண்டும்**
**மதிவேண்டும் நின் கருணைநிதி வேண்டும்**
**நோயற்ற வாழ்வில்**
**நான் வாழ வேண்டும் கந்த கோட்டத்துள்**
**வளர் தலம்ஓங்கு கந்தவேளே.**

**– வள்ளலார் அருளிய திருவருட்பா**

**பாடலின் பொருள்:** “சென்னையில் உள்ள கந்த கோட்டத்துள் எழுந்தருளியிருக்கும் கந்தவேளே! ஒருநெறிப்பட்ட மனத்துடன் நின்னுடைய மலர் போன்ற திருவடிகளை நினைக்கின்ற உத்தமர்களின் உறவே எனக்கு வேண்டும்.

உள்ளத்தில் ஒன்றும் புறத்தில் ஒன்றுமாகப் பேசுகின்ற வஞ்சகர் உறவு என்னை அடையாவாறு காக்க வேண்டும். பெருமைக்குரிய நினது புகழையே நான் பேசுபவனாகவும், பொய்மை மொழிகளைப் பேசாதவனாகவும் இருக்கவேண்டும். மதி நுட்பமும் உன் கருணையாகிய நிதியமும் (செல்வமும்) நோயற்ற வாழ்வும் உடையவனாகவும் நான் இருக்க வேண்டும். இவற்றை நீ அருள வேண்டும்.” என்று வள்ளலார் முருகப் பெருமானிடம் வேண்டுகிறார்.



# தங்கையும் தாயும்நீ

**தடித்தஓர் மகனைத் தந்தை ஈண்டு அடித்தால்**
**தாயுடன் அணைப்பள் தாய் அடித்தால்**
**பிடித்தொரு தந்தை அணைப்பன் இங்கு**
**எனக்குப் பேசிய தந்தையும் தாயும்**
**பொடித்திரு மேனி அம்பலத் தாடும் புனிதநீ**
**ஆதலால் என்னை**
**அடித்தது போதும் அணைத்திடல் வேண்டும்**
**அம்மைஅப் பாஇனி ஆற்றேன்.**

**– வள்ளலார் அருளிய திருவருட்பா**

**பாடலின் பொருள்:** ஒரு குழந்தை தவறு செய்யும் போது அக்குழந்தையைத் தந்தை அடித்தால் தாய் அணைத்துச் சமாதானம் செய்வாள். அல்லது தாய் அடித்தால் தந்தை தடுத்து அணைப்பார். வெண்ணீறு பூசிய மேனியனாய் அம்பலத்தில் ஆடும் தூய்மையானவனே! நான் உன்னைச் சரணடைந்து விட்டேன். இங்கு எனக்குத் தாயும் தந்தையும் நீயே என்பதால் இது நாள் வரை என்னை அடித்தது போதும். இனி அணைத்துக் கொள்ள வேண்டும் என்று இறைவனிடம் வேண்டுகிறார் இராமலிங்க அடிகளார்.



# மனித நேயம்

**வாடிய பயிரைக் கண்டபோது எல்லாம்**
**வாடினேன் பசியினால் இளைத்தே**
**வீடுதோறு இரந்தும் பசியறாது அயர்ந்த**
**வெற்றரைக் கண்டுஉளம் பதைத்தேன்**
**நீடிய பிணியால் வருந்துகின்றோர் என்நேர்**
**உறக்கண்டு உளம்துடித்தேன்**
**ஈடின்மானிகளாய் ஏழைகளாய் நெஞ்சிளைத்தவர்**
**தமைக்கண்டே இளைத்தேன்.**

**– இராமலிங்க அடிகளார் அருளிய திருவருட்பா**

**பாடலின் பொருள்:** நீரின்றி வெயிலில் வாடிய பயிரைப் பார்க்கும் போதெல்லாம் நான் மனம் வாடி வருந்தினேன்.பசியினால் உடல் இளைத்து மெலிந்தவர்கள் , வீடுதோறும் பிச்சை பெற்றும் பசி நீங்காமல் சோர்ந்து போன , கையில் பொருள் ஒன்றும் இல்லாத வறுமையில் வாடுபவர்களைக் கண்டு உள்ளம் பதைத்தேன். நீண்ட நாள் நோயால் வருந்துகின்றவர் என் முன்னால் வரும்போது அவர்களைப் பார்த்து உள்ளம் துடித்தேன். ஒப்பற்ற மானம் உள்ளவர்கள் துன்பத்தில் உழன்றாலும் மற்றவர்களிடம் போய் உதவி கேட்க மாட்டார்கள். அப்படிப் பட்டவர்கள் ஏழைகளாய், உள்ளம் சோர்ந்தவர்களைக் கண்டு நானும் மனம் சோர்ந்தேன்.

சகமனிதன் துன்பப் படுவதைக் கண்டும் காணாமல் போகின்ற இந்தக் காலத்தில் ஓரறிவு உயிராகிய பயிர்கள் வாடுவதைக் கூடச் சகிக்க முடியாமல் உள்ளம் வாடியவர் வள்ளலார் இராமலிங்க அடிகள். மனிதனுக்கு வரும் பிணி (நோய்)களிலேயே மிக மோசமான பிணி பசிப்பிணி தான். இராமலிங்க அடிகள் பசியால் வாடுபவரைக் கண்டு வருத்தப்படுவதோடு நிறுத்திக் கொள்ளாமல், அதற்குத் தீர்வு காணும் வகையில் வடலூரில் அணையாத அடுப்பைக் கொண்ட ஓர் அன்ன சத்திரத்தை நிறுவினார். வள்ளலாரின் மனித நேயப் பண்பை விளக்கும் பாடல் இது .



# அன்பெனும் உயிர் ஒளி

**அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே
அன்பெனும் குடில்புகும் அரசே அன்பெனும்
வலைக்குள் படுபரம் பொருளே
அன்பெனும் கரத்தமர் அமுதே
அன்பெனும் கடத்துள் அடங்கிடும் கடலே
அன்பெனும் உயிர்ஒளி அறிவே
அன்பெனும் அணுவுள் அமைந்தபே ரொளியே
அன்புரு வாம்பர சிவம் .**

**– வள்ளலார் அருளிய திருவருட்பா**

**பாடலின் பொருள்:** மலையை உள்ளங்கையில் அடக்க முடியுமா? ஆனால் மலை போன்ற இறைவன் அன்பெனும் கைப்பிடிக்குள் அகப்படுவான். இறைவன் சென்று தங்குவதற்கு மாட மாளிகை தேவையில்லை. அன்பு இருக்கும் குடிலுக்குள் அவனே சென்று புகும் அளவிற்கு எளிமையானவன்.

எத்தகைய வலைக்கும் அகப்படாத பெரும் பரம்பொருளாக இறைவன் இருப்பினும் அன்பென்னும் மெல்லிய வலைக்குள் எளிதில் அகப்படுவான்.

எதனுள்ளும் அடங்காத பேரமுதமாய் இறைவன் விளங்குவானாயினும் அன்பர்களின் அன்புக்கரத்தில் இனிதாக அமர்வான்.

கடலைக் குடத்தில் அடக்க முடியாது அல்லவா? ஆனால் கடல்போல் பரந்து கிடக்கும் இறைவன், அன்பாகிய சிறு குடத்துக்குள் அடங்கி இன்புறுத்துவான். அன்பு செய்யும் உயிர்க்கு உணர்வு ஒளியாக இருப்பவன்.அந்த அன்பு மிகச் சிறியதாய் இருந்தாலும் அதில் வந்து அடங்கும் பேரொளி அவன்.

பரம்பொருளாகிய இறைவன் அன்பே உருவானவன்.

எடு.:
வேடர் குலத்தில் பிறந்த திண்ணன் முன்பின் பார்த்திராத லிங்கத் திருமேனியைக் கண்டதும், அன்பு மேலீட்டால் பக்திப் பரவசமாகித் தன்

தலையில் சூடிவந்த மலரை இறைவனுக்குச் சூட்டினார். தன் வாயில் கொண்டு வந்த நீரை இறைவனுக்குத் திருமஞ்சன நீராக்கினார். காட்டில் வேட்டையாடிக் கொண்டுவந்த மாமிசத்தைத் தான் முதலில் சுவைத்துப் பார்த்து இறைவனுக்குப் படைத்தார். வழக்கமாகப் பூசை செய்துவரும் சிவகோசரியாருக்குத் திண்ணனாரின் பக்தியை வெளிப்படுத்த விரும்பிய இறைவர் தம் கண்ணில் குருதி வடிய நின்றார். அதைப் பார்த்து மனம் பதறிய திண்ணன் தம் கண்ணில் ஒன்றைப் பெயர்த்து இறைவனின் குருதி வடியும் கண்ணில் அப்பினார். குருதி வடிவது நின்றது. ஆனால் உடனே அடுத்த கண்ணிலும் குருதி வடிந்தது. இப்போது சிறிதும் தயங்காது, குருதி வடியும் கண்ணில் அடையாளத்திற்குத் தம் காலை வைத்துத் தம் இன்னொரு கண்ணையும் பெயர்த்து அப்பத் துணிந்தார். அப்போது இறைவர் "கண்ணப்ப நிற்க" என்று தடுத்து நிறுத்தினார். திண்ணனாரும் கண்ணப்பர் ஆனார். கண்ணப்பர் அன்பே வடிவமாக இருந்ததனால் இறைவனும் அவர் செய்ததை யெல்லாம் மனமுவந்து ஏற்றுக் கொண்டார். இறைவன் அன்புக்கு மட்டுமே கட்டுப்பாட்டவர் என்பதற்கு இதைவிடச் சிறந்த சான்றும் வேண்டுமா?



# பொதுவில் ஆடுகின்ற அரசே

**கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும்வகை கிடைத்த**
**குளிர்தருவே தருநிழலே நிழல்கனிந்த கனியே**
**ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத் தண்ணீரே**
**உகந்த தண்ணீர் இடைமலர்ந்த சுகந்த மணமலரே**
**மேடையிலே வீசுகின்ற மெல்லியபூங் காற்றே**
**மென்காற்றில் விளைசுகமே சுகத்திலுறும் பயனே**
**ஆடையிலே எனைமணந்த மணவாளா பொதுவில்**
**ஆடுகின்ற அரசேஎன் அலங்கல் அணிந்தருளே.**

**– இராமலிங்க அடிகள் திருவருட்பா**

**பாடலின் பொருள்:** கோடைக் காலத்தில் இளைப்பாறுவதற்கு ஏற்ற குளிர்ந்த மரம் போன்றவனே! அந்த மரம் தருகின்ற குளிர்ந்த நிழல் போன்றவனே! அந்நிழலில் கனிந்த கனி போன்றவனே! அருகே ஓடும் நீரோடையில் சுரக்கும் இனிய சுவை பொருந்திய தண்ணீர் போன்றவனே! அத் தண்ணீரில் மலர்ந்திருக்கும் நறுமணம் மிக்க மலர் போன்றவனே! அருகிலுள்ள மேடையிலே வீசுகின்ற மென்மையான தென்றல் காற்றே! அந்த மென்மையான காற்றினால் உடலில் உண்டாகும் சுகம் போன்றவனே! அச் சுகத்தினால் கிடைக்கும் பயனாக விளங்குபவனே! நீ அம்பலத்தில் ஆடும் போதே என் மனதில் நிறைந்தவனே! என் பாமாலையை ஏற்று அருள்வாயாக.



# இராமாயணம் - இலக்கியச் சிந்தனை

> **தாய் உரை கொண்டு தாதை உதவிய தரணி தன்னைத்**
> **"தீவினை என்னநீத்து, சிந்தனை முகத்தில் தேக்கிப்**
> **போயினை என்ற போழ்து, புகழினோய்! தன்மை கண்டால்**
> **ஆயிரம் இராமர் நின்கேழ் ஆவரோ தெரியின் அம்மா!**
>
> **– கம்பராமாயணம், அயோத்தியா காண்டம், குகப் படலம்**

**பாடலின் பொருள்:** "புகழ் உடையவனே! தாயின் வரத்தினால், தந்தை கொடுத்த இந்த அரசாட்சியைத் தீவினை என்று விலக்கி முகத்தில் கவலையோடு நீ காட்டுக்கு வந்தாய். உன் நல்லியல்புகளின் தன்மையை ஆராய்ந்தால் , ஆயிரம் இராமர் சேர்ந்தாலும் உனக்கு ஈடாக மாட்டார்." என்று குகன் இராமனைத் தேடிக் காட்டுக்கு வந்த பரதனைப் பார்த்து வியந்து கூறுகிறான்.

**பாடலின் சூழல்:** தன் தமையன் இராமனை மீண்டும் அயோத்திக்கு அழைத்து வந்து அரசுரிமையை ஏற்றுக் கொள்ளச் செய்யும் தீர்மானத்துடன் பரதன் காட்டுக்கு வருகிறான். பரதன் வந்த நோக்கம் என்னவென்று குகன் வினவ, பரதன் "அயோத்தியின் அரசுரிமை எவருக்கு உரியதோ அவரைக் கூட்டிப் போக வந்துள்ளேன். என்னுடைய தந்தை தம் முன்னோர்களின் வழிமுறையிலிருந்து (மூத்த மகனுக்கு அரசுரிமையை அளித்தல்) தவறிவிட்டார். அந்தத் தவற்றினைச் சரி செய்ய வந்துள்ளேன்." என்று பதில் அளிக்கிறான். அதைக் கேட்ட குகனின் பதில் தான் மேற்கண்ட பாடல்.



# குகனின் இராம பக்தி

**அஞ்சன வண்ணன், என்ஆருயிர் நாயகன் ஆளாமே,**
**வஞ்சனையால் அரசு எய்திய மன்னரும் வந்தாரே!**
**செஞ்சரம் என்பன தீஉமிழ்கின்றன, செல்லாவோ?**
**உஞ்சு இவர் போய்விடின், நாய்க்குகன் என்று எனை ஓதாரோ?**

**– கம்பராமாயணம், அயோத்தியா காண்டம், குகப் படலம்**

**பாடலின் பொருள்:** “கரிய நிறம் கொண்ட என் ஆருயிர் நாயகனாகிய இராமன் ஆள வேண்டிய அரசைச் சூழ்ச்சியால் பெற்றுக் கொண்ட மன்னனாகிய பரதரும் வந்தாரே! தீயைக் கக்குகின்ற என் சிவந்த அம்புகள் இவர்களைக் கொல்லாவோ? என் அம்புக்குத் தப்பி இவர்கள் போய்விட்டால் என்னை எல்லோரும் “நாய்க்குகன்” என்று ஏளனமாகப் பேச மாட்டார்களா?”

இராமனைக் கண்டு அவனிடம் அரசைத் தரவேண்டும் என்று தன் படை பரிவாரங்களோடு வருகிறான் பரதன். ஆற்றைக் கடக்க வேண்டிக் கங்கைக் கரையில் காத்திருக்கிறான். மறு கரையில் குகன் இருக்கிறான். படையோடு வந்த பரதனைக் கண்ட குகன், பரதன் இராமன் மேல் படையெடுத்து வந்து விட்டதாகத் தவறாக நினைக்கிறான். பரதனுடன் சண்டையிட்டு அவன் இராமனிடம் போக விடாமல் தடுத்து நிறுத்தவேண்டும் என்று கோபத்தோடு நினைக்கிறான்.

குகனுக்கு இராமனிடம் உள்ள பக்தியையும் பாசத்தையும் வெளிப்படுத்தும் பாடல்களில் ஒன்று இந்தப் பாடல்.



# கங்கை காண் படலம்

**ஆடு கொடிப் படைசாடி அறத்தவரே ஆள**
**வேடு கொடுத்தது பார்"எனும்இப் புகழ் மேவீரோ?**
**நாடு கொடுத்தஎன் நாயகனுக்கு இவர்நாம் ஆளும்**
**காடு கொடுக்கிலர் ஆகி எடுத்தது காணீரோ?**

**– கம்பராமாயணம், அயோத்தியா காண்டம்,**
**குகப் படலம்**

**பாடலின் பொருள்:** ‘‘அசையும் கொடிகளையுடைய சேனைகளைக் கொன்று, தருமத்தின் துணைவர்களாகிய இராம இலக்குவர் ஆளுமாறு வேடர்கள் இந்தப் பூமியை மீட்டுக் கொடுத்தனர் என்கின்ற இந்தப் புகழை அடையுங்கள். தான் ஆள வேண்டிய நாட்டைப் பரதன் ஆளும்படி கொடுத்து விட்டு வந்த என் தலைவனாகிய இராமனுக்கு, இந்தப் பரதர் நமக்கு உரிமையாகிய, நாம் ஆட்சி செய்யும் இந்தக் காட்டையும் ஆட்சி செய்வதை மனம் பொறாதவராய் படையெடுத்து வந்ததைக் காணுங்கள்’’

சேனை வீரர் புடைசூழ வந்த பரதன் மேல் போர் தொடுக்கும்படி தன் வேட்டுவ வீரர்களிடம் வீர வசனம் பேசுகின்றான் கங்கைக் கரை வேடன் குகன். வீரர்களிடம் அவரவர் மனநிலைக்கு ஏற்பத் தூண்டிப் பரதனுடன் போர் செய்வதற்கு அவர்களைத் தயார் செய்கிறான் குகன். போர் செய்யக் காத்திருக்கும் தினவெடுத்த தோள்களை உடைய வீரர்களைப் பார்த்து, ஆடு கொடிப்படை சாடி’’ என்றான். அறத்தின் பொருட்டுத் தம் உயிரையும் கொடுக்கும் மனம் கொண்ட வீரர்களை நோக்கி, ‘‘அறத்தவரே ஆள’’ என்றான்.

புகழுக்கு ஆசைப்படும் வீரர்களைப் பார்த்து, ‘‘வேடு கொடுத்தது பார் எனும் இப்புகழ் மேவீர்’’ என்றான். இவ்வாறு பல்வேறு மனநிலையை உடைய வீரர்களையும் அவரவர்க்கு ஏற்பப் பேசிப் போர்க்குத் தயார் செய்வதாகக் குகனைப் பேச வைத்த விதம் கம்பரின் கவித்திறத்திற்கும், சொல்லாட்சிக்கும் ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகும்.



# கம்பராமாயணம் - அயோத்தியா காண்டம்

**தையல்தன் கற்பும் தன்தகவும் தம்பியும்**
**மையறு கருணையும் உணர்வும் வாய்மையும்**
**செய்யதன் வில்லுமே சேமம் ஆகக்கொண்டு**
**ஐயனும் போயினான் அல்லின் நாப்பணே!**
**– கம்பராமாயணம், அயோத்தியா காண்டம்**

**பாடலின் பொருள்:** நள்ளிரவில் சீதையின் கற்பும், தன் மேன்மைப் பண்பும், தம்பி இலக்குவனும், குற்றமற்ற அருளும், ஞானமும், சத்தியமும், நேரிய தனது வில்லும் ஆகிய இவற்றையே தனக்குப் பாதுகாவலாகக் கொண்டு இராமபிரான் காட்டிற்குச் செல்வதற்கான பயணத்தைத் தொடங்கியதாகக் கம்பர் குறிப்பிடுகிறார்.

அல்லின் நாப்பண் – நள்ளிரவில்.



# கைகேயி சூழ்ச்சிப் படலம்

**“ஆழிசூழ் உலகம் எல்லாம் பரதனே ஆள, நீபோய்,**
**தாழ்இருஞ் சடைகள் தாங்கி, தாங்க அரும்தவம்**
**மேற்கொண்டு பூழிவெங் கானம்நண்ணி,**
**புண்ணியத் துறைகள் ஆடி ஏழ் இரண்டு ஆண்டின் வா**
**என்று இயம்பினன் அரசன்” என்றாள்.**

**– கம்பராமாயணம்,**
**அயோத்தியா காண்டம், கைகேயி சூழ்ச்சிப் படலம்**

**பாடலின் பொருள்:** “கடல் சூழ்ந்த உலகம் முழுவதையும் பரத னே ஆள, நீ நீண்ட சடாமுடி தரித்து, அரிய தவம் மேற்கொண்டு, காடு சென்று, புண்ணிய நதிகளில் நீராடி, பதினான்கு ஆண்டுகள் சென்றபின் திரும்பி வா. இது அரசன் ஆணை” இராமனை அழைத்துவரச் செய்து கைகேயி இவ்வாறு கூறினாள்.

கைகேயியின் வஞ்ச மனத்தையும், அவள் பேச்சின் நயத்தையும் இப்பாடல் உணர்த்துகிறது. அரசனிடம் தான் வரம் கேட்டதை மறைத்து, சடாமுடி தாங்குதல், தவம் மேற்கொள்ளுதல், கானகம் செல்லுதல், புண்ணிய தீர்த்தங்களில் நீராடுதல் முதலிய நற்பயன்கள் இராமனுக்குக் கிடைக்க வேண்டும் என்பதற்காகவே அரசன் இவ்வாறு பணித்தான் என்பது தோன்றக் கைகேயி இராமனிடம் கூறினாள். தந்தை கூறினான் என்று சொல்லாமல் அரசன் இயம்பினன் என்றதனால் அரசனின் ஆணையை மீறக் கூடாது என்று உணர்த்தினாள்.

ஆழி – கடல்.
நண்ணி – அடைந்து.
பூழி – புழுதி.
ஏழ் இரண்டு – பதினான்கு.



# நஞ்சம் என வஞ்ச மகள்

> **பஞ்சி ஒளிர்,விஞ்சு குளிர் பல்லவம் அனுங்க,**
> **செஞ்செவிய கஞ்சம் நிகர், சீறடியள் ஆகி,**
> **அம் சொல் இள மஞ்ஞை என, அன்னம் என, மின்னும்**
> **வஞ்சிஎன, நஞ்சம் என, வஞ்ச மகள் வந்தாள்.**
> **– கம்பராமாயணம் (ஆரண்ய காண்டம்,**
> **சூர்ப்பணகைப் படலம்)**

**பாடலின் பொருள்:** செம்பஞ்சும், குளிர்ச்சி தரும் இளம் தளிர்களும் இருந்த, சிவந்த தாமரை மலரை ஒத்த, தனது சிறிய அடிகளை எடுத்து வைத்து, அழகிய சொற்கள் பேசும் இளமயில் போலவும், அன்னப் பறவை போலவும், மின்னல் கொடி போலவும், விஷம் போலவும் வஞ்சனையே உருவாகிய அந்தச் சூர்ப்பணகை வந்தாள்.

**விளக்கம்:** இராமன் சீதை இலக்குவருடன் பஞ்சவடியில் தங்கி யிருந்தபோது, சூர்ப்பணகை உள்ளத்திலே வஞ்சக எண்ணம் கொண்டு அழகிய உருவம் எடுத்து அங்கே வந்தாள். அரக்கி வடிவில் சென்றால் இராமனின் கவனத்தை ஈர்க்க முடியாது என்று தன் அரக்கி வடிவத்தை மறைத்துக் கொண்டு அழகான பெண் உருக்கொண்டு சூர்ப்பணகை வருகிறாள். மெல்லின எழுத்துகள் நிறைந்த சொற்கள் சூர்ப்பணகையின் மென்மையான நடையையும், நஞ்சம் என வஞ்சமகள் வந்தாள் என்பதன் மூலம் அவளுடைய வஞ்சகமான இயல்பையும் கவிதை வெளிப்படுத்துகிறது.

“மஞ்ஞை என, அன்னம் என, வஞ்சி என, பஞ்சம் என” என்று பல உவமைகள் மாலை போல் வந்துள்ளதால் இப்பாடலில் மாலை உவமை யணி பயின்று வந்துள்ளது.



# தசரதனின் புத்திரன்

**மசரதம் அனையவர் வரமும் வாழ்வும், ஓர்**
**நிசரத கணைகளால் நீறு செய்ய, யாம்**
**கசரத துரகம் ஆள் கடல்கொள் காவலன்**
**தசரதன் மதலையாய் வருதும் தாரணி.**

**– கம்பராமாயணம்**
**(பால காண்டம், திருஅவதாரப் படலம்)**

**பாடலின் பொருள்:** "கானல் நீரைப் போன்ற நிலையற்றவர்களும், பலவீனமானவர்களுமாகிய அரக்கர்களுடைய வரங்களின் பலத்தையும், வாழ்வையும், எமது குறிதவறாத அம்பு களால் சாம்பலாக்கி அழிக்க, யாமே யானை, தேர், குதிரை, காலாள் என்னும் நால்வகைப் பெருஞ் சேனைகளை உடைய வேந்தனான தசரதனின் புத்திரனாகப் பூவுலகில் வந்து அவதரிக்கின்றோம்" என்று திருமால் தேவர்களிடம் கூறினார்.

**விளக்கம்:** "திருமாலே! நாங்கள் கொடுத்த வரத்தால் அரக்கர்கள் மூவுலகங்களையும் அழிக்கின்றனர். இதைத் தீர்த்து வையுங்கள். இல்லையேல் உலகையே விழுங்கி விடுவர்" என்று தேவர்கள் திருமாலிடம் முறையிட்டனர். அப்போது "வருந்தாதீர், அரக்கர்களைக் கொன்று, உலகின் துன்பத்தைக் குறைப்பேன். தேவர்கள் அனைவரும் குரங்குகளாகப் பிறந்து காடு மலை யெங்கும் உங்களது படையோடு வாருங்கள் . நான் தசரதன் மகனாக வருவேன். என் சங்கு, சக்கரம், பாம்பு ஆகிய மூன்றும் என் தம்பிகளாக வருவர்" என்றார் திருமால்.



# விதியின் பிழை

**நதியின் பிழையன்று நறும்புனல் இன்மை ; அற்றே
பதியின் பிழையன்று ; பயந்துநமைப் புரந்தாள்
மதியின் பிழையன்று; மகன்பிழை அன்று; மைந்த!
விதியின் பிழை ; நீ இதற்கு என்னை வெகுண்டது?
என்றான்.**

**– கம்பராமாயணம், அயோத்தியா காண்டம்,
நகர்நீங்கு படலம்**

**பாடலின் பொருள்:** கைகேயிக்குக் கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவதற்காகப் பரதன் நாடாளவும், இராமன் பதினான்கு ஆண்டுகள் காட்டுக்குச் செல்லவும் தசரதன் ஆணையிட்டதாக அறிந்த இலக்குவன் கோபம் கொண்டு அனைவரையும் பழி வாங்குவேன் என்று சூளுரைக்கிறான். அதைக் கேட்ட இராமன், இலக்குவனைச் சமாதானம் செய்வது தான் இந்தப் பாடல்.

“நதியில் நீர் இல்லையென்றால் அது நதியின் குற்றமன்று. மழை பொழியாத இயற்கையின் குற்றமாகும். அதுபோல் நம் தந்தை தசரதன் பிழைஅன்று; நம்மை அன்போடு வளர்த்த கைகேயியின் அறிவின் பிழை அன்று . பரதனின் பிழையும் அன்று. மைந்தனே! இது விதியின் பிழை. நீ ஏன் இதற்குக் கோபப்படுகிறாய்” என்று இராமன் இலக்குவனிடம் கூறுகிறான் .



# தோள்கண்டார் தோளே கண்டார்

**தோள்கண்டார் தோளே கண்டார் தொடுகழல் கமலம் அன்ன**
**தாள்கண்டார் தாளே கண்டார் தடக்கை கண்டாரும்அக்தே**
**வாள்கொண்ட கண்ணார் யாரே வடிவினை முடியக் கண்டார்**
**ஊழ்கொண்ட சமயத்து அன்னான் உருவு கண்டாரை ஒத்தார்.**
**- – கம்பராமாயணம், பால காண்டம், உலாவியற் படலம்**

**பாடலின் பொருள்:** இராமபிரான், இலக்குவன் விசுவாமித்திரர் உடன் வர மிதிலை நகருக்குள் எழுந்தருளி வருகிறார். வீதிக ளில் கூடியிருந்த மகளிர் யாவரும் கோசலை மைந்தன் இராமனின் திருமேனி அழகினை வியந்து போற்றுகின்றனர். இராமனின் திண்மையான திருத்தோள்களைக் கண்ட கன்னியர் அதனின்றும் கண்களை விலக்க இயலாது நின்றனர். அது போன்றே கழல் அணிந்த தாமரை மலர் போன்ற திருவடிகள், திருக்கைகள் ஆகிய அங்கங்களைத் தரிசிக்கும் மகளிரும் அவற்றிலேயே இலயித்து ஆனந்த வெள்ளத்தில் மூழ்கினராம். இக்காரணத்தால் அப்பெண்களுள் எவரும் இராமனின் திருமேனி அழகு முழுவதையும் ஒரு சேர தரிசிக்க முடியாமல் போனதாம். இந்நிகழ்வு எப்படி இருந்ததாம் என்றால் “சைவம், வைணவம், சாக்தம், காணாபத்யம், கௌமாரம், சௌரம் என்னும் இந்து தர்ம உட்பிரிவுகளின் வழி நிற்போர் அந்தந்த சமயம் முன்னிறுத்தும் தெய்வ வடிவத்தை மட்டுமே மனதில் நினைத்து , அந்த ஆனந்த அனுபவத்திலேயே முழுநிறைவு கண்டு விடுவதை ஒத்திருக்கின்றது” என்று கம்பர் கூறுகின்றார். இராமபிரான் இறைவனின் (திருமாலின்) மானுட அவதாரம் ஆகையால் இறைவனை முழுமையாக அறிந்து கொள்வது என்பது யாருக்கும் இயலாத காரியம் என்பதே இப்பாடல் உணர்த்தும் செய்தி ஆகும்.

சைவம் – சிவ வழிபாடு.
சாக்தம் – சக்தி.
கௌமாரம் – குமரக் கடவுள்.
வைணவம் – விஷ்ணு.
காணாபத்தியம் – கணபதி.
சௌரம் – சூரியன்.



# சொல்லொக்கும் சுடுசரம்

**சொல்ஒக்கும் கடியவேகச் சுடு சரம் கரியசெம்மல்
அல்ஒக்கும் நிறத்தினாள்மேல் விடுதலும் வயிரக்குன்றக்
கல்ஒக்கும் நெஞ்சில் தங்காது அப்புறம் கழன்று கல்லாப்
புல்லர்க்கு நல்லோர் சொன்ன பொருள்எனப் போயிற்றன்றே.**

**– கம்பராமாயணம். தாடகை வதைப் படலம்**

**பாடலின் பொருள்:** இராமன் எய்த அம்பு ,இருளினை ஒத்த கரிய நிறம் கொண்ட தாடகையின் மார்பகத்தை ஊடுருவிச் சென்று முதுகு வழியே மின்னல் வேகத்தில் வெளியே வந்தது. தாடகையின் நெஞ்சு கடுமையான மலையைப் போன்றது. கல்லையொத்த தாடகையின் நெஞ்சில் புகுந்த இராம பாணம் ,ஒரு விநாடியும் அவ்வயிர நெஞ்சில் தங்காது வேகமாக ஊடுருவிப் பின்புறம் போயிற்றாம். அந்த அம்பு வெளி வந்த வேகம் எப்படி இருந்ததாம் என்றால், "கல்லாதவர்க்குக் கற்றவர் அறிவுரை கூறினால் அச்சொற்கள் ஒரு காதின் வழியே நுழைந்து, மறு காதின் வழியே அப்போதே வெளியேறிவிடுமாம். அக்கருத்துகள் அவர்கள் நெஞ்சத்தில் சிறிது நேரமும் நிற்பதில்லை. அத்துணை வேகம் இராமனது அம்பில் இருந்தது என்கிறார் கம்பர்.

இப்பாடல் இராமனின் வில்லாற்றலை முதன் முதலாகக் கம்பன் அறிமுகப் படுத்தும் இடம். தாடகையின் உள்சென்ற இராமபாணத்தின் வேகம் சொல்லைப் போல் இருந்ததாம். வேகத்துக்கு உவமையாக வாயு வேகம், மனோவேகம் என்று சொல்வது இயல்பு. ஆனால் கம்பர் "சொல்ஒக்கும் கடிய வேகம்" என்று சொல்லை வேகத்திற்கு உவமையாகக் கூறுகிறார். ஏனென்றால் மனதை விட வேகமானது சொல். சொல் சில சமயங்களில் மனம் சிந்தித்து முடிக்கும் முன்பே கிளம்பிச் சென்றுவிடும்.

சொல்லும் பொருளும் மொழியின் இரு பகுதிகள். வெளியிலிருந்து தாடகையின் உடலுள் சொல்லாகச் சென்ற இராமபாணம், தாடகையின் உடலுள் இருந்து வெளியில் செல்லும்போது கல்லாப் புல்லர்க்கு நல்லோர் சொன்ன பொருளாக வெளியேறுகிறது என்று சொன்னது கம்பனின் இலக்கிய நயம். "சொல்லொக்கும் கடிய வேகச் சுடுசரம் பொருளெனப் போயிற்றன்றே."



# கம்பராமாயணம்

**அஞ்சிலே ஒன்று பெற்றான் அஞ்சிலே**
**ஒன்றைத் தாவி**
**அஞ்சிலே ஒன்று ஆறாக ஆரியர்க் காக ஏகி**
**அஞ்சிலே ஒன்று பெற்ற அணங்கைக் கண்டு**
**அயலார் ஊரில்**
**அஞ்சிலே ஒன்றை வைத்தான் அவன்**
**எம்மை அளித்துக் காப்பான் .**
**– கம்பராமாயணம்**

**பாடலின் பொருள்:** நிலம், நீர், தீ, காற்று (வளி, வாயு) ஆகாயம்(வெளி) ஆகிய ஐந்தும் ஐம்பூதங்கள் (பஞ்ச பூதங்கள்). ஐம்பூதங்களுள் ஒன்றாகிய வாயுவின் மகன் அனுமன். அவன் இராமனுக்காகச் சீதையைத் தேடிச் சென்றபோது நீரால் நிறைந்த கடலைத் தாவிக் கடந்தான். அப்படித் தாவியபோது அவனுக்கு வழி (ஆறு)யாக அமைந்தது ஐம்பூதங்களுள் ஒன்றாகிய ஆகாயம். அவ்வாறு இலங்கைக்குச் சென்று ஐம்பூதங்களுள் ஒன்றாகிய பூமி பெற்ற மகளாகிய சீதையைக் கண்டான்.

அயலார் ஊராகிய இலங்கையில் ஐம்பூதங்களுள் ஒன்றான தீயை வைத்தான். அப்படிப் பட்டவனாகிய அனுமன் நம்மைக் காத்தருள்வான்.



# எடுத்தது கண்டனர், இற்றது கேட்டார்

**தடுத்து இமையாமல் இருந்தவர், தாளில்**
**மடுத்ததும், நாண்நுதி வைத்ததும், நோக்கார்,**
**கடுப்பினால் யாரும் அறிந்திலர், கையால்**
**எடுத்தது கண்டனர், இற்றது கேட்டார்.**

**– – கம்பராமாயணம், பாலகாண்டம்**

**பாடலின் பொருள்:** விசுவாமித்திரரின் அறிவுறுத்தலால், இராமன் சனகன் வைத்திருந்த சிவ வில்லை வளைக்கச் செல்கிறான். இதுவரை யாராலும் அதை வளைக்க முடிந்த தில்லை.அதனால் அவையோர் அனைவரும் என்ன நடக்குமோ என்று அறிய ஆவலோடு காத்திருந்தனர். கண்களைக் கூட இமைக்காமல் பார்த்துக் கொகொண்டு இருந்தனர்.

இராமன் தன் திருவடியால் அந்த வில்லின் முனையை மிதித்ததையும், அதை வளைத்து நாண் ஏற்றியதையும், அந்தச் செயல் நிகழ்ந்த வேகத்தால் அவர்களால் காண முடியவில்லை. என்ன நிகழ்ந்தது என்று அவர்களால் மனதாலும் உணர முடியவில்லை.

இராமன் தன் கையால் வில்லை எடுத்ததைக் கண்டார்கள். அடுத்த கணம் அந்த வில் முறிந்து விழுந்த பேரொலியைக் கேட்டனர். கண் இமைக்கும் நேரத்தில் எல்லாம் நிகழ்ந்து முடிந்து விட்டது.
தாளில் – பாதத்தில்.
மடுத்ததும் – மிதித்ததையும்.
நுதி – முனை.
கடுப்பினில் – வேகத்தால் .
இற்றது – முறிந்தது.



# காளி நீ காத்தருள் செய்

**கரணமும் தனுவும் நினக்கெனத் தந்தேன்,**
**காளிநீ காத்தருள் செய்யே!**
**மரணமும் அஞ்சேன், நோய்களை அஞ்சேன்,**
**மாரவெம் பேயினை அஞ்சேன்;**
**இரணமும் சுகமும், பழியுநற் புகழும்,**
**யாவுமோர் பொருளெனக் கொள்ளேன்;**
**சரணமென் றுனது பதமலர் பணிந்தேன்;**
**தாயெனைக் காத்தலுன் கடனே!**

**– பாரதியார்**

**பாடலின் பொருள்:** “காளிதேவியே! என் மனதையும் உடலையும் உனக்காக அர்ப்பணித்து விட்டேன். நீ என்னைப் பாதுகாத்து அருள் செய்வாயாக. மரணத்தைக் கண்டோ, பிணிகளைக் கண்டோ பயப்பட மாட்டேன். மன்மதனாகிய கொடிய பேயைக் கண்டும் அஞ்ச மாட்டேன். துன்பமோ இன்பமோ, பழியோ புகழோ எதுவாயினும் பொருட்படுத்த மாட்டேன். நீயே அடைக்கலம் என்று உன் மலர்ப் பாதங்களை வணங்கினேன். என்னைக் காப்பாற்றுவது உன் கடமை யாகும்.”

கரணம் – ஐம்புலன்களும், மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய அகக் கருவிகளும்.

தனு – உடம்பு.
இரணம் – துன்பம்.
சரணம் – அடைக்கலம்.



# எத்தனை கோடி இன்பம்



**எத்தனை கோடி இன்பம் வைத்தாய்! – எங்கள்**
**இறைவா! இறைவா! இறைவா!**
**சித்தினை அசித்துடன் இணைத்தாய் – அங்குச்**
**சேரும்ஐம் பூதத்து வியனுலகு அமைத்தாய்**
**அத்தனை உலகமும் வர்ணக் களஞ்சிய**
**மாகப் பலபலநல் அழகுகள் சமைத்தாய்.**
**முக்தியென்று ஒருநிலை சமைத்தாய் –அங்கு**
**முழுதினையும் உணரும் உணர்வு அமைத்தாய்**
**பக்தியென்று ஒரு நிலை வகுத்தாய் –**
**எங்கள் பரமா! பரமா! பரமா!**

**– பாரதியார்**

**பாடலின் பொருள்:** "எங்கள் இறைவனே! எங்களுக்காக இந்தப் பூமியில் கோடிக் கணக்கான இன்பங்களைப் படைத்து, எங்களுக்குஅருள்கிறாய்.

சித்து என்பது அறிவுப் பொருள். அசித்து என்பது அறிவற்ற சடப் பொருள். இவை இரண்டையும் ஒன்று சேர்த்தாய். அங்கு பஞ்சபூதங்களை ஒன்று கூட்டி, பெருமையுடைய பூமியை உருவாக்கினாய். அந்தப் பூமி முழுவதும் பல வண்ணக் கருவூலமாகத் திகழப் பற்பல அழகுகளைப் படைத்தாய்!

எங்களுடைய பரம்பொருளே! வீடுபேறு என்ற ஒரு நிலைப்பாட்டை உருவாக்கினாய்! அதனில் யாவற்றையும் அறிந்து கொள்ளும் அறிவை ஏற்படுத்தினாய்! தெய்வத்தின் மீது நம்பிக்கை என்ற தன்மையை வகுத்துத் தந்தாய்!

வகுத்துத் தந்தாய்! இறைவா! இறைவா! சைவ சித்தாந்தம் கூறும் முப்பொருள்கள் பதி, பசு, பாசம். பதி என்பது பரமாத்மா. முற்றறிவு உடையது. பசு என்பது ஜீவாத்மா. சிற்றறிவு உடையது. அதாவது பதியும் , பசுவும் சித்துப் பொருள்கள்.

பாசம் என்பது அறிவற்ற சடப் பொருள். நம் உடலும் உலகமும் இதில் அடங்கும். இவையெல்லாம் அசித்துப் பொருட்கள். அசித்தாகிய நம் உடலுடன் சித்தாகிய உயிர் சேர்ந்தால் தான் உடல் இயங்கும். தன்னிச்சையாக அது இயங்காது.

உயிருடன் கூடிய நம் உடல் அனுபவிப்பதற்காகப் பஞ்ச பூதங்களால் ஆன, வண்ண மயமான இந்த உலகத்தை இறைவன் படைத்தான். ஆன்மாவின் விடுதலைக்காக (மீண்டும் பிறவாமை) முக்தி என்ற ஒரு நிலையைப் படைத்தான். அதை அடைவதற்கான வழியையும் அவனே காட்டினான். அது தான் பக்தி. இத்தனை இன்ப அனுபவங்களை நமக்காகப் படைத்துக் கொடுத்த இறைவனிடம் பக்தி செலுத்தி அவன் திருவடிகளில் சேர்வதே முக்தி.

# வேண்டிய தனைத்தும் அருள்

**தேவ தேவா! சிவனே! கண்ணா!**
**வேலா! சாத்தா! விநாயகா! மாடா!**
**இருளா! சூரியா! இந்துவே! சக்தியே!**
**வாணீ! காளீ! மாமக ளேயோ!**
**ஆணாய்ப் பெண்ணாய் அலியாய், உள்ளது**
**யாதுமாய் விளங்கும் இயற்கைத் தெய்வமே!**
**வேதச் சுடரே! மெய்யாங் கடவுளே!**
**அபயம் அபயம் அபயம் நான் கேட்டேன்,**
**நோவு வேண்டேன்; நூறாண்டு வேண்டினேன்;**
**அச்சம் வேண்டேன்; அமைதி வேண்டினேன்;**
**உடைமை வேண்டேன், உன்துணை வேண்டினேன்;**
**வேண்டா தனைத்தையும் நீக்கி**
**வேண்டிய தனைத்தும் அருள்வதுன் கடனே!**

**– பாரதியாரின் தோத்திரப் பாடல்கள்**

**பாடலின் பொருள்:** “இறைவனே! சிவபெருமானே! கண்ணபிரானே! வேலனே! சாத்தனே! விநாயகா! மாடா! இருளா! சூரியா! சந்திரனே! சக்தியானவனே! கலைவாணியாகத் திகழ்பவனே! காளி தேவியாக இருப்பவனே! திருமகளாய்ப் பொலிபவனே! ஆணாகப் பெண்ணாக அலியாக இவ்வுலகில் உள்ள அனைத்துமாக விளங்கும் இயற்கை ஆகிய கடவுளே! வேத ஒளியே! உண்மை எனும் இறைவனே! அடைக்கலம் தருவாய் எனப் பலமுறை உன்னிடம் நான் வேண்டினான். வலிகளை நான் விரும்பவில்லை. நூறாண்டு காலம் வாழும் ஆயுளை விரும்பினேன். பயத்தை நான் விரும்பவில்லை; அமைதியை நான் விரும்பினேன்.

செல்வத்தை நான் விரும்பவில்லை; உன் ஆதரவையே விரும்புகிறேன். நான் விரும்பாதவற்றை என்னிடமிருந்து விலக்கி, நான் விரும்புகின்ற அனைத்தையும் எனக்கு வழங்கி அருள்வது உன் கடமையாகும்.”



# ஓம் எனும் நயப்படு மது

**இயற்கையென்று உனையுரைப்பார் – சிலர்**
**இணங்கும்ஐம் பூதங்கள் என்றிசைப்பார்;**
**செயற்கையின் சக்தியென்பார் – உயிர்த்**
**தீயென்பர், அறிவென்பர், ஈசன் என்பர்,**
**வியப்புறு தாய்நினக்கே – இங்கு**
**வேள்விசெய்திடும் எங்கள் "ஓம்" என்னும்**
**நயப்படு மதுவுண்டே – சிவ**
**நாட்டியம் காட்டிநல் லருள் புரிவாய்.**

**– பாரதியார் சிவசக்தியை வேண்டிப் பாடிய தோத்திரம்**

**பாடலின் பொருள்:** சிவசக்தி தாயே! இயற்கையில் உள்ள அனைத்துமாக இருப்பவள் என்று உன்னைச் சொல்வார்கள். வேறு சிலரோ, நீ ஒன்றிணைந்த பஞ்ச பூதங்கள் என்று உன்னைப் புகழ்வார்கள். மனிதர்களால் உருவாக்கப்பட்ட ஆற்றல் நீ என்பார்கள். உயிர் நெருப்பு என்று உரைப்பார்கள். ஞானம் என்று உரைப்பர். ஈசனாகிய பரம்பொருள் என்று கூறுவர். பெரும் அதிசயமான அன்னையே, உனக்காக யாகம் வளர்த்து இங்கு நாங்கள் உரைக்கின்ற "ஓம்" என்ற, உன்னால் விரும்பப்படுகின்றகள் உண்டு. அக்கள்ளைப் பருகிச் சிவநடனம் புரிந்து எங்களுக்கு நல்லருள் புரிவாய்.



# பாட்டாளி தெய்வம்

**தெய்வம் யாவும் உணர்ந்திடும் தெய்வம்,**
**தீமை காட்டி விலக்கிடும் தெய்வம்;**
**உய்வம் என்ற கருத்துடை யோர்கள்**
**உயிரினுக்குயிர் ஆகிய தெய்வம்;**
**செய்வம் என்றொரு செய்கை எடுப்போர்**
**செம்மை நாடிப் பணிந்திடு தெய்வம்;**
**கைவ ருந்தி உழைப்பவர் தெய்வம்**
**கவிஞர் தெய்வம், கடவுளர் தெய்வம்.**

**– பாரதியார் பாடிய கலைமகள் துதி**

**பாடலின் பொருள்:** தெய்வங்களே உணர்ந்திடும் தெய்வம் கலைவாணி. நமக்குத் தீயவற்றை அறிவுறுத்தி அதனை நீக்கிடும் கடவுள். வாழ்க்கையில் உயர வேண்டும் என்று எண்ணுபவர்களுக்கு உயிரில் உயிராக விளங்கும் கடவுள். எடுத்த காரியத்தைச் செவ்வனே முடிக்க உறுதி பூண்டு உழைப்பவர், அக்காரியம் நிறைவேற விரும்பி வந்து வணங்கிடும் தெய்வம் ; மெய்வருந்தப் பாடுபடும் பாட்டாளிகளின் தெய்வம்; கவிஞர்களின் தெய்வம்; இறைசக்திகள் அனைத்திற்கும் கடவுள் கலைமகளே!



# மன்ன நிதம் காக்கும் மகாசக்தி

**தன்னை மறந்து சகல உலகினையும்
மன்ன நிதம்காக்கும் மகாசக்தி – அன்னை
அவளே துணையென்று அனவரதம் நெஞ்சம்
துவளாது இருத்தல் சுகம்.**

**– பாரதியார், பராசக்தி தோத்திரப் பாடல்**

**பாடலின் பொருள்:** தன் வசம் இழந்தவளாக, அனைத்து உலகங்களும் நிலைபெற அனுதினமும் பாதுகாக்கும் தாய் பராசக்தி. அவளே நமக்கு ஆதரவு என்று நினைத்து , எப்போதும் மனம் சோர்ந்து விடாமல் இருப்பதே இன்பம் ஆகும்.

மன்ன – நிலைபெற.
அனவரதமும் – எப்பொழுதும்.
துவளாதிருத்தல் – சோர்ந்து விடாமல் இரத்தல்.



## காண்பது சக்தி; காட்சி நித்தியம்

**நிற்பதுவே, நடப்பதுவே, பறப்பதுவே, நீங்களெல்லாம்
சொற்பனந் தானோ? – பல தோற்ற மயக்கங்களோ?
கற்பதுவே, கேட்பதுவே, கருதுவதே, நீங்க ளெல்லாம்
அற்ப மாயைகளோ? – உம்முள் ஆழ்ந்த பொருளில்லையோ?
காண்பவெல்லாம் மறையுமென்றால் மறைந்தவெல்லாம்
காண்பமன்றோ?
வீண்படு பொய்யிலே – நித்தம் விதிதொடர்ந் திடுமோ?
காண்பதுவே உறுதி கண்டோம் காண்பதல்லால் உறுதியில்லை;
காண்பது சக்தியாம் – இந்தக் காட்சி நித்தியமாம்.**

**– பாரதியார், ஞானப் பாடல்கள்**

**பாடலின் பொருள்:** அசையாமல் நிலைபெற்று இருக்கின்ற பொருள்களே! நடந்து செல்கின்ற உயிர்களே! பறவைகளே! நீங்கள் அனைவரும் வெறும் கனவுகள் தானோ? அன்றி அறிவு மயக்கத்தில் விளைந்த காட்சிகள் தானோ? கற்றறியும் விடயங்களே! கேட்டறியும் செய்திகளே! மனதால் எண்ணும் சிந்தனைகளே! நீங்கள் எல்லாம் கீழ்மையான பொய்த் தோற்றங்கள் தானோ? உங்களுக்குள் ஆழ்ந்த உண்மை இல்லையோ?

பார்க்கக் கூடிய தோற்றம் அனைத்தும் மறையக் கூடியன என்றால், மறைந்தவை எல்லாம் வேறு வடிவங்களில் பார்க்கக் கூடியனதானே? அர்த்தமற்ற பொய்யாகவே தினந்தோறும் விதி நம்மை இயக்கிடுமோ? நம் கண்ணால் காண்பவை எல்லாம் நிச்சயமான உண்மை என அறிந்தோம். நாம் பார்க்கின்றவை தவிர வேறு எதுவும் நிச்சயமான உண்மை இல்லை. நாம் காண்பவை அனைத்தும் பராசக்தியின் வடிவங்களே! இந்தத் தோற்றங்கள் அனைத்தும் நிரந்தரமானவை ஆகும்.



# நல்லதோர் வீணை செய்தே

**நல்லதோர் வீணை செய்தே – அதை**
**நலம்கெடப் புழுதியில் எறிவதுண்டோ?**
**விசையுறு பந்துதினைப் போல் – உள்ளம்**
**வேண்டிய படிசெலும் உடல்கேட்டேன்!**
**நசையறு மனம்கேட்டேன் – நித்தம்**
**நவம்எனச் சுடர்தரும் உயிர்கேட்டேன்!**
**தசையினைத் தீசுடினும் – சிவ**
**சக்தியைப் பாடும்நல் அகம்கேட்டேன்!**
**அசைவறு மதிகேட்டேன்**
**இவை அருள்வதில் உனக்கெதும் தடையுளதோ?**
**– பாரதியார் பாடிய தெய்வப் பாடல்கள்**

**பாடலின் பொருள்:** பாரதி சிவசக்தியிடம் வேண்டியது : தாயே சிவசக்தி, அழகான வீணை ஒன்றை உருவாக்கி அதனை மீட்டி நல்லிசை எழுப்பாமல், அதன் நலன் கெடுமாறு தெரு ப் புழுதியில் வீசி எறிவார்களா?

வேகமாகச் செலுத்தப்படும் பந்தைப் போல,என் மனம் விரும்பும்படியெல்லாம் செயலாற்றும் உடல் வலிமையை வேண்டினேன். பேராசையற்ற மனம் வேண்டினேன். தினம்தோறும் புதுமையாக ஒளிர்விடும் உயிரை வேண்டினேன். என் உடலின் தசைகள் நெருப்புக்கு இரையாகும் நிலையிலும் கூட சிவசக்தியைப் போற்றும் தூய்மையான உள்ளத்தை வேண்டினேன். தடுமாற்றம் இல்லாத நல்லறிவை வேண்டினேன். இவை அனைத்தையும் எனக்குத் தருவதில் உனக்கு ஏதாவது தடை உள்ளதா?

**விளக்கம்:** வீணையைப் போல் பிறருக்குப் பயன்படக் கூடியவனாக என்னைப் படைத்த நீ, அந்த அறிவால் உலகுக்கு உதவும் ஆற்றலை அருளவில்லை யென்றால் என்ன பயன்?

உறுதியான உடலைப் பெற்றால் மட்டும் போதாது. ஆசை முதலிய மாசுகள் இல்லாத மனம் வேண்டும்.

எப்போதும் சென்றதையே எண்ணிச் சோர்ந்து போனால் தூய்மையான மனம் பெற்று என்ன பயன்? அதனால் தான் புதிதாகச் சுடர்விட்டு ஒளி

வீசும் உயிர்த் துடிப்பை வேண்டுகிறார். எந்த நிலையிலும் சக்தியைத் து தி க்கும் எந்த நிலையிலும் சக்தியைத் துதிக்கும் நல்ல மனத்தைத் தமது தேவைகளில் உயர்ந்ததாகக் கூறுகிறார். இறைவனை இறைஞ்சும் இதயம் அந்த இறைவனுடன் ஒன்றாகக் கலந்து, தன்னை மறந்திருக்கும் போது அங்கே அசைவற்ற மதி மலரும். “சும்மா இரு, சொல் அற” என்ற அருணகிரியாரின் அனுபவம் போல, “தான்” அற்ற நிலையில் சொல்லும் செயலும் அற்று ஆன்ம ஒளியில் மூழ்கி யிருந்தால் அச்சமும் துன்பமும் நீங்கி மனம் மகிழும்.



# யானை முகத்தவனே!

> **கடமைதான் ஏது? கரிமுகனே! வையத்**
> **திடம்நீ அருள்செய்தாய், எங்கள் – உடைமைகளும்**
> **இன்பங்களும் எல்லாம் ஈந்தாய்நீ யாங்கள்உனக்கு**
> **என்புரிவோம் கைம்மாறு இயம்பு.**
>
> **– பாரதியார் அருளிய விநாயகர் நான்மணி மாலை.**

**பாடலின் பொருள்:** யானை முகத்தவனே! இந்தப் பூமியில் நாங்கள் வாழுமிடம் நீ வழங்கியதே ! எங்கள் செல்வங்களும் சுகங்களும் நீ தந்த வை தாம். நாங்கள் உனக்குப் பிரதிபலனாக என்ன செய்யப் போகிறோம்? உனக்கு நாங்கள் செய்ய வேண்டிய கடமை தான் என்ன? சொல்வாயாக.



# சூக்கும பஞ்சாக்கரம்

**சிவாய நமஎன்று சிந்தித்து இருப்போர்க்கு**
**அபாயம் ஒருநாளும் இல்லை – உபாயம்**
**இதுவே மதியாகும் அல்லாத எல்லாம்**
**விதியே மதியாய் விடும்.**

**– ஔவையார் அருளிய நல்வழி**

**பாடலின் பொருள்:** சிவாயநம என்னும் பஞ்சாட்சர மந்திரத்தை உச்சரித்துத் தியானம் செய்து வாழ்பவர்களுக்கு எந்தவொரு நாளும் துன்பம் இல்லை. துன்பத்தை நீக்கக் கூடிய உபாயமாகிய இத் திருமந்திரமே விதியை வெல்லக் கூடிய மதியாகும். பொதுவாக விதியின் போக்கின்படியே மதியும் சென்றுவிடும். ஆதலால் அவ்வழிகளில் விதியை மதியால் வெல்ல முடியாது. இறைவனைப் பற்றிய சிந்தனை மட்டுமே விதியை வெல்லும் மார்க்கமாகும்.

“சிவயநம” என்ற திருவைந்தெழுத்து சிவன், சிவனருள், ஆன்மா, திரோதம், மலம், மாயை என்பவற்றைக் குறிக்கும் தெய்வச் சொல்.

“சிவயநம” என்பது சூக்கும பஞ்சாக்கரம். “நமசிவாய” என்பது தூல பஞ்சாக்கரம். “நமசிவாய” என்று ஓதினால் இம்மைப் பயன் மட்டுமே கிட்டும். ஆனால் “சிவாயநம” என்று ஓதினால் இம்மை, மறுமை ஆகிய இரண்டு பயன்களும் கிட்டும். அதனால் சிவாயநம என்றே நீ ஓது” என்று உண்மை விளக்கம் என்ற சைவ சித்தாந்த நூல் கூறுகின்றது.

விதி வலியது என்பார்கள். ஆனால் அந்த வலிய விதியினால் வரக்கூடிய அபாயத்தையும் மாற்றக் கூடிய உபாயம் தான் ஐந்தெழுத்து மந்திரமாகிய “சிவாயநம” என்று ஔவையார் கூறுகிறார்.



# கண்ணளித்து அருள்வாய்

**விண்ணாள்வார் அமுதுஉண்ண மிக்கபெரு விடமுண்ட**
**கண்ணாளா கச்சி ஏகம்பனே கடையானேன்**
**எண்ணாத பிழை பொறுத்திங்கு யான்காண எழில்பவள**
**வண்ணா கண்ணளித்து அருளாய் எனவீழ்ந்து வணங்கினார்.**

**– சேக்கிழார் அருளிய பெரிய புராணம்**

**பாடலின் பொருள்:** அமுதம் வேண்டித் தேவர்கள் பாற்கடலைக் கடைந்த போது முதலில் தோன்றிய கொடிய விடத்தை உண்ட உயிர்களுக்குக் கண் போன்றவனே! கச்சி ஏகம்பனே! கடையனேன் ஆகிய நான் அறியாமல் செய்த பிழையைப் பொறுத்து, உன்னுடைய அழகிய பவள வண்ணத்தைக் கண்டு மகிழ்வதற்காக எனக்குக் கண் அளித்து அருள்வாயாக என்று வேண்டி இறைவன் திருவடியில் வீழ்ந்து வணங்கினார் சுந்தரர். அவர் வேண்டுதலுக்கு இணங்கி இறைவன் சுந்தரர்க்கு இடக் கண் பார்வையை அளித்து அருளினார்.

**விளக்கம்:** சுந்தரருக்கு ஏற்கனவே பரவை நாச்சியார் என்று ஒரு மனைவி திருவாரூரில் இருக்கையில், திருவொற்றியூர் என்ற தலத்தில் சங்கிலி நாச்சியாரைத் திருமணம் செய்து கொள்ள விரும்பினார். அப்போது சுந்தரர் தான் திருவொற்றியூர் எல்லையைத் தாண்ட மாட்டேன் என்று சங்கிலி நாச்சியாருக்கு இறைவன் திருமுன்பு சத்தியம் செய்து கொடுத்து இருந்தார். ஆனால் தான் செய்து கொடுத்த சத்தியத்தை மீறிப் பரவையாரைக் காணத் திருவாரூர் செல்லக் கிளம்பினார். ஊர் எல்லையைத் தாண்டியபோது, அவர் தன் இரு கண் பார்வையையும் இழந்தார். பின்னர் பல தலங்களையும் வழிபட்டு வந்தவர் காஞ்சி மாநகரம்வந்தடைந்தார். அங்கு எழுந்தருளியிருக்கும் ஏகாம்பரநாதரை வேண்டினார். இறைவரும் சுந்தர ருக்கு இடது கண் பார்வையைத் தந்து அருளினார். இடது கண் பார்வை கிடைத்த மகிழ்ச்சியில் இறைவனின் கருணையை வியந்து பாடிய பதிகம் தான். பதிகம்.



# வான்புகழ் நின்றது

**என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்**
**ஒன்று காதலித்து உள்ளமும் ஓங்கிட**
**மன்று ளார்அடி யார்அவர் வான்புகழ்**
**நின்றது எங்கும் நிலவி உலகெலாம்.**
**– சேக்கிழார் அருளிய பெரிய புராணம்**

**பாடலின் பொருள்:** எக்காலத்தும் எவ்விடத்தும் சிவபெருமானிடத்துக் கொண்ட இன்பம் பெருகும் இயல்போடு, ஏகனாகிய அப்பெருமானை ஒன்றுபட்ட உள்ளத்தோடு பக்தி செலுத்தி, அதனால் அவ்வுயிர் தானும் மேன்மேலும் சிறந்து, திருவருள் இன்பத்தில் திளைக்குமாறு தில்லைச் சிற்றம்பலத்தில் திருக்கூத்து இயற்றிவரும் பெருமானுடையவும், அப்பெருமானின் அடியாருடையவும் ஆன பெருமைகளைக் கூறும் இந்நூல் (பெரிய புராணம்) உலகெலாம் நிலவி நிலைபெற்று விளங்கும் என்பதாம்.

அநபாய சோழ மன்னன் வேண்டுகோளுக்கு இணங்க, சேக்கிழார் அடியார்களின் வரலாற்றை யெல்லாம் தொகுத்து ஒரு நூலாகப் பாட விரும்பினார். நூலை எப்படித் தொடங்குவது என்ற மயக்கத்துடன் நடராஜப் பெருமானின் அருள் வேண்டி நின்றபோது, இறைவனே அசரீரியாக வந்து "உலகெலாம்" என அடி எடுத்துக் கொடுத்தாராம். அதையே நூலின் தொடக்கமாகக் கொண்டு, "உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்" என்று சிவபெருமானை வாழ்த்திப் பெரிய புராணத்தைத் தொடங்குகிறார். "உலகெலாம்" என்ற சொல்லை முதலாகக் கொண்டு தொடங்கிய திருப்பணியை "உலகெலாம்" என்ற சொல்லால் நிறைவு செய்தார். மன்றுளார் அம்பலத்தாடுவான். ஓங்கிட – ஓங்குதல் – ஞானம் பெறும் வழியில் நிற்றல்.



# அலகில் சோதியன்



**உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்**
**நிலவு உலாவிய நீர்மலி வேணியன்**
**அலகில் சோதியன் அம்பலத்து ஆடுவான்**
**மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.**

**– சேக்கிழார் பாடிய பெரிய புராணத்தின் கடவுள் வாழ்த்துப் பாடல்**

**பாடலின் பொருள்:** சேக்கிழார் பெரிய புராணத்தைப் பாடத் தொடங்கியபோது சிவபெருமானே “உலகெலாம்” என அடி யெடுத்துக் கொடுக்க , சேக்கிழார் பாடியதாக வரலாறு.

உலகத்து உயிர்கள் எல்லாம் தம் அறிவால் உணர்வதற்கும், மொழியினால் ஓதுவதற்கும் அரியவன்.(வாக்கு மனங்களுக்கு எட்டாதவன்) ஆனாலும் தன்னிடம் அடைக்கலம் கேட்டு வந்தவர்களைக் காக்கும் பெருங்கருணை யுடையவனாய் இருக்கிறான் .தன்னிடம் தஞ்சம் புகுந்த பிறைச் சந்திரனைத் தன் திருச்சடையில் சூடிக் கொண்டவன்.

பிரவாகமாக வந்த கங்கையின் ஆணவத்தை அடக்கித் தன் முடியில் சூடிக் கொண்டவன். (உயிர்களின் ஆவண மலத்தை அழிப்பவன் ) பிரம்மனும் திருமாலும் சிவபெருமானின் அடி முடி காண முயன்றபோது வானளாவ ஒளிப் பிழம்பாய் நின்றவன். (அலகில் சோதியன்).

இப்படி அரியவனாயும், வேணியனாயும் , சோதியனாயும் பெருமையை உடைய கூத்தபெருமான் அடியார்கள் எளிமையாகக் காணும் வகையில் தில்லைச் சிற்றம்பலத்தே ஆனந்த நடனம் ஆடுகின்றவனாகவும் இருப்பவன்.

அன்பர்கள் உள்ளத்தில் மலர்ந்து நிற்கின்ற சிலம்பு அணிந்த அவன் திருவடிகளை வாழ்த்தி வணங்குவோம். இப்பாடலில் இறைவனின் நேர்எதிர் இயல்புகள் கூறப்படுகின்றன .

உருவம் என்று ஒன்று இல்லாத வனாகவும் , அதே சமயம் சந்திரனையும், கங்கையையும் தன் முடியில் சூடியவனாகவும் இருக்கிறான்.

அளவிட முடியாத சோதிப் பிழம்பாக இருப்பவன், அம்பலத்தில் எப்போதும் ஆடுபவனாகவும் இருக்கிறான்.

# நெஞ்சகமே கோயில்

**நெஞ்சகமே கோயில் நினைவே சுகந்தம் அன்பே**
**மஞ்சனநீர் பூசை கொள்ள வாராய் பராபரமே.**
**– தாயுமானவர் பராபரக் கண்ணி**

**பாடலின் பொருள்:** நாம் கடவுளுக்குச் செய்யும் பூசைகள் அகப்பூசை, புறப்பூசை என இரு வகைப்படும். பிறர் பார்க்கும் வகையில் ஆடம்பரமாக அபிடேக ஆராதனைகள் செய்வது புறப்பூசை. நெஞ்சம் நெகிழ்ந்து நெகிழ்ந்து நினைப்பவரது மனத்துள்ளே புகுந்து நிற்கும் பொன் போலும் சடையையுடைய இறைவன் பொய்யும் புரட்டும் வஞ்சனையும் மிக்கோர் பூசையில் இடுகின்ற பூவையும் நீரையும் பார்த்து அவர்கள் அறியாமையை நினைத்து வெட்கப்பட்டு நிற்பார் என்று புறப்பூசை பற்றி அப்பர் பெருமான் பின்வருமாறு பாடுகிறார்.

“நெக்கு நெக்கு நினைப்பவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும் பொன்னார் சடைப்புண்ணியன்
பொக்கம் மிக்கவர் பூவும் நீரும் கண்டு
நக்கு நிற்கும் அவர்தம்மை நாணியே”

அகப்பூசை என்பது கடவுளை மனதில் நிறுத்தி நமக்குள் நாமே பூசை செய்வது. இந்தப் பூசையை யாரும் பார்க்க முடியாது. எந்தவொரு பொருட்செலவும் கிடையாது. நேரம் காலம் பார்க்காமல் எப்போது வேண்டுமானாலும் செய்யலாம். மனிதர் ஒவ்வொரு வரும் தம் மனதைக் கோயிலாகவும் அவரது எண்ணங்களை அபிடேகத்திற்ககுப் பயன்படுத்தும் நறுமணப் பொருள்களாகவும் , இறைவன்பால் உள்ள அன்பே அபிடேக நீராகவும் உருவகித்து இறைவனைத் தியானிக்கும்படி தாயுமானவர் கூறுகிறார்.

63 நாயன்மார்களுள் ஒருவரான பூசலார் நாயனார் சிவபெருமானுக்குப் பெரியதொரு கோயிலைக் கட்ட விரும்பினார். ஆனால் அதற்குத் தேவையான பொருள் வசதி அவரிடம் இல்லை. அதனால் அவர் தம் மனதுக்குள்ளேயே தாம் விரும்பியவாறே ஒரு பெரிய கோயிலை நிர்மானித்தார் என்று பெரியபுராணம் கூறுகிறது.



# வேல் மாறல்

**சினத்தவுணர் எதிர்த்தரண களத்தில்வெகு குறைத்தலைகள் சிரித்தெயிறு கடித்துவிழி விழித்தலற மோதும்.**

**– வேல் வகுப்பு, வேல் மாறல்**

**பாடலின் பொருள்:**

கோபம் கொண்ட அசுரர்கள் போர் செய்த போர்க்களத்தில், அவர்களது உடலற்ற தலைகளைப் பார்த்துச் சிரிக்கவும், பற்களை நறநற வென்று கடிக்கவும்,கண்களை உருட்டி விழிக்கவும், வாய் விட்டு அலறும்படியும், அவர்களைத் தாக்கக் கூடியது தணிகைக் குகனது வேல்.



# வேலும் மயிலும் துணை

> **திசைக்கரியை முதற்குலிசன் அறுத்தசிறை முளைத்ததென முகட்டிடை பறக்கவற விசைத்ததிர வோடும்.**
>
> **– வேல் வகுப்பு, வேல் மாறல்**

**பாடலின் பொருள்:** முன்பொரு சமயம் குலிசாயுதத்தை உடைய இந்திரன் எட்டுத் திசைகளிலும் உள்ள மலைகளிலிருந்து அறுத்துத் தள்ளிய இறக்கைகள் மீண்டும் அம்மலைகளிடம் முளைத்துவிட்டனவோ என்று ஐயுறும்படி, அண்டத்தின் உச்சியிலே அளவற்ற வேகத்துடன், எல்லா உலகங்களும் அதிர்ச்சியுற்று நடுங்கும்படி தணிகைக் குகனது வேல் விரைந்து செல்லும் ஆற்றல் வாய்ந்தது.

(பி.கு) பண்டைக் காலத்தில் மலைகள் எல்லாம் சிறகுகளுடன் பறந்து உலகோருக்குக் கேடு விளைத்து வந்தனவாம். இதை யறிந்த இந்திரன் தன் வச்சிராயுதத்தால் மலைகளின் சிறகுகளை அறுத்து எறிந்தானாம். அன்று முதல் மலைகள் அனைத்தும் நிலத்தில் அழுந்திப் பூதரம்(மலை) எனப் பெயர் பெற்றனவாம்.

முருகனுடைய வேற்படை அண்ட உச்சியில் அதிவேகத்தோடு பறந்தபோது, உலகெல்லாம் கிடுகிடு என அதிர்ந்தனவாம். மீண்டும் மலைகளுக்குச் சிறகுகள் முளைத்தனவோ என்று உலகோர் அஞ்சினராம்.



# வேலும் மயிலும் துணை

**திரைக்கடலை உடைத்துநிறை புனற்கடிது குடித்துடையும் உடைப்படைய அடைத்து உதிர(ம்) நிறைத்துவிளையாடும்.**

**– வேல் வகுப்பு, வேல் மாறல்**

**பாடலின் பொருள்:**

தணிகைக் குகனது வேல், அலைவீசும் கடலை உடைப்புக் கொள்ளச் செய்தும் , நிறைந்துள்ள நீரை வேகமாகக் குடித்தும் , உடைத்த உடைப்புகளை அடைத்து, அங்கு அசுரர்களின் இரத்தத்தை நிரப்பியும் விளையாடும்.

திரைக்கடல்
அலை வீசும் கடல்.
நிறைபுனல் – நிறைந்துள்ள நீர்.
கடிது – விரைவாக.
உதிரம் – இரத்தம்.



# வேலும் மயிலும் துணை

**சலத்துவரும் அரக்கருடல் கொழுத்துவளர்
பெருத்தகுடர் சிவத்ததொடை யெனச்சிகையில்
விருப்பமொடு சூடும்.**

**– வேல் வகுப்பு, வேல் மாறல்**

**பாடலின் பொருள்:** போரில் மிகுந்த கோபத்துடன் வரும் அரக்கர்களின் உடம்பில், கண்டதையும் தின்று கொழுத்து வளர்ந்துள்ள பெரிய குடல்களை எடுத்துச் சிவந்த பூமாலை போலத் தன் உச்சியில் சூடிக் கொள்ளுமாம் குகனது வேல்.
சலத்து வரும் கோபத்துடன் வருகின்ற.

பெருத்த குடர்
பெருத்திருக்கின்ற குடல்களை .
தொடை – மாலை.
சிகையில் – வேலின் உச்சியில்.
அசுரரை அழிப்பது வேலுக்கு மகிழ்ச்சி தரும் செயல்.



# வேலும் மயிலும் துணை

> **தனித்துவழி நடக்கும்எனது இடத்தும் ஒரு வலத்தும் இரு புறத்தும்அருகு அடுத்திரவு பகல்துணைய தாகும்.**
>
> **– வேல் வகுப்பு, வேல் மாறல்**

**பாடலின் பொருள்:** நான் துணையில்லாமல் தன்னந்தனியாய் நடந்து செல்லும்போது, எனது இடது பக்கத்திலும், ஒப்பற்ற வலது பக்கத்திலும், முன்னும் பின்னுமான இரண்டு பக்கங்களிலும் ஆக நாற்புறத்தும் அருகில் நெருங்கி வந்து இரவும் பகலும் எனக்குத் துணையாக இருந்து என்னைக் காப்பாற்றுவதும் தணிகைக் குகனது வேலே.

இடத்தும் – இடது புறத்திலும் .
வலத்தும் – வலது புறத்திலும்.
இரு புறத்தும் – முன்னும் பின்னுமான இரண்டு பக்கங்களிலும்.
அருகு அடுத்து – பக்கத்தில் இருந்து.



# வேலும் மயிலும் துணை

**தலத்திலுள கணத்தொகுதிகளிப்பின்**
**உணவு அழைப்பதென மலர்க்**
**கமல கரத்தின்முனை விதிர்க்கவளை வாகும்.**
**– வேல் வகுப்பு, வேல் மாறல்**

**பாடலின் பொருள்:** வேல் சகல சித்திகளும் கொண்டுள்ளபடியால், பூமியில் உள்ள சகல உயிர்க் கூட்டங்களும், சிவ கணங்களும் மகிழ்ச்சியாக உண்பதற்கு வருக என அழைப்பது போல் குகனின் மலர்ந்த தாமரை போன்ற திருக்கரத்தின் நுனியை அசைக்கும் போதெல்லாம் அக் கரத்தில் ஏந்தியுள்ள வேலாயுதமும் உடன் வளைந்து உணவுப் பொருள் யாவற்றையும் சுற்றி வளைத்துக் கொண்டு வந்து சேர்க்கும்காட்டுமாம். இத்தகைய சிறப்பினை உடையது தணிகைக் குகனது வேல்.

தலத்தில் உள – பூமியில் உள்ள.
கணத்தொகுதி – உயிர்க் கூட்டங்கள்.
மலர்க் கமலம் – தாமரை மலர் .
முனை விதிர்க்க – கைநுனியை அசைத்த மாத்திரத்தில் .
வளைவு ஆகும் – உணவுப் பொருள் யாவற்றையும் சுற்றி வளைத்துக் கொண்டு வந்து சேர்த்து விடும் ஆற்றல் படைத்தது குகனது வேல் .
திருத்தம் – காட்டுமாம் என்பதைத் தவிர்க்கவும்.



# வேலும் மயிலும் துணை

> **தருக்கிநமன் முருக்கவரின் எருக்குமதி**
> **தரித்தமுடி படைத்தவிறல் படைத்தஇறை**
> **கழற்குநிக ராகும்.**
> **– வேல் வகுப்பு, வேல் மாறல்**

**பாடலின் பொருள்:** எமன் அகங்காரத்துடன் கொல்ல வருவானானால், அப்போது எருக்க மலரையும், திங்களையும் (பிறை நிலவையும்) சூடியுள்ள ஜடாமுடியை உடையவரும், வீரம் நிறைந்தவருமான சிவபெருமானது திருவடிக்கு ஒப்பாக நின்று உதவுவதும் குகனது வேலே. முழுக்க வரின் – அழிக்க வந்தால்.

எருக்கு – எருக்கு மலர்.
மதி – சந்திரன்.
விறல் – வெற்றி, வீரம்.
இறைகழற்கு– சிவபெருமானின் திருவடிக்கு
நிகராகும் – ஒப்பாகும்.
தணிகைக் குகனது வேல் சிவபெருமானின் திருவடிக்கும், சிவாயநம என்ற ஐந்தெழுத்து மந்திரத்துக்கும் ஒப்பாகும்.



# வேலும் மயிலும் துணை

**சொலற்கரிய திருப்புகழை உரைத்தவரை**
**அடுத்தபகை அறுத்தெறிய உறுக்கிஎழும்**
**அறத்தைநிலை காணும்.**

**– வேல் வகுப்பு, வேல் மாறல்**

**பாடலின் பொருள்:** சொல்லில் அடங்காத பெருமையைக் கொண்ட திருப்புகழை எடுத்து உரைப்பவர்களுக்கு நெருங்கி வரும் பகைகளை வேருடன் அறுத்து எறிவதற்குக் கோபத்துடன் கிளம்பும். அறத்தை நிலைநிறுத்த உதவி செய்வதும் தணிகைக் குகனது வேலே.

அடுத்தபகை – நேரிடும் பகைகளை.
உறுக்கி எழும் – கோபித்துக் கிளம்பும்.



# வேலும் மயிலும் துணை

> துதிக்கும்அடி யவர்க்கொருவர் கெடுக்கஇடர்
> நினைக்கின்அவர் குலத்தைமுதல்
> அறக்களையும் எனக்கோர் துணை யாகும்.
>
> – வேல் வகுப்பு, வேல் மாறல்

**பாடலின் பொருள்:** தன்னைப் போற்றி வணங்கும் அடியவர்களுக்கு வேறு யாரேனும் ஒருவர் ஏதேனும் ஒரு வகையில் துன்பம் செய்ய மனதில் நினைத்தாலும், அவர் வம்சத்தையே வேரோடு அழித்துக்களைந்து விடுவதும், அடியேனுக்கு ஓர் ஒப்பற்ற துணையாகவும் இருந்து உதவி புரிவதும் தணிகைக் குகனது வேலே ஆகும்.

இடர் – துன்பம்.
முதல்அற – குலத்தை வேரோடு.
ஓர் துணை – ஒப்பற்ற துணை.



# வேலும் மயிலும் துணை

**சுடர்ப்பரிதி ஒளிப்பநில வொழுக்குமதி**
**ஒளிப்பஅலை அடக்குதழல் ஒளிப்பவொளிர்**
**ஒளிப்பிரபை வீசும் .**

**– வேல் வகுப்பு, வேல் மாறல்**

**பாடலின் பொருள்:** குகனுடைய வேலின் பேரொளியைக் கண்டு சூரியனும், சந்திரனும், இந்த வேலின் ஒளியின் முன் நம் ஒளி எம்மாத்திரம் என்று அஞ்சி ஓடி ஒளிந்து கொள்ளுமாம். கடல் அலையைக் கூடக் கரையைக் கடக்காமல் அடக்கி ஆளும் ஆற்றல் பெற்ற வடவா முகாக்கினியும் கூடக் குகனது வேலின் ஒளியின் முன்னால் நிற்க மாட்டாமல் ஒளிந்து மறையுமாம். அத்தகைய பேரொளியை வீசக் கூடியது தணிகைக் குகனது வேல்.

சுடர்ப்பரிதி – ஒளி வீசும் சூரியன்.
ஒழுக்கும் – வீசும்.
அலை அடக்குதழல் – வடவாமுகாக்கினி.
ஒளிப்பிரபை – பேரொளி.



# வேலும் மயிலும் துணை

**சுரர்க்குமுநி வரர்க்குமக பதிக்கும் விதி**
**தனக்கும்அரி தனக்குநரர் தமக்குமுறும்**
**இடுக்கண்வினை சாடும்.**

**– வேல் வகுப்பு, வேல் மாறல்**

**பாடலின் பொருள்:** தேவர்களுக்கும், முனிவர்களுக்கும், இந்திரனுக்கும், பிரமனுக்கும், திருமாலுக்கும், மனிதர்களுக்கும் நேரிடும் துன்பத்தையும் பூர்வ ஜென்ம வினைகளையும் அழிக்க வல்லது திருத்தணிகைக் குகனது வேல்.

சுரர் – தேவர்.
மகபதி – இந்திரன்.
விதிதனக்கும் – பிரமனுக்கும்.
அரி – திருமால்.
நரர் – மனிதர்கள்.
வினை – பூர்வ கர்மா.
சாடும் – அழிக்கும்.



# வேலும் மயிலும் துணை

> **பசித்தலகை முசித்தழுது முறைப்படுதல்**
> **ஒழித்தவுணர் உரத்துதிர நிணத்தசைகள்**
> **புசிக்கவருள் நேரும்.**
>
> **– வேல் வகுப்பு, வேல் மாறல்**

**பாடலின் பொருள்:** பசியினால் வருந்திய பேய்க்கூட்டங்கள் உடல் மெலிந்து, உணவு வேண்டும் என்று அழுது முறையிடாதபடி செய்து, முருகவேள் அசுரர்களை வெட்டிப்பலியிட்டு நிரம்பப் பிண உணவுகளைப் பேய்க் கூட்டங்கள் உண்ணும்படி அருள் பாலித்தது தணிகைக் குகனது வேலே.

அலகை – பேய்க்கூட்டங்கள்.
முறைப்படுதல் ஒழித்து – முறையிடாதவாறு செய்து.
அவுணர் – அசுரர்.
உரத்து உதிரம் – மார்பிலிருந்து வரும் இரத்தம்.
நிணம் – கொழுப்பு.



# வேலும் மயிலும் துணை

**பழுத்தமுது தமிழ்ப் பலகை யிருக்குமொரு கவிப்புலவன் இசைக்குருகி வரைக்குகையை இடித்துவழி காணும்.**

**– வேல் வகுப்பு, வேல் மாறல்**

**பாடலின் பொருள்:** செம்மை நிறைந்ததும், பழமையானதுமான தமிழ்ச் சங்கப் பலகையில் வீற்றிருந்த நக்கீரர் பாடிய இசைப்பாடலாகிய திருமுருகாற்றுப் படைக்கு மனமுருகி, அவர் அடைபட்டிருந்த மலைக் குகையை இடித்துத் தள்ளி, அவர் குகையிலிருந்து வெளியேற வழி விட்டதும் தணிகைக் குகனது வேலே.

கவிப்புலவன் இசை – நக்கீரர் இசையுடன் பாடிய வேத மொழியாகிய திருமுருகாற்றுப்படை.



# வேலும் மயிலும் துணை

**பனைக்கைமுக படக்கரட மதத்தவள**
**கசக்கடவுள் பதத்திடுநி களத்துமுளை**
**தெறிக்கவர மாகும்.**

**– வேல் வகுப்பு, வேல் மாறல்**

**பாடலின் பொருள்:**

பனைக்கை – யானையின் துதிக்கை.
முகபடம் – முக அலங்காரத் துணி(படாம்).
கரடம் – மதநீர்.
தவள கசக்கடவுள் – ஐராவதம் என்னும் வெள்ளை யானையை உடைய தேவேந்திரனுடைய
பதத்துஇடு – கால்களில் சூரனால் இடப்பட்ட
நிகளத்து முளை– விலங்கு கட்டப்பட்டிருந்த முளை
தெறிக்க அரமாகும் – பிளந்து எறியக்கூடிய அரம் அல்லது இரம்பம் என்ற கருவியாகும்.

குகனது கை வேல், – பனைமரம் போன்ற நீண்ட துதிக்கையைக் கொண்டதும், முக அலங்காரத் துணியை அணிந்துள்ளதும், மதநீரைக் கொண்டதும், ஐராவதம் என்ற வெள்ளை யானையை உடைய தேவேந்திரனுடைய கால்களில் சூரனால் இடப்பட்ட கால்விலங்கை அறுத்தெறிந்த அரம் ஆகும். வரம் கொடுப்பதும் ஆகும்.



# வேலும் மயிலும் துணை

> **பருத்தமுலை சிறுத்தஇடை வெளுத்தநகை**
> **கருத்தகுழல் சிவத்தஇதழ் மறச்சிறுமி**
> **விழிக்குநிக ராகும்.**
>
> **– வேல் வகுப்பு, வேல் மாறல்**

**பாடலின் பொருள்:** வெளுத்திருக்கும் பற்களையும், கருத்த கூந்தலையும், சிவந்திருக்கும் வாய் இதழ்களையும் கொண்டவளான வேடர் குலச் சிறுமியாகிய வள்ளியம்மையின் கண்களுக்கு ஒப்பானது தணிகைக் குகனது வேல். வள்ளிப் பிராட்டியின் கண் போலக் கூர்மையானதாய் நீண்டு ஒளிரும் வேலானது வள்ளிப்பிராட்டியின் கடைக்கண் பார்வையால் பயன்கள் யாவற்றையும் தரும்.

பட (படைத்தல்), திதி (காத்தல்), சங்காரம் (ஒடுக்குதல்), திரோதானம் (மறைத்தல்), அநுக்கிரகம் (அருளல்) ஆகிய ஐந்து சக்திகள் உடையவள் வள்ளி.

அவ்வாறே வேலுக்கும் பஞ்ச கிருத்திய சக்திகள் உண்டு. கண்ணாடியில் தடம் கண்ட வேல் (தோற்றம்) நக்கீரரைக் காத்தது (காத்தல்), சூரசம்மாரம் செய்தது (அழித்தல்), அடியாரிடம் வெம்மையை மறைத்தல், பகைவரிடம் தண்மையை மறைத்தல், குமரகுருபரர், அருணகிரிநாதர் நாவில் வேலால் எழுதி அருளல் (அருளல்) ஆகியவை வேலின் பஞ்ச கிருத்திய சக்திகள். ஆகவே வள்ளியின் கடைக்கண் பார்வையால் கிடைக்கும் அநுக்கிரகங்கள் எல்லாம் முருகனின் வேலாலும் கிடைக்கும் என்பதாம்.



# வேலும் மயிலும் துணை

> **திருத்தணியில் உதித்து அருளும் ஒருத்தன்மலை**
> **விருத்தன்எனது உளத்தில்உறை**
> **கருத்தன்மயில் நடத்துகுகன் வேலே.**
>
> **– வள்ளிமலை சச்சிதானந்த சுவாமிகள் அருளிய “வேல்மாறல்”**

அருணகிரிநாதர் பாடிய திருப்புகழில் “வேல் வகுப்பு” என்ற பகுதி முருகனது வேலின் பெருமையைக் கூறுவது. 16 பாடல்களில் வேலின் பெருமையைக் கூறுகிறார். இந்த 16பாடல்களையும் முன்னும் பின்னும், மேலும் கீழுமாக மாற்றி யமைத்து மந்திர உச்சாடனம் செய்யும் வகையில் வள்ளிமலை சச்சிதானந்த சுவாமிகள் 64 பாடல்களாக வழங்கியுள்ளார்கள். அந்தப் பாடல்க ளின் பொருள் புரிந்து பாராயணம் செய்வது சிறப்பாக இருக்கும் என்பதால் அந்தப் பதினாறு பாடல்களையும் தினம் ஒன்றாகப் பார்ப்போம்.

**பாடலின் பொருள்:** திருத்தணிகை மலையில் தோன்றி அருள் புரிபவனாகிய ஒப்பற்றவனும், மலைகிழவோன் (விருத்தன்) எனப் பெயர் பெற்றவனும், என் உள்ளத்தில் குடிகொண்டிருக்கும் தலைவனும், மயிலை வாகனமாக நடத்துபவனுமாகிய குகப்பெருமானின் (முருகனின்) வேலாயுதமே பின்வரும் சிறப்புக் குணங்கள் வாய்ந்ததாகும். அந்தச் சிறப்புக் குணங்கள் யாவை? அடுத்து வரும் பதிவுகளில் பார்ப்போம்.

ஒருத்தன் – ஒப்பற்றவன் .
கருத்தன் – திருவுள்ளம் கொண்டவன். (அல்லது கர்த்தா – தலைவன்)



குறிஞ்சி முத்தமிழ்ச் சங்கம் & கல்விக்கூடம்
Kurinji Muthamizh Sangam & Academy
Colorado, U.S.A.

சமூக ஊடக பக்கங்களில் எங்களை பின்தொடர
www.muthamizhsangam.org

# தோத்திர மாலை!

80 வயதில் நான் தனியாக வசிப்பதனால், “நான் நலமாக இருக்கிறேன்” என்பதைத் தெரிவிக்கும் விதமாக என் நெருங்கிய உறவினர்களுக்கும், ஒரு சில நண்பர்களுக்கும் ஒவ்வொரு நாள் காலையும் “இனிய காலை வணக்கம்” பதிவிட முடிவு செய்தேன். ஆனால் வெறுமனே “இனிய காலை வணக்கம்” என்று எழுதுவதற்குப் பதிலாகத் தேவாரத் திருவாசகத் துதிப்பாடல் ஒன்றை எழுதிக் காலை வணக்கம் தெரிவிக்கலாம் என்று தோன்றியது. அப்படிச் செய்யும்போது எனக்கும் காலையில் எழுந்ததும் ஒரு தோத்திரப் பாடலோடு நாளைத் தொடங்கிய திருப்தி ஏற்பட்டது. நிச்சயமாக அது நாள் முழுவதற்கும் எனக்கு ஒரு மனோபலத்தைக் கொடுப்பதை நான் உணர முடிந்தது. தொடக்கத்தில் சில நாட்கள் பாடல் மட்டுமே எழுதி அனுப்பிக் கொண்டிருந்தேன். அதைப் படித்த சிலர் பாடல்களுக்குப் பொருள் புரிந்து படித்தால் நன்றாக இருக்கும் என்று விருப்பம் தெரிவித்தனர். அதன் பிறகு தான் பொருள் விளக்கத்தோடு தோத்திரப் பாடல்களைப் பதிவிடத் தொடங்கினேன்.

அப்படி நான் எழுதிய பதிவுகளின் தொகுப்பு இந்த “தோத்திர மாலை” புத்தகம்! உங்களுக்கும் இது பயனுள்ளதாக இருக்கும் என நம்புகிறேன்!

இந்த புத்தகத்தினை வெளியிட உறுதுணையாக இருந்த என் மாணவ நண்பர், அமெரிக்கா, கொலராடோ மாநிலத்தில் உள்ள குறிஞ்சி முத்தமிழ்ச் சங்கம் கல்விக்கூடத்தின் நிறுவனர் திரு. சுகுமாறன் மாரியப்பன் அவர்களுக்கு என் அன்பான நன்றிகள்!

வாழ்க வளமுடன்!

நூலாசிரியர்:
**திருமதி. ஞானப்பூங்கோதை சுப்பிரமணியன்**
திருவண்ணாமலை மாவட்டம்.